வாரப் பதிப்பு விலை சதம் 23

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 ஆவணி திங்கள் 1-ம் நாள் (16—8—1964) ஞாயிற்றுக்கிழமை ரபியுல்.ஆகிர் 7 | இதழ் 12

# தமிழகப் பத்திரிகை, சினிமா தடைசெய்யப் படலாம்

## சர்வாதிகாரம் ஏற்பட அறிகுறி

இந்நாட்டில் ஒரு சர்வாதிகார அரசாங்கம் வெகுவிரைவில் ஏற்படப் போகிறது என்பதையே பத்திரிகைச் சபையின் இடைக்கால அறிக்கையிலிருந்து புலனாகிறது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். அத்தோடு தமிழ் பேசும் மக்களின் கலை கலாச்சாரம் முதலியவற்றைப் பாதிக்கும் வகையில் தமிழகத்துப் பத்திரிகைகளும், தமிழ்த் திரைப்படங்களும் தடுக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

செய்திப் பத்திரிகைகளனைத்தையும் அரசாங்கம் சுவீகரிக்க விருப்பதைக் கொண்டு, வெகு விரைவில் இந்நாட்டில் ஒரு சர்வாதிகார அரசு நிறுவப்பட ஏதுக்கள் இருப்பதாக சில அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஜனநாயக ஆட்சியைக் கழித்துவிட்டு வெகுவிரைவில் சர்வாதிகார அரசு ஏற்படுவதற்கான அந்தரங்கத் திட்டங்களை அரசாங்கம் வகுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. சர்வாதிகார ஆட்சி ஏற்படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுவதைச் செய்தித்தாள்கள் கண்டிக்காமலும், அதைப்பற்றி மக்களிடத்தில் பிரச்சாரம் செய்யாமலுமிருக்கவே முன்னேற்பாடாகப் பத்திரிகைச் சுதந்திரம் பறிமுதலாக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டிலிருந்து சர்வாதிகாரம் பற்றி அடிக்கடி செய்திகள் வெளியாகி வந்ததை அனைவரும் அறிவார்கள். சுதந்திரனும் பல தடவைகளில் பல அந்தரங்கச் செய்திகளை வெளியிட்டிருந்தது.

சர்வாதிகார ஆட்சி முறைக்கான ஒழுங்குகள் நடைபெறுவது அடிக்கடி பத்திரிகைகளில் அம்பலப்படுத்தப்பட்டு வந்தமையினால் முயற்சிகள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டனவென்றும், பத்திரிகை வாய்ப் பூட்டுக்குள்ளாக்கிய பின்னரே மேற்கொண்டு ஆவன செய்வதாக முடிவு செய்யப்பட்டிருக்கலாமென்று விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இலங்கைப் பத்திரிகைகள் கட்டுப்படுத்தப்படுவதுடன், வெளிநாட்டுப் பத்திரிகைகளையும் கட்டுப்படுத்தவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளதாம். குறிப்பாகத் தமிழகத்திலிருந்து பத்திரிகைகள், புத்தகங்கள் இங்கு வருவது கடுமையாகக் கண்காணிக்கப்படுத்தவும் கூடும். எந்தவிதமான தமிழ்ப் பத்திரிகைகளும் இலங்கைக்குள் கொண்டுவரப்படுவது சட்டவிரோதமாக்கப் படவும் இடமுண்டு என்று ஒரு அரசியல்வாதி நமது நிருபரிடம் கூறினார்.

தமிழ்ச்சினிமாப்படங்களை இங்கு திரையிடுவதனால், இந்நாட்டு மக்களின் கலாச்சாரம் பாதிக்கப்படுவதாகவும், அத்துடன் இந்நாட்டின் பொருள் வெளிநாடு போவதைத் தடைசெய்யப் போவதாகவும் சாக்கிட்டுத் தமிழகத்திலிருந்து இங்கு வரும் தமிழ்த் திரைப்படங்களுக்குத் தடை விதிக்கப் போவதாகவும் கூறப்படுகிறது. இதன் அடிப்படைக் காரணத்தையிட்டு மேற்படி அரசியல் பிரமுகர் கருத்து வெளியிடும்போது:

'தமிழ் பேசும் மக்கள் கலை, கலாச்சாரம், கல்வி முதலியவற்றால் தமிழகத்தாருடன் உறவு கொண்டிருப்பதால் சிங்கள மொழியையும், சிங்களக் கலாச்சாரத்தையும் தமிழ் பேசுவோர் புறக்கணித்து வருகின்றனர். தமிழ் பேசுவோருக்குச் சகல துறைகளிலும் உதவி புரியும் தமிழ்ப் படங்களையும், தமிழ்ப் பத்திரிகைகளையும் தடை செய்து விட்டால், வேறு வழியின்றித் தமிழ் பேசுவோர் அனைவரும் சிங்களத்தை விரும்பி ஏற்கவேண்டிய நிலை ஏற்படும் என்பதை அரசு அவதானித்தே இந் நடவடிக்கையில் தீவிர முயற்சி எடுத்திருக்கிறது' என்று கூறினார்.

# பொலீஸ்-இராணுவத்தில் வகுப்புத் துவேஷம்?

## மேலதிகாரிகளும் உடந்தை

இராணுவம், பொலீஸ் ஆகிய இரு துறைகளையும் பௌத்த சிங்கள மயமாக்கிவிட சில தீவிர வகுப்புவாத இயக்கங்கள் முயற்சி செய்து வருவதாகக் கூறப்படுகிறது. சில உயர்தர அதிகாரிகளும் இதற்கு உடந்தையாகவிருப்பதாகவும் தெரியவருகிறது.

இராணுவம் பொலீஸ் ஆகியவற்றின் உயர் பதவிகளுக்கு இனிமேல் பௌத்த சிங்களவரல்லாத எவரும் நியமிக்கப்படமாட்டார்கள் என்று அரசியல் வட்டாரங்களில் வதந்தி அடிபடுகிறது. பௌத்த சிங்களவரல்லாத எவரும் அவர்கள் சிங்களத்தில் போதிய தேர்ச்சி பெற்றிருப்பினும் கூட, பதவியுயர்வோ, மேல்பதவிகளோ கொடுக்கக் கூடாது என்ற பிரசாரத்தை சில மத-இன வெறியர்கள் தொடங்கியிருக்கின்றனர்.

இராணுவம், பொலீஸ் ஆகிய துறைகளில் கீழ் உத்தியோகங்களுக்குத் தானும் பௌத்த சிங்களவரல்லாத எவரையும் சேர்க்கக் கூடாதென்றும் மேற்படி இனவெறி இயக்கங்கள் கோரியுள்ளனவாம். இவ்விரு துறைகளிலும் பூரணமாகப் பௌத்த சிங்களவர்களே இருக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

## இ. த. அ. க. கிளைக் கூட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கொழும்புக் கிளையின் பொதுக் கூட்டமொன்று இத்திங்கள் 17ம் திகதி பிற்பகல் 5 மணியளவில் கொழும்பு, 16 அல்பிறட் கவுஸ் தோட்டத்திலுள்ள கட்சிப் பணிமனையில் நடைபெறும்.

திருமலையில் நடைபெறவிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 9வது மாநில மாநாட்டிற்கு கிளையின் சார்பில் செல்லும் பிரதிநிதிகள் பற்றியும் சில முக்கிய விடயங்கள் பற்றியும் ஆராயப்படுமென்று கிளைச் செயலாளர் திரு. சிவலிங்கம் நமது நிருபரிடம் கூறியுள்ளார்.

# பெரிய மைதானத்தில் மாநாட்டு பொதுக் கூட்டம்

## அரசாங்க அதிபரின் உத்தரவு புறக்கணிப்பு

திருகோணமலை பெரியமைதான உரிமை பற்றிய தகராறுகள் ஏற்பட்டுள்ளமையினால் தமது அனுமதியின்றி பொதுக் கூட்டத்துக்கான ஒலிபெருக்கி உத்தரவுச் சிட்டு வழங்கலாகாது என்று அரசாங்க அதிபர் கூறியிருந்தார். நகரசபையிடமே உத்தரவு வாங்கிய மாநாட்டு வரவேற்புக் குழுவினருக்கு எதுவித தடங்கலுமின்றி பொதுக் கூட்டத்துக்கான உத்தரவை பொலீஸ் அளித்துள்ளமையினால் வழமைபோல் பொதுக்கூட்டம் பெரிய மைதானத்திலேயே நடைபெறவிருக்கிறது.

ஆகஸ்ட் 21, 22, 23ம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவிருக்கும் தமிழரசுக்கட்சியின் 9வது மாநில மாநாட்டு வரவேற்புக் குழுவின் தலைவரும், திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. எஸ். எம். மாணிக்கராஜா, மாநாட்டிற்கான இறுதி ஒழுங்குகளைத் தீவிரமாக மேற்கொண்டுள்ளார். சுற்றுப்புறக் கிராமங்களுக்கு அவர் அண்மையில் விஜயம் செய்ததையொட்டி, மாநாட்டுக்கு எதிர்பார்க்கப்படும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட விருந்தாளிகளுக்கு உணவு அளிப்பதற்கென அரிசி, மற்றும் உணவுப் பொருட்கள் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன. அத்துடன், மாநாட்டுக்கு வருவோருக்கு ஒரு முழுநேரச் சாப்பாடு (மதிய உணவு அல்லது இராப் போசனம்) அளிக்கப் பல சங்கங்கள் முன் வந்துள்ளன.

கடந்த வார இறுதியில், வரவேற்புக் குழுவின் முயற்சிகளுக்கு எதிர்பாராத சில வெற்றிகள் கிடைத்துள்ளன. 1956ம் ஆண்டு மாநாட்

(9-ம் பக்கம் பார்க்க)

எஸ். ஏ. பெர்னாண்டோ,
த. பெ. இல. 16, பழைய பஜார்,
நுவரெலியா.

வெட்டப்பட்ட பூக்களுக்கும், மரக்கறி விதைகளுக்கும் தீவிலேயே தலையானவர்.

உங்கள் சேவையில் எப்பொழுதும் எங்கள் அனுபவம்.

பூ வியாபாரத்தில் 22 வருடகால நம்பகமான, சுறுசுறுப்பான சேவை.

குறித்த தவணையில் தருதல், திருப்தி, திறமை—

இவற்றுக்கெனத் தீவு முழுவதும் இணையில்லாப் பெயர் சமைத்து விட்டோம்.

தந்தி : பாத்திமா   போன் : 283



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியின் சிறப்பை உலகறியச் செய்வேன்

## எப்படி எழுத ஆரம்பித்தேன்

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இளம் கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் 'எழிலி' என்னும் சிறு காப்பியத்தைக் கடந்த ஆண்டு வெளியிட்டு எழுத்துலகில் நிலையான இடத்தைப் பிடித்துள்ளார். தமிழ் மரபு பேணி தமிழிலக்கியத்தை அணி செய்ய விரும்பும் இவர் தமிழ் மொழியின் பெருமையை உலக மொழிகளில் ஏற்றி எட்டுத்திக்கும் பரப்பச்செய்வதே தனது நோக்கம் என்று கூறுகிறார். ஒரு சில காலம் 'இந்துசாதனம்' பத்திரிகையில் துணை ஆசிரியராகக் கடமை யாற்றிய இவர் இப்பொழுது பண்டிதப் பரீட்சைக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறார்.



அப்பொழுது திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரியில் நான் எஸ். எஸ். ஸி. வகுப்பிற் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் வகுப்பின் சமயபாட ஆசிரியர் வித்துவான் க. வேந்தனார் அவர்கள். தமிழ் கற்பித்துக் கொண்டிருந்தவர் திரு. சி. முருகவேள் அவர்கள். தமிழ்ப் பற்றும் சுவையுணர்வும் மிக்க இவ்விருவரும் ஆசிரியர்களாக வந்து வாய்த்தமை எனது பெரும் பேறாகும்.

### 'காதலைப் பற்றி எழுதும்'

ஒரு நாள் வேந்தனாரின் சமயபாட நேரம். என்னருகிலிருந்த நண்பன் ஒருவன் கவிதை ஒன்றை என்னிடம் காட்டி "நான் எழுதியது வேந்தனாரிடம் காட்டப் போகிறேன்." என்று கூறிய போது எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. நாங்களும் கவிதை எழுதலாமா? பெரும் பெருங் கவிஞர்களல்லவோ கவிதை எழுதுவார்கள் என்று அவனை வினவினேன். (இவ்விணைக் கொண்டு எனது அன்றைய கவிதையுலகம் பற்றிய கொள்கையைக் கண்டு கொள்ளலாம்)

நண்பன் சிரித்தான். "கவிஞர்ப் பட்டம் பெற்றுக் கொண்டா கவிதை எழுதுவார்கள்?" என்று கேலி பண்ணி விட்டு மெதுவாக 'நீர்கூட எழுதலாம் எழுதிப் பாரும்' என்றான். தயக்கம் பின்தள்ள வியப்பு முன் தள்ள எதைப் பற்றி எழுத வேண்டும் என்றேன். "காதல் பற்றிப் பாடும்! இந்த வயதிற் குதித்துக் கொண்டு வரக் கூடியது காதற்கவிதை தான்" என்று எனக்குத் அபமிட்டு வைத்தான்.

சடுதியாகப் பெற்ற ஆவலும் துணிச்சலும் அன்றிரவு தனிமையில் பேனையும் கையுமாக என்னை அமர்த்தியது. தனிமையில் அமர்ந்து தனிமைதான் கவிதை எழுதுவதற்கு உகந்தது என்ற உண்மையை முன் கூட்டியே உணர்ந்திருந்ததாலல்ல. எழுதப் போவது காதற் கவிதையாயிற்றே, யாரும் கண்டு விடக் கூடாதே, என்ற அச்சத்தினாலேயே!

### முதற் கவிதை

'ஆடக்கமுடை ஆரணங்கே' என்று அடியெடுத்த கவிதை சில விநாடிகளில் கொப்பியின் ஒரு பக்கத்தை நிரப்பி விட்டது. ஓசை ஒழுங்கு உணர்ச்சிச் சிறப்பு, பொருட்டொடர்பு யாவும் செப்பமுற அமைந்திருந்தன. எனக்கு வெற்றிப் பெருமிதத்திற்குவைகால் தெரியவில்லை. அப்படியானால் யானும் கவிஞனு என்று என்னை நானே கேட்டுக் கேட்டு மகிழ்ந்தேன். எப்பொழுது விடியும் என்று காத்துக் கிடந்தேன். விடிந்தது. கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்ததும் நண்பனைத் தேடிப் பிடித்துக் கவிதையைக் காட்டினேன். அவன் வியந்து ஏனைய நண்பர்களுக்கும் அதனைப் படித்துக் காட்டி மகிழ்ந்து என்னை மேலும் உற்சாகப்படுத்தி விட்டான்.

அந்த முதற் கவிதையினைத் தொடர்ந்து ஆர்வத்துடன் பல கவிதைகள் எழுதினேன். ஆனால் நான் பிற்காலத்தில் கவிதைப் பித்தில் கல்வி முன்னேற்றங்களையும், தொழில் தேட

**ச. வே. பஞ்சாட்சரம்**

வேண்டும் என்ற எண்ணத்தையும் விட்டு நிலைமையையும் அறவே மறந்து திரிந்ததுபோல், அந்தக் காலத்தில் படிப்புப் பற்றிய கரிசினையில் எழுதிய கவிதைகளைப் பேணி வைக்கத் தவறி விட்டேன். ஆயினும் அந்தக்கவிதைகளில் மனத்தினுள் ஐத்து நினைவிலுறைந்த சில வரிகள் இன்றும் ஞாபகமிருக்கின்றன.

காதலிக்கு எழுதும் மடலாக அமைந்த உருக்கமான அந்த முதற் கவிதையில் "தாணுயிருந்தவன் யால் தொய்ந்து மெலிந்தின்று துரும்பாகி நிற்பதற்குக் காரணம் நீ அறியாயோ" என்பதுமொன்று.

### தமிழ் ஆசிரியர் பாராட்டினார்

அதே வகுப்பில் தமிழாசிரியராகக் கடமையாற்றிய திரு. சி. முருகவேள் யான் வகுப்பில் எழுதுங் கட்டுரைகளை வெகுவாகப் பாராட்டி அவற்றை வகுப்பில் வாசித்துக் காண்பிப்பவர். எனது வளர்ச்சியில் ஈடுபடும் அக்கறையுங் கொண்டிருந்தவர். தமிழ்க் கவிதைகளோடு ஆங்கிலம், வடமொழி முதலிய பிறமொழிக் கவிதைகளிலும் பயிற்சியும் அனுபவமும் மிக்கவர். தினமும் ஏதாவதொரு நூலுங் கையுமாக வகுப்பில் நுழைவார். அதிலும் பாவேந்தர் பாரதிதாசனின் கவிதை நூல்களையே அடிக்கடி கொண்டு வருவார். தான் படித்துச் சுவைத்து வைத்திருந்த அத்தலையிடங்களையும் அந்த நூல்களிலிருந்து படித்துக் காட்டி மகிழ்வித்து எங்கள் சுவையுணர்வைத் தூண்டி வந்தார்.

ஒருநாள் அப்பொழுது எங்கள் பாடநூலாக இருந்த The Plate of Gold என்ற ஆங்கிலக் கவிதை நூலிலிருந்து 'Love' என்னும் கவிதையை எடுத்து, படிந்தால் இந்தக் கவிதையைத் தமிழில் எழுதுங்கள் பார்க்கலாம் என்றார். நானும் நண்பனும் எழுதப் புகுந்தோம்.

கதை சொல்லும் தன்மைத்தாகிய அக் கவிதையின் முதல் நான்கு அடிகளையும் சில விநாடிகளில் நான் தமிழ்க் கவிதையாக்கி விட்டேன். நண்பன் தானும் முயல்வதை விட்டு விட்டுக் கொப்பியைப் பறித்துக் கொண்டான். சில நிமிடங்களிற் கொப்பி ஆசிரியரின் கைக்கும் போய்ச் சேர்ந்து விட்டது. கவிதையைப் படித்துப் பார்த்த ஆசிரியரின் முகம் மகிழ்வில் மலர்ந்தது.

கவிதை வகுப்பிற் படித்துக்காட்டப்பட்டது. ஆசிரியர் என்னையும் வெகுவாகப் பாராட்டித் தட்டிக்கொடுத்தார். கவிதை தெரிந்த ஒருவரால், பலமொழிக் கவிதைகளையும் பயின்றுணர்ந்த ஒருவரால் எனது ஆரம்பக் கவிதை பாராட்டப் பெற்றமை எனக்கு அளவு கடந்த உற்சாகத்தையும் நம்பிக்கையையும் துணிவையுந் தந்ததில் வியப்பில்லை.

### நோக்கங்கள்

கவிதை எழுதத் துணிந்து விட்டேன். இனி அதற்கு வேண்டிய கொள்கைகளையும் இலட்சியங்களையும் வகுத்துக் கொள்ள எண்ணினேன். இலட்சியங்களைச் சிறியவைகளாகக் கொண்டால், குறிக்கோள்களை இலகுவானவைகளாகக் கொண்டால் அவற்றை யடைந்ததும் ஊக்கங்கெட்டு விடும் என்ற எண்ணமும் இருந்தது. அதோடு பிறமொழிகள் பலவற்றிலிருந்து சிறந்த கவிதைகளெல்லாம் ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு அந்த மொழிகளும், அவற்றைப் பேசும் இனங்களும் பெருமைப்படுத்தப்படுவதும் என் கருத்தைக் கவர்ந்தது. இந்தப் பெருமையையும் சிறப்பையும் தமிழுக்கும் தமிழர்க்கும் தேடிக் கொடுக்கும் நோக்குடன் உழைக்கவேண்டும் என்ற எண்ணம் என் மனத்தில் தலை தூக்கி நின்றது.

அந்தக் குறிக்கோள் வெற்றிபெற யான் செய்ய வேண்டியவை என்னென்ன? பிறமொழி மக்களும் பொதுவாக உலக மக்கள் அனைவருமே படிப்பதற்கெனச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கவிதைகளுக்கு முதலவசியமானவை பொருட் சிறப்பு, புதுப் புதுக் கற்பனைகள், நல்ல நோக்கங்கள் என்பனவாகும். அதோடு நம்மினத்தின் தலை சிறந்த பண்புகளையும் இலக்கியப் பாரம்பரியத்தின் தனிச் சிறப்புக்களையும் அக்கவிதைகளில் முழங்க வைக்கவேண்டும்.

### கற்பனையில் புதுமை

நான் எழுதியகவிதைகளை—அக்கவிதைகள் தேக்கி வைக்கும் பொருள் [illegible] களை அணைத்தையும் அப்ப [illegible] ஆங்கிலத்தில் யானே மொழி பெயர்ப்பையும் பிற்காலத்திற் செய்ய வேண்டும். இந்த முடிவுகளுக்கு வந்த என்னை ஏற்கவவே எனக்கு ஏற்பட்டிருந்த தமிழ்ப் பற்றும் கலையுணர்வும், இரசனையுள்ளமும் என் முயற்சியில் வெற்றியுடன் வழிநடத்தலாயின. இதுவரை என்னால் எழுதப் பெற்ற கவிதைகளிற் பெரும்பாலானவை— புதுமையான கற்பனைகளையும், ஆழ்ந்த சிறந்த கருத்துக்களையும் தேக்கி நிற்பதை 'சுதந்திரன்' படிப்பவர்கள் கவனித்திருப்பார்கள்.

(7ம்- பக்கம் பார்க்க)

## கவிதைப் பூங்கா

### தமிழாட்சி காணவேண்டும்

—பண்ணாகம் ப. இராசகுரு—

முச்சங்கம் இருந்தின்று வளர்ந்து நின்றாள்
முதுமையின்றிச் செம்மையுடன் நின்றாள் என்றும்
அச்சமின்றித் தமிழரெல்லாம் அவளைக் காத்தார்
அவனியிலே அவட்கெனவே அரசும் செய்தார்
இச்சகத்தில் அவட்கிணையாய் ஒன்றும் இல்லை.
எழிலரசி எனநின்றாள் இன்பம் கொண்டாள்
துச்சமென எம்முயிரை எண்ணி நின்றே
துணிவுடனே தமிழரசு காண்போம் இன்றே.

செந்தமிழைப் பழிப்போரின்சிரசு கொய்வோம்
சிறுமதியால் இகழ்வோரைச் சேரமாட்டோம்
சொந்தமென எமக்கிங்கே நாடு வேண்டும்
சோராதே அறப்போரில் குதித்து நிற்போம்
சிந்தையிலே அவள்வாழும் சிறப்புக் காண்போம்
செகமெல்லாம் அவள் பெயரால் வாழ வேண்டும்.
தந்தைவழித் தந்தையரால் வாழ்ந்த நாட்டில்
தமிழரசு நாட்டிடுதல் சால்பே கண்டீர்.

சிங்களத்தைக் கற்றெம்மைக் காட்டி வாழ்வார்
சிறுமதி யொடுக்க சபதம் ஏற்போம் இன்று
எங்களினம் அழிவதற்கு வழிகள் செய்வார்
இவ்வுலகில் வாழ்வதற்கு விடவே மாட்டோம்
சங்கெடுத்து முழங்கிடுவோம் சால்பு காண்போம்
சரிநிகராய்த் தமிழ்மொழியை முழங்கச் செய்வோம்
எங்கெங்கும் தமிழ்மொழியை முழங்கச் செய்வோம்
இன்றிங்கே தமிழாட்சி காணவேண்டும்.

கங்கையினை இமயத்தைக் கொண்டு வாழ்ந்தோம்
கருங்கல்லைத் தலையினிலே சுமக்கச் செய்தோம்
செங்கையிலே மூவர்ணக் கொடியை ஏந்தி
செந்தமிழைக் காத்திடவே சேர்வோம் இன்று
எங்களுடல் தீயினிலே வேகும் போதும்
எம்தமிழே அதில்நின்றும் ஓங்கும் கண்டீர்
அங்கமெல்லாம் குறைந்தெம்மை வீழ்த்தினாலும்
அந்தமிழின் அரசாட்சி ஓங்க வேண்டும்.

குருதியெல்லாம் தமிழ் நினைவால் பொங்க வேண்டும்
கொடியோர்கள் அச்செயலால் விழ வேண்டும்
தருமமிகும் அறப்போரில் குதிக்க வேண்டும்
தமிழெனவே அங்கெல்லாம் முழங்க வேண்டும்
உருவிழந்தே எம்முயிரும் நீங்கும் போது
உறுதியுடன் தமிழங்கே ஒலிக்க வேண்டும்
கருமமெல்லாம் தமிழ்மொழியில் செய்ய வேண்டும்
கலங்காமல் தமிழாட்சி இன்றே காண்போம்.

### எனக்கு வேண்டும்

—சி. கனகசூரியம்—

நாட்கள் நூறு வேண்டும்—எனக்கு
நாட்கள் நூறு வேண்டும்
இனிமை என்ற தமிழ் மொழிக்கு இடரிழைக்க வென்று நித்தம்
கனவு கண்டு வாடு வோரைக் கண்டு நான் நகைப்ப தற்கு
நாட்கள் நூறு வேண்டும்—எனக்கு
நாட்கள் நூறு வேண்டும்.

வாரம் நூறு வேண்டும்—ஆமாம்
வாரம் நூறு வேண்டும்
உலகை ஆண்ட மரபில் வந்தும் ஊமை யாகி; தமிழர் வாழ்ந்த
நிலை மறந்த புல்லர்க் காக நெஞ்சு சாம்பி நாணி நிற்க
வாரம் நூறு வேண்டும்—ஆமாம்
வாரம் நூறு வேண்டும்.

மாதம் நூறு வேண்டும்—எனக்கு
மாதம் நூறு வேண்டும்
மறம மிழ்த்து அரசு செய்த மன்னர் எங்கள் தமிழர் பற்றி
பெருமை யோடு உலக மெங்கும் பிரிய மாய் உரைப்ப தற்கு
மாதம் நூறு வேண்டும்—எனக்கு
மாதம் நூறு வேண்டும்.

ஆண்டு கோடி வேண்டும்—இன்னும்
ஆண்டு கோடி வேண்டும்
வேரி ஒத்த எம் மொழிக்கு வேண்டு கின்ற சேவை செய்து
மாரி யாக ஊற்று கின்ற மகிழ் வினில் நிதம் திளைக்க
ஆண்டு கோடி வேண்டும்—இன்னும்
ஆண்டு கோடி வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வி சித்தி சபியா-கபூர்,
பெரிய கிண்ணியா

கே: ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஏற்பட்ட பூசல்கள் எந்த அளவில் இருக்கின்றன?

ப: வலது, இடதுசாரிப் பூசல்கள் உள்ளே புகைந்து கொண்டிருக்கின்றன. அந்த இடதுசாரிகளுடன் நெருங்கி உறவாடும் சமசமாஜத் தலைவர்கள் அவர்களுக்குத் தலைமை தாங்க முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். முயற்சி வெற்றி பெற்றால், வலதுசாரிகள் வெளியே தள்ளப்படுவார்கள். சமசமாஜிகள் ஊடுருவும் வேகத்தைப் பார்த்தால் அது நடைபெறும் என்றுதான் தெரிகிறது.

ஃ

ரோஜா, கம்பளை

கே: நான் ஒருவரை மணமாரக் காதலிக்கிறேன். அவரும் அவ்வாறே என்னை விரும்புகிறார். எனக்காக அவர் எனது குடும்பத்தினரால் பல துன்பங்களை அனுபவித்தார். இப்போது எனது தாய் அவரை மறந்து விடும்படி வலியுறுத்திக் கூறி என்னைத் துன்புறுத்துகிறாள். நான் இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவிக்கிறேன். நான் வாழ்வதா, சாவதா?

ப: சிக்கலான கட்டம். இந்தக் கட்டத்தில் உங்களுக்கு உதவிக்கு நிற்பது "துணிவு" ஒன்றுதான். தாய் வேண்டுமா, காதலன் வேண்டுமா என்பதைத் துணிந்து முடிவு செய்யுங்கள். அந்த முடிவின்படி துணிவுடன் நடந்து கொள்ளுங்கள். முடிவு செய்ய முன்பு, எதிர்கால வாழ்வு வளம்பெற இரண்டில் எது சிறந்தது என்பதை ஆயிரம் மடங்கு ஆழ்ந்து சிந்தியுங்கள். ஆனால் இப்படிச் செய்ய உங்களுக்குப் போதிய வயது இருக்க வேண்டும். போதிய வயதில்லையேல் எதையும் சிந்திக்காமல் தாய் சொற்படி கேளுங்கள். நீங்கள் வாழப் பிறந்தவர்கள்-ஆகவே வாழ வழிதேட வேண்டுமேயன்றி சாக வழி தேட உங்களுக்கு உரிமை கிடையாது.

ஃ

சி. மெய்யானந்தன்,
மயிலிட்டி

கே: காதல் கசக்காமல் நிரந்தரமாக இருப்பதற்கு ஒருவழி தெரிவிப்பீரா?

ப: காதலியை மணக்காமலிருப்பது.

ஃ

மூ. கருணாநிதி,
ஏழாலை மேற்கு

கே: ஓய் குயுக்தியாரே! கேள்விகளுக்கு உமது பதிலைப் பார்க்க மிகவும் இனிப்பாய் இருக்கிறது. ஆனால் எனது நண்பனுக்குக் கசப்பாக இருக்கிறது!

ப: கசப்பின்றி இனிப்பில்லை. இனிப்பின்றி கசப்பில்லை. இதிலிருந்து இவ்விரண்டும் தேவை என்பது புலனாகிறதல்லவா? ஆகையாற்றான் இவ்விரண்டும் என் பதிலில் இடம்பெறுகின்றன.

ஃ

வெள்ளச்சாமி,
மாவத்தகம

கே: ஒருவர் எத்தனை பெண்களைக் காதலிக்கலாம்? எனது நண்பர் ஒருவர் நான்கு பேரைக் காதலிக்கிறார்!

ப: நான்கென்ன நாலாறு பேரை வேண்டுமானாலும் காதலிக்கலாம். சட்டபூர்வமாக அதற்குத் தடையில்லை. ஆனால் ஒருவரைத்தான் மணமுடிக்கலாம்.

ஃ

வி. எஸ். பாலு,
யாழ்ப்பாணம்

கே: சுதந்திரனில் அறிமுகப்படுத்தும் பகுதியில் என்னைப் பற்றிய விபரங்களைக் காண வில்லையே. நான் ஒரு நடிகன். போடுவார்களா? விடுவார்களா?

ப: ஐயா, விளம்பரப் பிரியரே, ஆசிரியர் எதையும் "விடு"வதில்லை. எல்லாவற்றையும் "போடு"கிறார் குப்பைக் கூடையில்.

ஃ

என். குமார்,
கொழும்பு-14

கே: எனக்கு எந்நேரமும் டீ குடிக்க வேண்டி ஏற்படுகிறது. அதனால் உடம்புக்கு ஏதாவது கெடுதியா? குடிப்பதை நிறுத்த ஒரு வழி சொல்லுங்கள்!

ப: டீ, காபி நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்தும். ஆனால் எல்லோருக்கும் அப்படி ஏற்படுமென்று கூறுவதற்கில்லை. திரு. கிருஷ்ணமேனன் போன்றவர்கள் ஒரு நாளைக்கு தேநீர் 25 கோப்பைக்குக் குறையாமல் குடிக்கிறார்களெனினும் அவர்களுக்கெல்லாம் அதனால் தீமை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. தேநீருக்குப் பதில் தண்ணீர் குடித்துப் பழகுங்கள்.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ஃ

சிவராசா கே. கே., பளை

கே: மாந்திரீகர் ஒருவர் தனது மந்திர சக்தியினால் கஷ்டமான பரீட்சையில் சித்தியடையச் செய்யத் தன்னால் முடியும் என்று கூறுகின்றாரே, அப்படியென்றால் உலகில் உள்ள எல்லோரும் பெரிய பரீட்சைகளில் சித்தியடைந்து விரும்பிய உத்தியோகங்களைப் பார்க்கலாமே?

ப: பார்க்கலாமே! ஆனால் நான் பார்க்கவில்லை மந்திரத்தால் மாங்காய் விழுந்ததை.

ஃ

................,
காரைநகர்

கே: நான் ஒருவரைக் காதலிக்கிறேன். ஆனால் அவர் என்னை விட்டு என் தங்கையைக் காதலிக்கின்றார். இதற்குத் தாங்கள் கூறும் புத்திமதி யாது?

ப: தங்கையின் கருத்தை அறிந்து, அவருக்கு வாய்ப்பளித்துவிட்டு நீங்கள் ஒதுங்கிக் கொள்வதுதான் அறிவுடைமை.

ஃ

கே. கே. வி அனந்தசர்மா,
வறக்காப்பொலை

கே: என். எம். பெரேராவின் பட்ஜெட் அவருடைய 25 வருட அரசியல் வாழ்வை நிர்ணயிக்கும் பட்ஜெட் என்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர்?

ப: என். எம். குழுவினர் ஏதோ ஒரு திட்டத்தின் அடிப்படையில் செயலாற்றுவதாக வதந்தி-அந்தத் திட்டத்தின் ஓர் அம்சம்தானும் பட்ஜெட். எனவே பட்ஜெட் அக் குழுவின் எதிர்காலத்தையே பாதிக்கும்.

கே: இலங்கையில் ஒரு பகுதி மக்களை நாடற்றவர்கள் என ஒதுக்கி வைத்திருப்பதைப் போல் உலகில் வேறு எந்த நாட்டிலாவது நாடற்றவர்கள் என ஒதுக்கப்பட்ட மக்கள் இருக்கிறார்களா?

ப: இல்லை- பிரச்சினையைத் தட்டிக் கழிப்பதற்காக இரு அரசாங்கங்களும் கண்டுபிடித்த ஒரு விசித்திர மனித அந்தஸ்துதான் இது.

ஃ

எஸ். கிருஷ்ணமூர்த்தி,
லுனுகலை

கே: இந்தக் காலத்துப் பெண்கள் தாங்கள் பேசும்போது மற்றவருக்குக் கேட்காமல் பேசுவதேன்?

ப: இது 'உதட்டுப்பேச்சு'. உள்ளத்தில் வேரூன்றிருக்கும் உள்ளக் கருத்தைப் பிறர் தெரிந்து கொள்ளாதிருக்கவே 'உதட்டுப் பேச்சு' பேசுகின்றனர்.

ஃ

இரா. வெ. அழகர்சாமி,
பண்டாரவளை

கே: எவன் ஒருவன், ஒரு கட்சியின் இலட்சியத்திற்காகச் சேராமல், சில தலைவர்களுக்காகவும் நண்பர்களுக்காகவும் கட்சியில் சேருகின்றானோ அவன் அந்தக் கட்சியில் நீடித்து — நிலைப்பதில்லை என்ற கருத்து உண்மைதானே?

ப: உண்மைதான். ஆனால் இப்போதெல்லாம் அநேகர் கட்சிகளிற்சேருவது சொந்த நலனுக்காகவேயன்றித் தலைவர்களுக்காகவோ நண்பர்களுக்காகவோ அல்ல.

ஃ

மூர்த்தி,
வவுனியா

கே: நான் இலங்கையில் பிறந்தவன். எனது தந்தை ஓர் இந்தியர். பணம் கொடுத்து இந்தியரை வெளியேற்றும் அரசாங்கம், என்னையும் அவ்வாறு (நானும் விரும்பின்) அனுப்புமா?

ப: நீங்கள் "நாடற்ற" நிலையில் இருக்கிறீர். இலங்கை அரசாங்கம் பணம் கொடுத்து உங்களை அனுப்ப முன் வந்தாலும் இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது.

ஃ

பெ. பெருமாள்,
புதுவட்டக்கொடை

கே: எங்கள் தோட்டத்தில் 16 வயது தொடக்கம் 22 வயது வரையுள்ள வாலிபர்களுக்கு வேலை கொடுக்கப்படுவதில்லை. எந்தக் கட்சியில் சேர்ந்து கேட்டாலும் பேர் பதிய இடமில்லை என்கிறார்கள். பெண் வீட்டாரும் பெண் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். நாங்கள் என்ன செய்வது?

ப: தோட்டங்களில் வேலை வாய்ப்பு குறைந்துவிட்டது. தோட்டங்களுக்கு வெளியே சென்று வேலைதேட வேண்டும். அதற்கு குடியுரிமை வேண்டும். குடியுரிமை பெற போராட்டம் நடத்த வேண்டும். போராட்டமின்றி இனி வேலையில்லை. வேலையின்றிப் பெண்ணில்லை. எனவே தோட்ட வாலிபர்களுக்குத் தற்போதுள்ள வேலை, போராட்டத்துக்குத் தயாராவதே.

# காதல் வழி வேண்டாம் இனி

—"நாதன்"

களிதுள்ளும் கவின்மான்; ஒரு கவிதை போன்று
கதை சொல்லும் குழவி மொழிக் கிள்ளை போன்று
உளம் கொள்ளும் உயிர் வெல்லும் உவகை தந்து
உணர் வெள்ளக் கடலினிலே ஊரும் வடிவம்.

கலைமானின் கயல்மீனின் காதற் பார்வை
கவிபாடும் கருங்குயிலின் காதல் ஓசை
உயர் வாழ்வை உன்னுகின்ற உருவத் தோற்றம்
உலகாளும் உமையாள் போல் உலவும் தன்மை.

நிலம்மாறும் நீர்மாறும் நிதியேதான் மாறும்
நினைந்திட்ட நெஞ்சத்தில் நீ மாறவில்லை
அலைமாறும் கடல் போலுன் நெஞ்சத்தின் ஆழம்
அறிந்திடவே முயன்றிட்டால் அவமானம் மிஞ்சும்.

இலையொன்று உயிர் கொண்டு திரிகின்ற நிலைபோல்
சிறுபற்கள் ஒளிவீசச் சிரிக்கின்ற போது
அலையொன்று கடல்தனிலே ஆர்க்கின்ற ஒலிபோல்
அழியாத காதல் என் உள்ளத்தில் பொங்கும்.

குலையாத உள்ளத்தில் குவிந்திட்ட உணர்வை
குறையேதும் இல்லாது குழவிபோல் வளர்த்தேன்
நில்லாத கனவு இது: நீ யாரோ என்றே
நினைந்திடவே உணர்த்திவிட்டாய் நீ இன்று என்னை.

கணமேனும் உன்னிடத்தில் கதைபேசாக் காதல்
கலைகின்ற நிலையின்று வந்துவிட்ட தையோ!
உயிராக இணைந்தாலும் உள்ளத்தின் காதல்
உணர்விக்க வேண்டி நான் உன்னிடத்தில் சொன்னேன்.

"உணர்ச்சி களால் உண்டான உடற்காதல் அன்று
உயிராக உன்னை நான் விரும்புகின்றேன்", என்றே
கணநேர உளத் தெம்பில் உன்னிடத்தில் சொன்னேன்
கனவெந்தன் காதலென உணர்த்திவிட்டாய் கன்னி.

நிலையாக உன்னுடனே நீள் நாட்கள் வாழ்ந்து
நீங்காத காதலுடன் நினைந்துருகி நித்தம்
கலையாத காதலுடன் காத்திருக்கும் அந்தக்
காதல் மணவாளன் உன் அத்தானே என்றாய்.

அழியாதது உண்மைக் காதலென் றொருவன்
அமரா நிலை எய்துவர்கள் காதலர்கள் என்றும்
அயராது கூறிவிட்டார்; ஐயையோ! அவர்தம்
அருகினிலும் காதல் நெடி தீண்டியதும் இல்லையோ.

காதலிக்கும் போதொருவன் காதலியின் உருவில்
காண்கின்ற காட்சிக்கோர் கணக்குத்தான் உண்டோ?
கண்டு அது தோல்வியிலே முடிகின்ற போது
இல்லாத துன்பங்கள் இப்புவியில் உண்டோ?

கலைமானும் கயல்மீனும் கனல் எனவே வேகும்
கதை சொல்லும் கிள்ளையும் கரட்டும் ஒருகோரம்
சிலை கூட இவன் நிலைக்குச் சிரிப்பதுவே போன்று
சிந்தையெல்லாம் நோக நிலை சீர் கெட்டுப் போகும்.

அறியாது காதலிலே சிக்குண்டு அதன்பின்
அறிவெல்லாம் ஒடுங்கிடவே அனலிடையே இட்ட
அரக்கினை நான் போலானேன் அம்மம்மா! இனிமேல்
அரிவாளில் அகப்படினும் காதல் வழி வேண்டாம்.





BLACK FLAG பக் கில்லர்

மந்திர சக்தி போன்று மூட்டைகளை கொன்று விடுகிறது.

கரப்பொத்தான்கள், சிலந்திப் பூச்சிகள், எறும்புகள், படுக்கை மூட்டைப் பூச்சிகள், மற்றும் ஊரும் பூச்சிகளிலிருந்தும் பாதுகாக்க இதோ உத்தரவாதத்துடன் கூடிய மருந்து. பக் கில்லர். இதில் மலாத்தியான், டில்ட்ரான், பிரித்ரின்ஸ் ஆகியன அடங்கியுள்ளன.

ஸ்ப்ரே இணைப்புடன் கூடிய கைக்குகந்த போத்தலாக கிடைக்கும்.

இன்றே உங்கள் வியாபாரியிடம் ஒரு போத்தல் வாங்குங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:
ஹுயிஸ் பிரவுன் அன் கம்பெனி லிமிட்டெட்,
மக்கலம் ரோடு, கொழும்பு. BK1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை பற்றிய பிரச்சினைகளில்

# அரசாங்கத் தலைவர் நிதி மந்திரியா? பிரதமரா?

என். எம்.—மைத்ரீ மோதல்

திரு. மைத்திரிபால சேனநாயக்கா கூட்டரசாங்கம் அமைப்பதை ஆதரித்து நின்ற அமைச்சர்களில் ஒருவர். ஆயினும் துரதிர்ஷ்டம் யாரை விட்டது? அவர் கும்பிடச் சென்ற கோவில் அவர் தலை மீதே இடிந்து விழுந்து விடும் போலிருக்கிறது. டாக்டர் என். எம். பெரேராவின் வரவு-செலவுத் திட்டப் பேச்சால் திரு. மைத்திரிபால சேனநாயக்காவின் தொழில் கொள்கைக்கு அடிவிழுந்ததாக அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது. தொழில் வளர்ச்சியால் வளம் பெறவேண்டியது பொருளாதார முன்னேற்றமேயன்றி மிட்டாய் உற்பத்தி முன்னேற்றமல்ல என்று நிதி மந்திரி வாதித்தார். 'எல்லாத் தொழில்களிலும் மிட்டாயைப் பார்த்து தென்னாலிராமனைக் கிலர் முயற்சி செய்கின்றனர்' என்று பதிலடி கொடுத்தார் திரு. மைத்திரிபால. இந்தத் திட்டத்தில்தான் தகராறு தோன்றுகிறது' என்று 'தவஸ' அரசியல் நிருபர் 8—8—64ந் திகதி எழுதியுள்ளார்.

அரசியல் நிருபர் மேலும் கூறுவதாவது!

'ஸ்ரீ. எல். எப். யின் கொள்கைகளை உதறித் தள்ளிவிட்டுச் சுதந்திரக் கட்சிக்கு வந்தவர்களில் மிகப் பழைய நபர் திரு. மைத்திரிபால சேனநாயக்காதான். எனவே சுதந்திரக்கட்சியின் மகுடத்துக்குத் தனக்கும் உரிமை உண்டு என்ற எண்ணம் அவருள்ளத்தில் இடம் பெற்றுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது பற்றிய விடயத்திலும் அவர் பலத்த கண்டனத்துக் காளானார் ஆயினும் அத்தாக்குதலில் காயப்படாமல் அவர் தப்பிப் பிழைத்தார்.

மேற்கண்ட சம்பவம் கூட்டரசாங்கத்தில் ஏற்பட்ட முதலாவது தகராறு.

திரு. மைத்திரிபால சேனநாயக்கா எதிர்நோக்கவேண்டிய மற்றொரு பிரச்சினையும் உண்டு. அமைச்சர் என்ற முறையில் அவர் யாருடைய கட்டளைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது தான் அந்தப் பிரச்சினை.

கொள்கை பற்றிய பிரச்சினைகளில் அரசாங்கத்தின் தலைவராக ஏற்றுக்கொள்ள வேண்டியது பிரதம மந்திரியையா! அல்லது நிதி மந்திரி டாக்டர் என்.எம். பெரேராவையா? இப்பிரச்சினை எழக் காரணம், இதன் பின்னர் தொழில் பற்றிய எல்லாவிதக் கொள்கைகளுக்கும் தனது அனுமதியையும் அங்கீகாரத்தையும் பெற வேண்டுமென்று நிதி மந்திரி கூறியிருப்பதுதான்.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கூறியுள்ளபடி டாக்டர் பெரேராவின் வரவு-செலவுத் திட்டம் மார்க்ஸிய சர்வாதிகாரத்துக்கு வழிவகுப்பதாகும்.

அப்படியானால், திரு. மைத்திரிபால சேனநாயக்கா காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவின் கொள்கைகளை உதைத்தெறிந்துவிட்டு, புதிய ஆசிரியரைப் பின் பற்றிச் செல்லுவாரா? இந்தப் பிரச்சினைக்குக் காலந்தான் தீர்வு காண வேண்டும்.

## சிங்கள இதழ்களில்...

# உலக யுத்தம் ஏற்படின் நாம் பட்டினிக்குப் பலி

'இம்முறை ஓர் உலக யுத்தம் ஏற்படுமாயின், அது உலகின் தலைவிதியை நிர்ணயிப்பதற்காக அமெரிக்க முகாமுக்கும், ரஷ்ய முகாமுக்குமிடையே ஏற்படும் யுத்தமாகவே இருக்கும். அத்தகைய ஒரு யுத்தம் ஏற்படும் பட்சத்தில் இலங்கைக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைப் பற்றி இப்பொழுது சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

கடந்த உலக யுத்தத்தின் போது பிரிட்டிஷாரின் புண்ணியத்தால் இலங்கை மக்களுக்கு எத்தகைய குறைபாடும் ஏற்படவில்லை, ஆனால் இம்முறை உலக யுத்தம் ஏற்பட்டால் இந்நாட்டு மக்கள் பட்டினியால் சாக வேண்டிய நிலைதான் ஏற்படும்.'

இவ்வாறு 'லங்காதீப' அரசியல் நிருபர் 8-8-64ந் திகதி இதழில் எழுதியுள்ளார்.

அவர் மேலும் கூறுவதாவது!

'உலக யுத்த சமயத்தில் நாட்டு மக்களைப் பட்டினியிலிருந்து பாதுகாப்பது முக்கியமான கடமையாக 'சோஷலிஸ்டுகள்' என்போர் கவனிக்க மாட்டார்கள் என்பதை விளக்கத் தேவையில்லை.'


### அடுத்த வாக்குறுதி என்ன?

அடுத்த ஆண்டில் பொதுத் தேர்தல் நடத்துவதாகப் பிரதம மந்திரி திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

அடுத்த தேர்தலின் போது அரசாங்கம் மக்களுக்குக் கொடுக்கவிருக்கும் வாக்குறுதிகளைப் பற்றி இப்பொழுதே சற்று ஆராய்ந்து பார்ப்பது பயனளிக்கும். அவற்றில் தனிச் சிங்களச் சட்டம் தனி இடம் பெறலாம். சிங்கள மொழி சட்டபூர்வமாக அரச கரும மொழியாகவில்லை என்பதை அரசாங்கக் கட்சியே பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொண்டிருப்பதால், "சிங்களத்தை உத்தியோக மொழியாக்க மீண்டும் எங்களுக்கு வாக்குகளைக் கொடுங்கள்" என்று மக்களிடம் கேட்க வேண்டிய நிலை ஏற்படும்.

### பிரஜாவுரிமை கிடைக்குமாம்

அதற்கிடையே இந்நாட்டில் வசிக்கும் இந்தியத் [illegible] தன் அனைவருக்கும் பிரஜாவுரிமை கிடைக்குமென்பது தற்போது நடைபெறும்


ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு 11.


## மருத்துவமனையில் டாக்டர் நாகநாதன்

இலங்கைத் தொழிலாளர் கழகத் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் நல்லூர் பிரதிநிதியுமாகிய டாக்டர் இ. மு. வி. நாகநாதன் உடல் நலமின்றி கொழும்பு அரசாங்க மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். அவரை ஆறு வார காலம் ஓய்வெடுத்துக் கொள்ளும் வண்ணம் டாக்டர்கள் கூறியுள்ளார்கள்.

கட்சி உறுப்பினர்களும், கழக உறுப்பினர்களும் அவர் உடல் நலம் பற்றி அறிய ஆவல் கொண்டு மருத்துவமனைக்குச் செல்வதாகவும் தெரிகிறது அவரின் உடலைப் பரிசோதித்துள்ள டாக்டர்கள் யாரையும் அவருடன் உரையாட அனுமதிக்கக் கூடாது என்று கூறியுள்ளார்கள். ஆகவே கட்சி உறுப்பினர்களும் கழக உறுப்பினர்களும் மருத்துவமனைக்குச் சென்று அவரின் பூரண ஓய்வுக்கு இடையூறு கொடுக்க வேண்டாம் என்று கேட்கப்படுகின்றனர்.

காரியங்களிலிருந்து நிரூபிக்கப்படுகிறது.

தேயிலைத் தோட்டங்களிலிருந்து ஏக்கரா ஒன்றுக்கு ரூ.300/= வீதம் வரி விதிக்கும் திட்டத்தின் விளைவாக தேயிலைத் தோட்டங்களில் பெரும் பகுதிகளை மூடப்படுவதோடு, அதனால் கிடைக்கும் தேசிய வருமானத்தையும் இழந்து போவோம். அப்பொழுது வருமானத்தைத் தேடித் தராத இந்தியத் தொழிலாளர்களைப் பொதுப் பணத்தைக் கொண்டு போஷிக்க வேண்டிய நிலைதான் ஏற்படும்.

அதனால் திருப்தியடையாத தோட்டத் தொழிலாளர்களிடையே அமைதியின்மை ஏற்படும் போது மார்க்ஸியத் தோழர்களுக்கு அவர்களைக் கொண்டு இதுவரை தாங்கள் கனவு கண்ட புரட்சியை நடத்த இடம் கிடைக்கும்.

### பலவேகயாவின் சங்கடம்

தொடக்கத்தில் கூட்டரசாங்கத்தை ஆதரித்து வந்த பௌத்த ஜாதிக்க பலவேகய இப்பொழுது அனுதரவான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த ஜாதிக பலவேகயாவின் உதவித் தலைவரான திரு. நிசங்க விஜேரத்னவுக்கு அண்மையில் ஏற்பட்ட நிலைமையிலிருந்து இது தெளிவாகிறது.

பௌத்த ஜாதிக பலவேகயாவால் கட்டி எழுப்பப் பட்டுவந்த தேசிய விழிப்பு இப்பொழுது மிக நுட்பமான முறையில் நசுக்கப் படுகிறதென்பதுதான் அவதானிகளின் கருத்து.

### ரப்பர், தென்னை விதிவிலக்கு ஏன்?

தேயிலைத் தோட்டங்களிலிருந்து மட்டும் ஏக்கரா வரி வசூலிக்க அரசாங்கம் முடிவு செய்ததேன்? அரசாங்கத்தின் விரோதிகள் சொல்லுவதைப் பார்த்தால் தென்னந் தோட்டங்களிலிருந்தும் ரப்பர் தோட்டங்களிலிருந்தும் அவ்வாறு வரி வசூலிக்கப் படாததின் காரணம் அரசாங்க கட்சியிலுள்ளவர்களுக்கு (புதிதாக அரசாங்கத்தில் சேர்ந்தவர்கள் உட்பட) ரப்பர் தோட்டங்கள் ஏராளமாக சொந்தமாயிருப்பதுதான் என்று கூறத் தோன்றுகிறது.

தேயிலைத் தோட்டங்களில் ஒரு பகுதி பிரிட்டிஷாருக்குச் சொந்த மென்பது உண்மையே. அதே சமயத்தில்

(13-ம் பக்கம் பார்க்க)

## சந்தியில்

பாம்பாணத்தில் இயங்கிவரும் ஆயுள்வேதக் கல்லூரியை மூடுவதற்கு அரசாங்கத்துடன் சேர்ந்துகொண்டு ஒருசிலர் பல அந்தரங்க சூழ்ச்சித் திட்டங்களை வகுத்து வருகின்றனர், என்ற 'செய்தியை 2-8-64 சுதந்திரன் இதழில் வெளியிட்டிருந்தோமல்லவா? 'இத்தகவலை சுதந்திரனுக்குக் கொடுத்தவர்கள் யார்?' என்ற கேள்வி சம்பந்தப்பட்டவர்களிடம் இப்பொழுது எழுந்துள்ளது. 'நீதான் கொடுத்திருக்கவேண்டும், அவர் தான் தெரிவித்திருக்க வேண்டும்' போன்ற தகராறுகள் வலுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

'சுதந்திரன்' நிருபர்களும், அம்மாவின் ஒற்றர்களும் பொல்லாத பேர் வழிகள். மூடி மறைக்கப்படும் செய்திகளையும், திரை மறைவில் நடைபெறும் தில்லுமல்லுக்களையும் சேகரித்து அம்பலப்படுத்துவதில் வல்லவர்கள். இலங்கையின் பல பாகங்களிலும் அரசாங்கமும் வேறு சில சுயநலப் புலிகளும் புரிந்துவரும் இனத்துரோகச் செயல்களை 'சுதந்திரன்' அம்பலப் படுத்துவதையிட்டு, பல நெருக்கடிகள் அரசாங்கத்துக்கும் ஏற்பட்டிருப்பதை அனைவரும் அறிவார்கள்.

★

புதிய நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவின் நிதி பற்றிய சில நடவடிக்கைகளை யிட்டு பல உருசிகரமான தகவல்களை அம்மான் அறிந்து வைத்திருக்கிறார். டாக்டரின் திட்டங்களில் பல சூழ்ச்சிகள் புதைந்திருப்பதையும் அம்மான் தெரிந்து வைத்திருக்கிறார்.

டாக்டர் பெரேராவின் அரசியல் அடிச்சுவட்டைப் பின்பற்றியிருவர், மறைமுகமாக டாக்டரின் சூழ்ச்சி வலைக்குள் வீழ்ந்து தவித்து திக்குமுக்காடுகின்றனர். நிதிமந்திரியின் திட்டப்படி, இலங்கையிலிருக்கும் பணம் படைத்தவர்கள், தங்கம் பதுக்கிகள், மேலதிகமான வீடுகளின் சொந்தக்காரர்கள் ஆகியோர் தங்களுடைய ஆஸ்திகளை அரசுக்குக் கணக்குக்காட்ட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கப் பட்டுள்ளனர்.

டாக்டர் என். எம். மின் அரசியல் சீடராகப் பல காலமிருந்த சாதாரண ஏழைக் குமாஸ்தா ஒருவர் திடு திடுவென பதவிகளில் உயர்வடைந்ததோடல்லாமல் பெரும் பணக்காரப் புள்ளிகளுள் ஒருவருமாகிவிட்டார். உள்நாட்டில் ஏராளமான தோட்டந் துரவுகளுடன், அயல் நாடுகளிலும் ஏராளமானசொத்துக்கள் இவருக்கு இருப்பதாகவும் தெரியவருகிறது. பல இலட்சக்கணக்கான ரூபாய்பெறுமதியான தங்கமும் இவரிடம் இருக்கிறதாம்.

அடுத்த நபர் டாக்டரின் மிக நெருங்கிய தோழர், இவருக்கு நாலைந்து ஏராளமான வீடுகளுள. வீட்டு வாடகை வருவாயைமட்டும் கொண்டே தமது வாழ்க்கையை நடாத்தவும், வேறு தொழில் செய்யாது அரசியலில் முழு நேரத்தைச் செலவிடவும் உத்தேசித்திருந்தாராம்.

கூட்டரசாங்கத்தில் டாக்டர் சேர்ந்தமை

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன ஒழிப்புச் சட்டங்கள் இறவாதவரை இந்நாட்டில் சுபீட்சமில்லை

## இரத்தம் சிந்தி உழைத்தவர்களுக்கு உரிமைகளை வழங்குங்கள்

**இலங்கையிலுள்ள சகல இனமக்களும் எந்தவிதமான பாகுபாடுமற்ற நிலையில் வாழ்க்கைநடத்துவதற்கான ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்தாத பட்சத்தில் சௌஜன்ய உறவு சீர்படவோ, பொருளாதார மேம்பாடும் முன்னேற்றமும் இந்நாட்டில் ஏற்படவோ போவதில்லை. சிறுபான்மையினரை ஒழித்துக்கட்டக்கூடிய சிங்களம்மட்டும்சட்டங்களைப் போன்றவை இருக்கும்வரை எத்தகைய மேம்பாடுகளும் இந்நாட்டில் ஏற்பட இடமில்லை. பிரதிநிதிகள் சபையில் நடைபெறுகின்ற வரவு செலவுத் திட்ட விவாதங்களில்கலந்துகொள்ளும் தமிழரசுத் தலைவர்கள் இக் கருத்துக்களை வலியுறுத்துகின்றனர்.**

தமிழரசுத் தந்தை பிரதிநிதிகள் சபையில் புதியவரவு செலவுத் திட்டத்தையிட்டு கருத்துத்தெரிவிக்கும்போது கீழ்க்கண்டவாறு கூறினார்.

புதிய வரவு செலவுத் திட்டம் எந்த வகையில் அமையப்போகிறது என்பதையிட்டு மக்களிடத்தில் பெரும் பரபரப்பு நிலவியது. ஆனால் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் எதுவித புது அம்சங்களும் காணப்படவில்லை. கடந்த கால நிதி அமைச்சர்களின் திட்டத்தைப்போலவே இத் திட்டமும் அமைந்திருக்கிறது.



தமிழரசுத் தந்தை

வடபகுதி மக்களுக்கு நல்ல வகையில் உபயோகிக்காத இறங்குதுறை ஒன்றை இதுவரை அரசாங்கம் செய்து கொடுக்கவில்லை. பொருட்களை ஏற்றிப் பறிக்க ஆழ்கடலுள் தொழிலாளர்கள் அவதியுறவேண்டியிருக்கிறது. பொருளாதார நிலைமையைச் சுட்டிக்காட்டி காங்கேசந்துறைத் துறைமுக அபிவிருத்தியைப் பின்போட்டு வருகின்றனர். ஆனால் உண்மையில் அரசியற் காரணங்களுக்காகவே இப்படியான சம்பவம் நடைபெறுகிறது என்று கூறத் தோன்றுகிறது.

காங்கேசன்துறை சீமிந்துத் தொழிற்சாலைக்கு பொருட்கள் அனுப்பவும், அங்கிருந்து சீமிந்தை வெளியிடங்களுக்கு அனுப்பவும் புகையிரத மார்க்கத்தை உபயோகிப்பதனால் பல இலட்சக்கணக்கான ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டால், இந்நட்டம் தவிர்க்கப்படுவதுடன், ஏறத்தாழ ஐந்து வருடங்களுக்குள்ளாக செலவையும் மீட்டுவிடலாம். இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் கூறினார்.

கோப்பாய் பிரதிநிதி திரு. எம். பாலசுந்தரம் பேசும்போது 'இயற்கையின் மீது பழி சுமத்தி நிதி அமைச்சர் இந்த அரசாங்கத்தின் கீழ்த்தரமான செய்கைகளுக்கு மூடுதிரை இடப்பார்க்கிறார். இந்த நாட்டில் நிலவும் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாயிருப்பது இந்த அரசு கடைப்பிடிக்கும் சிறுபான்மை இனமக்களைக் கொடுமைப்படுத்தும் திட்டமேயாகும். சிங்களம் மட்டும் போன்ற சட்டங்களே இந்நாட்டின் மேம்பாட்டுக்கு இடையூறானவை.

வகுப்புவாத நோக்கத்துடன் இந்த அரசு காங்கேசன்துறை துறைமுகத்தை

## வரவு-செலவு விவாதத்தில் தமிழரசுத் தலைவர்கள்

புறக்கணித்துவருகிறது. அத்துறைமுகம் செயற்பட்டால் தமிழ் பேசும் மக்களின் பொருளாதாரம் வளர்ந்து விடக் கூடும் என்று பயப்படுகின்றனர்.

இயற்கை நியதி வேறுவிதமாக மாறியிருப்பதை இப்போதாவது அரசினர் உணருவது நல்லது. சேது சமுத்திரத் திட்டத்தின் கீழ் பாக்கு நீரிணையை ஆழப்படுத்துவதன்மூலம் கொழும்புத் துறைமுகம் தனது இன்றைய நிலையை இழந்துவிட வேண்டியதுதான் அந்த இயற்கையின் கூற்று.

வருடாவருடம் இந்நாட்டின் சனத்தொகை கூடிக்கொண்டேபோகிறது. அதேபோல் வேலையில்லாத் திண்டாட்டமும் கூடிக்கொண்டேபோகிறது. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு சோஷலிசத்தைப் போதிக்கும் இந்த நிதி அமைச்சர் எதுவித குறிப்பும் தெரிவிக்காமலிருந்தது ஆச்சரியத்தையே கொடுக்கிறது.

இதற்கு மத்தியில், தான் அதிக தாமதத்தின்பின்னரே அரசாங்கத்துடன் சேர்ந்ததாக வருத்தமடைகிறார். முன்பே அரசாங்கத்துடன் சேர்ந்திருந்தால், இதுவரை நாட்டின் சரித்திரமே மாறி, பொருளாதாரமும் சீராகியிருக்கும் என்று கூறுகிறார்.

இந் நாட்டின் மூன்றில் ஒரு பகுதியினர் அரசியல் அடிமைகளாக்கப்பட்டு இம்சிக்கப்பட்டுவரும் வண்ணம் சட்டங்கள் இருக்கும்வரை இந்நாட்டில் எந்தவிதமான சுபீட்சத்துக்கும் இடமில்லை என்று கூறினார்.

மூதூர் முதல்வர் ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி கூறியதாவது:-

'புதிய வரவு செலவுத்திட்டத்தைப் பார்த்தால் இது ஒரு தேர்தல்திட்டம்என்றே கூற முடிகிறது. சில நல்ல அம்சங்களை இத்திட்டம் வெளிப்படுத்தியிருப்பினும், பெரும் பிரச்சினையாகவுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு எதுவிதமான வழிவகைகளும் குறிப்பிடப்படவில்லை.

இந்நாட்டில் உள்ள சகல இனமக்களும் சுதந்திரமாக வாழ வழிவகை செய்யக்கூடிய அமைப்பு ஏற்படும் பட்சத்தில், சௌஜன்ய உறவு ஏற்படுவதற்கு எதுவித மார்க்கமும் இல்லை.

[illegible]

மலைதுறைமுகம் அபிவிருத்தி செய்யப்படாமலிருப்பது பெரும்துர்ப்பாக்கியமாகும். இத்துறைமுகம் சீராக்கப்பட்டால் திருகோணமலை வாழ் மக்களுக்குமட்டுமல்லாமல் அகில இலங்கைக்கும்



ஜனாப் முகம்மதலி

ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

'தற்பொழுது நிலவும் பிரயாணக் கட்டுப்பாடுகள் பல தாங்கட்ட துன்பத்தை அளிக்கிறது. முஸ்லிம்கள் தங்கள் வாழ்நாட்களில் ஒரு முறை மெக்காசெல்லவேண்டியது அவர்களுடைய மத அனுட்டானத்தின் இன்றியமையாத ஒன்றாகும். இத்தகைய பிரயாணங்களில் ஏற்படும் சிக்கல்களை அரசு தீர்த்துவைக்கவேண்டும்.

'நடைமுறைக்குக்கொண்டு வரப்படவிருக்கும் காணி பூமி விற்பனவுச் சட்டங்களினால் சிறுபான்மை மக்களான இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்கள் பெரும் துன்பங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர். இந்நாட்டில் பாரம்பரிய பாத்தியதை உடைய மக்களைச் சந்தேகிக்கக்கூடியதாக அச் சட்டம் அமைக்கப்பட்டிருப்பது அபாயகரமாகும்.

'இந்த மண்ணில் தங்கள் இரத்தத்தைப் பாய்ச்சி, வியர்வையைச் சிந்தி, இந்நாட்டைப் பொன்கொழிக்கும் பூமியாக ஆக்கிய இந்தியவம்சாவளியினருக்கு நிச்சயம் பிரஜாவுரிமை அளிக்க வேண்டியது இந்த அரசாங்கத்தின் கடமையாகும்.'

உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது!

'இப்பொழுது நாடெங்கணும் வீடுகளும் காணிகளும் பெருமளவில் விற்பனைக்கு வரவிருக்கின்றன. ஆனால் இக்காணிகளை இந்நாட்டின் பிரஜைகளான தமிழ் மக்களோ, முஸ்லிம் மக்களோ வாங்க முடியாது. சிங்கள மக்கள் மட்டும் தான்

(9ம்- பக்கம் பார்க்க)


## உங்கள் எண்ணம் நிறைவேற கீழ்க் காணும் விலாசத்திற்கு எழுதுங்கள்!

கவலை, துன்பம், தொல்லை, ஆறுத்துயரம் ஆகியவற்றை ஒழித்து நினைக்கும் காரியத்தை நிறைவேற்ற "குப்த விஞ்ஞான" முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடவுள் மகிமையினால், சைமெஸ்லிசத்தின் உதவியினால், மந்திர சக்தியினால் அல்லது குளியத்தினால் உங்கள் தொல்லைகள் ஒரு வார காலத்தில் நீங்கும்.

எந்தவொரு முரடனையும் பணியச் செய்வதற்கு, தேவையற்றவர்களிடமிருந்து விலகி விடுவதற்கு, கணவன் மனைவியிடையே பிணக்கு இல்லாமல் இருப்பதற்கு, நம்பிக்கையின்மை, பணிவின்மை ஆகியவற்றை ஒழித்து அவரவர்கள் அன்பு அதிகரிப்பதற்கு,

பொருத்தமற்ற விவாகம், பிரிந்து செல்லுதல் ஆகியவற்றைத் தடுப்பதற்கு,

முன்னேற்றத்தைத் தடுத்து குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி இழிவுபடுத்துவோருக்கு கடவுள் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கு,

வயது கூடியும் விவாகம் நடைபெறாமலிருப்பவர்களுக்கு அதிர்ஷ்டத்தோடு விவாகம் நடைபெற அல்லது எதிர்பார்த்த மணாளன் அல்லது மணப்பெண் கிடைக்க, அன்பு நிலைத்து நிற்க,

வாக்குறுதியை மீறும், கடந்த காலத்தை மறக்கும், செய்த உதவியை மறக்கும், கொள்கையைக் கைவிட முயற்சிக்கும் கயவர்களை அடக்கியாள்வதற்கு,

பதவி, தொழில், விவசாயம், வியாபாரம் ஆகியவை உயர்வதற்கு, வருமானம் அதிகரிப்பதற்கு,

கொடுக்கும் பணம் மிஞ்சுவதற்கு, கண்திருஷ்டி கிரகதோஷம்—ஸ்நானதோஷம்—நோய்கள்—பில்லி சூனியம் விலகிச் செல்வதற்கு,

தேடுவதற்கு முடியாத, மருந்து செய்தாலும் குணமாகாத நோய்கள் சுகப்படுவதற்கு,

பரீட்சை, போட்டி, நேர்முகப் பரீட்சை, வழக்கு சச்சரவுகள் ஆகியவைகளில் வெற்றி பெறுவதற்கு,

மனதில் பதிவதற்கு, அச்சம் நீங்கி சாமர்த்தியமான எழுத்துவன்மை பெறுவதற்கு,

சாதாரண சக்தி குறைதல், மெலிதல் கனவு காணுதல் ஆகிய ரகசிய ரோகங்களினால் தொல்லைப் படுபவர்களைக் குணப்படுத்துவதற்கு,

இங்கு குறிப்பிடப்படாத எந்தவொரு வகையான தனிப்பட்ட குறைபாடுகள் அல்லது மனவேதனை, துக்கம், தொல்லை இருப்பின் உண்மையை மறைக்காமல் நேர்மையாக எழுதி அனுப்புவதினால் அல்லது எம்மை நேராக சந்திப்பதினால் நிவர்த்தி செய்துகொள்ள முடியும். எந்தவொரு ரகசியமும் வெளியிடப்மாட்டாது. மத வேறுபாடுகள் இல்லை.

வைத்தியரும் அரசாங்க பதிவுபெற்ற பிரசித்த தாயத்து மாந்திரிகரும்

**பி. எம். திசாநாயக்கா,**

நான்கு கோவில்களில் தர்மகர்த்தா

அருத எண்ணெய் காரியாலயம்

கம்பளை.


## அடுத்த இதழ்:

ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க திருகோணமலை ...

# தோட்ட மக்களிடை படிப்படியாக விழிப்பு ஏற்பட்ட வரலாறு

## கிடைத்த வாக்குரிமை பறிபோன விந்தை

மலைநாடு

அன்று—சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைத் தோட்டத் தமிழ்மக்கள் கோப்பி, தேயிலை, றப்பர் தோட்டங்களில் உயிரோடு நடைப்பிணமாய் வாழுகின்றார்கள் என்று அன்றைய இந்திய அரசாங்கம் எண்ணியது.

### நீதிக்கட்சியின் நடவடிக்கைகள்

அதற்குக் காரணம் முதலாவது மகாயுத்தம் முடிந்த 1919-ம் ஆண்டு இந்தியாவில் ஏற்பட்ட தேசியக் கொந்தளிப்பின் எதிரொலிதான். அவ்வொலியால், சென்னை மாகாணத்து சட்ட நிருபணசபையிலே நீதிக் கட்சித் தலைவர்கள் இலங்கைவாழ் இந்திய மக்களைப் பற்றிய கேள்விகளைக்கேட்டனர். திருவாளர்கள் பனகால் அரசர், தியாகராஜ செட்டியார், பன்னீர்செல்வம், பதஞ்சலி ஐயங்கார், சர். மாதவராவ் முதலியோரே அந்தத் தலைவர்கள்.

அந்த மாபெரும் நீதிக் கட்சிதான் படிப்படியாக பெயர்மாறி உயர்ந்துவந்து இன்று தி. மு. க. வாக வளர்ந்து சென்னையை மீண்டும் கைப்பற்றி ஆளும் கட்சியாக வரவிருப்பது.

நீதிக்கட்சியார் கேட்டிராவிட்டால் இலங்கை இந்தியரின் நல உரிமைகளைப் பாதுகாக்க, இந்திய அரசாங்கம் ஒரு ஏஜன்டரை—இங்கு அனுப்பி வைத்திராது.

அந்நாளில் முதன் முதல் வந்த இந்திய ஏஜன்ட் ஓர் சேர் பட்டதாரி வடநாட்டவர். அந்த பெரியாருக்கு தென்னகத்து மக்களின்பண்பாடு, கலாச்சாரம், வாழ்க்கைமுறை பற்றிய விஷயமே தெரியாது பாவம்!

### இரு பிரதிநிதிகள்

1924ம் ஆண்டு நடந்த இலங்கை சட்ட நிருபண சபைக்கு இலங்கைவாழ் இந்தியரின் பிரதிநிதிகள் இருவருக்கு இடம் கொடுத்தார்கள். அந்தப் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு ஓரளவு காரணபூதர்களாக இருந்த பெரியார்கள், சேர். இராமநாதன், சேர். பொன் அருணாசலம் ஆகியவர்களே.

இவ்விரு ஸ்தாபனங்களையும் பிரபல கொழும்பு வியாபாரிகளான, திவான்பகதூர் ஐ. எக்ஸ். பெரேரா, ஜனாப். முஹம்மது சுல்தான் ஆகிய பெரும் புள்ளிகள் கைப்பற்றி பாராளுமன்றத்தில் வீற்றிருந்தார்கள்.

எஸ் எஸ். நாதன்

அக்கால தேர்தல் முறையும், வாக்களிக்கும் முறையும், பணம் படைத்தோருக்கே இருந்துவந்தது.

தோட்டத் தொழிலாளருக்குஅப்போதுவாக்குரிமை இல்லை தோட்டங்களைவிட்டு வெளியேவரமுடியாது.தெரியாமல் வந்துவிட்டால், திரும்பி வந்ததும் கட்டி வைத்து அடி என்ற நிலை இருந்தது.

### குட்டிச்சாக்குக்கு போய்விடும்

அக்காலத்தில் தோட்டத் தொழிலாளர்கட்கு 10 ம் திகதிக்கு முன்பு சம்பளம் கொடுத்து விட வேண்டுமென்ற நியதி இல்லை. ஒரு மாதச் சம்பளம் மறுமாதம் 30-ம் திகதிவரை வேண்டிய நேரம் கொடுப்பார்கள்.

ஏதோ ஒரு திகதியில் சம்பளம்என்பார்கள் முதலாளிகளான ஐரோப்பியர். அது அவர்களின் பிரியம். அரிசி வாங்கியதற்கான பணம் போக கையில்காசாகவாங்குவது ஒரு ஆளுக்கு 3 ருபாவிலிருந்து 5 ருபாவரைதான்.

இதை வாங்கியதும் குட்டிச்சாக்கில்(பெரிய கங்காணியின் ஆள் வைத்திருப்பான்) அப்படியே போட்டுவிட வேண்டும். ஏன் தெரியுமா? தொழிலாளர்கள் கங்காணியாரிடம் பட்ட கடன் அது. இந்தியாவிலிருந்து அழைத்து வந்தவர்கள் அல்லவா! அவர்கள் அன்றுபட்ட அந்த கடனுக்கு அந்தமே இல்லை.

அத்தனைவறுமையில் இருந்தார்கள் அன்றையத் தோட்டத் தமிழர்கள். அதற்கு மூலகாரணம் என்ன தெரியுமா? ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், குட்டிராஜாக்கள் இவர்களின் ஆளுகை தென்னாட்டில் தலைவிரித்தாடியதுதான். அதோடு சாதிப்பூசல், குட்டி சர்வாதிகாரிகளின் பணத்திமிர், கல்வி இன்மை, இவைகள், இன்றென்று, அதுதான் தன்னைத்தானே தாழ்வாக எண்ணுவது. அந்த மனப்பான்மை ஒழிக.

### கடன்கள் தள்ளுபடி

தோட்டத் தொழிலாளர்களின் கடனைத் தள்ளிவிட வேண்டுமென்று இந்திய அரசாங்கத்தில் கூக்குரல் எழுப்பினார்கள். இது 1920-ம் ஆண்டு.

சுமார் 85 ஆண்டுகள் அடிமைகளாய், பஞ்சைகளாய், பராரிகளாய், நடைப்பிணங்களாய் கிடந்த தோட்டத் தொழிலாளர்களின் பெயரால்இருந்துவந்த கடன்தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்தச் சிறந்த மனிதத் தன்மையான சேவையைச் செய்ய முன்நின்றவர்களில் இன்னும் உயிருடன் இருக்கும் பெரியார் ஏ. எஸ். ஜோன் ஒருவரே.

### திரு. கோ. நடேச ஐயர்

இலங்கை இந்தியப் பிரதிநிதியாக சட்டநிருபணசபையிலிருந்த ஜனாப். முஹம்மது சுல்தான், 6 மாதங்களில் திடீரெனக் காலமானதும் அந்த இடத்திற்கு இடைத்தேர்தல் நடந்தது. அந்த தேர்தலில் போட்டியிட்டு வென்றவர்தான் 'தேசபக்தன்' பத்திரிகையின் ஆசிரியரும், தமிழறிஞரும், எமது மதிப்பிற்குரியவருமான காலஞ்சென்ற திரு. கோ. நடேசஐயர். அவரை மலைநாட்டுத் தொழிலாளரினம் என்றுமே மறக்கமுடியாது. மலைநாட்டில் தொழிற்சங்கம் அமைத்த பெருமை திரு. ஐயர் அவர்கட்கே உரியது.

தொழிலாளர்களின் கடன் தள்ளுபடியான பின்னர் அவர்கள் ஒருவாறு தலைநிமிர்ந்தார்கள்.

இலங்கைக்கு டொனமூர் அரசியல் திட்டம் ஏற்பட்டதும் தோட்டத் தொழிலாளர்கட்கும் வாக்குரிமை கிடைத்தது. ஆயினும் இரண்டு பிரதிநிதிகளைத்தான் சட்டசபைக்கு அனுப்ப முடிந்தது. அப்போதைய பாராளுமன்றத்தில் 51பிரதிநிதிகளே இருந்துவந்தனர். தேர்தல் தொகுதிகளின் அமைப்புத்தான் அதற்குக் காரணமாகும்.

1939-ம் ஆண்டு இரண்டாவது மகாயுத்தம் ஏற்பட்டிராவிடில் தோட்டத் தொழிலாளர்கள்இன்றுள்ள நிலையில் இருக்கமுடியாது. மேனாட்டு வெள்ளையர் பிடியிலிருந்தும் மீண்டிருக்கமுடியாது.

இந்திய தேசிய காங்கிரசின் எழுச்சியும் தோட்ட மக்களின் முன்னேற்றத்திற்குக் காரணமாகும்.

### இந்தியத் துவேஷம்

1935ம் ஆண்டிலேயே இலங்கையில் இந்திய துவேஷத்திற்கு வித்திட்டார்கள். இதில் திரு. ஏ. ஈ. குணசிங்கா முதன்மையானவர் என்பது பொருந்தும்.

அவர் சந்தபொலை காய்கறிதோட்ட விவகாரத்தில் இறங்கியிராவிடில் இந்நாட்டுமக்களுக்குள்ளே இத்தலை துவேஷம்வளர வாய்ப்பே ஏற்பட்டிருக்காது.

இந்த துவேஷமேஇலங்கை இந்தியரை சங்கங்கள் அமைக்கத்தூண்டியது. கண்டியில் போஸ் சங்கம், பதுளையில் சமத்துவ சங்கம், நாவலப்பிட்டியில் இந்துவாலிபர்சங்கம், அட்டனில் பெரியகங்காணிமார் சங்கம், கொழும்பில் இந்திய சேவா சங்கம், இதில் பழமையானவை பெரியகங்காணிமார் சங்கமும், பதுளை சமத்துவசங்கமுமே ஆகும்.

1935ம் வருடத்தில் ஏற்பட்ட சலசலப்பை அறிந்துதான் இந்திய தேசிய காங்கிரஸ் சூரத் நகரில் நடந்த (இந்திய தேசிய காங்கிரஸ்) மகாநாட்டில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆனால் அது அமுல் நடத்தப்படாமல் சிலகாலம் பிந்தியது. இதற்கிடையில் இலங்கை இந்தியர் பிரச்சினையை இங்குள்ளோர் மிகைப்படுத்தினர் அரசியல் சூதாடிகளுக்கு வாய்ப்பு.

1939ல் காங்கிரஸ் ஆணைக்குக் கட்டுப்பட்டு, இலங்கை இந்தியர்பிரச்சினையை பரிசீலனை செய்ய நேரு இங்கு விஜயம் செய்தார்.

பண்டித நேரு இங்குவந்து சேர்ந்ததும் கொழும்பில் மாபெரும் பொதுக்கூட்டத்தில் இலங்கை இந்தியர் பிரச்சினையைப்பற்றிக் காரசாரமாகப் பேசினார். இங்குள்ள இந்தியர்கள் அந்தப் பேச்சினால்புத்துணர்வு பெற்றனர்.

'ஒரு இந்தியனின் உரோமத்திற்கு ஆபத்து நேரிடுமாயின் பரந்த பாரதம் பார்த்துக்கொண்டிருக்காது' என வீரகர்ச்சனைபுரிந்தார். காலிமுகக் கடற்கரை அந்தப் பேரொலியை இன்றும் மறந்திருக்காது. அன்றே இலங்கை இந்தியர்கட்கென ஒரு ஸ்தாபனத்தை நிறுவினார். அதுதான் இலங்கை இந்தியக் காங்கிரஸ்.

இதற்காக அரும்பாடு பட்டவர்கள் திருவாளர்கள் காலஞ்சென்ற பெரிய

(13-ம் பக்கம் பார்க்க)


அவசியமான கருவிகள்



எஞ்ஜினியருக்குரிய வெட்டும் கருவிகள்



நந்தை மார்க் புரியாணிச்சாவி

மக்னஸ் இரசாயனப் பொருட்கள்
கறள், கொழுப்பு, கரிப்பொருள் ஆகியனவற்றை விரைவாகவும், சுலபமாகவும், மலிவாகவும் அகற்றுகிறது.

பாதுகாப்புக் கருவிகள்





தார்ச் சிவுளி




கொழும்பு கொமேர்சல் கம்பனி லிமிட்டெட்,
சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு
தபால் பெட்டி இல. 763.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர நன்னாட்டிளம் பெண்களின் பவனி

## குறிஞ்சிச் சூழலுக்கு பசுமையூட்டுகிறது

நாகர் கோயிலிலிருந்து புறப்பட்ட நமது பஸ் கேரளத் தலைநகரான திருவனந்தபுரத்தை நெருங்க, நெருங்க இலங்கையின் ஞாபகம் நம் எண்ணத்தில் விரிகின்றது. இலங்கையில் ஒரு சிங்களக் கிராமத்தினூடாக நாம் பிரயாணம் பண்ணிக்கொண்டிருப்பது போன்ற ஓர் உணர்வு தலை நீட்டுகின்றது. சாலையின் இருமருங்கிலும் பசுமை. அந்தப் பசுமையின் மத்தியில் பாரதியின் பாடல் பெற்ற கேரளத்து அழகிகள் கக்கத்தில் குடத்துடன் பவனிவருவது அந்தச் சூழலுக்கு மேலும் பசுமையூட்டுகின்றது.

### கேரளத்துப் பெண்கள்

நம் நாட்டில் சிங்களப் பெண்கள் இடையில் ஒரு துண்டும், சட்டையும் அணிந்து 'சுச்சிதமாய்'க் காட்சி தருவார்களே! அதே உடையோடு இங்கும் கேரளப் பெண்கள் உலவி வருவதைப் பார்க்கும்போது, நாம் இப்போ இந்தியாவில் நிற்கின்றோமா? இலங்கையில் நிற்கின்றோமா? என்று மலைப்பு ஏற்படுகின்றது. 'இலங்கையையும், இந்தியாவையும் 'பிரித்து' துவேஷத்தைப் பரப்பும் இலங்கை அரசியல்வாதிகள் ஒரு தடவை இந்தக் கேரள நாட்டை வந்து பார்க்க மாட்டார்களா?' என்று நாம் எண்ணிக்கொள்ளுகின்றோம்.

கேரளப் பெண்கள் தாம் இப்படிச் சிங்களப் பெண்கள்போல் காட்சிதருகின்றார்களென்று இல்லை; கேரளா செல்லும் வழியின் இருமருங்கிலும் இடையிடையே காணப்படும் கடைகளில் மாட்டப்பட்டிருக்கும் பெரிய பெரிய விளம்பரப் பலகைகளில் எழுதியிருக்கும் மலையாள எழுத்துக்களை பார்க்கும்போதுகூட ஏதோ சிங்கள எழுத்துக்களைப் பார்ப்பதுபோன்ற உணர்வே ஏற்படுகின்றது!

### மீண்டும் கைடுகள் தொல்லை

ஆச்சு, இதோ திருவனந்தபுரத்தை நாம் நெருங்கியாச்சு, பஸ் நிலையத்தில் நம்மைச் சுமந்துவந்தபஸ்வந்து நிற்கின்றது. பஸ்ஸிலிருந்து இறங்கிய நம்மை ஒரு கூட்டம் வந்து சூழ்ந்துகொண்டு 'ராஜோபசாரம்' செய்கின்றது. அத்தனைபேரும் 'கைடு'கள்! அப்பப்பா! இந்தத் திருவனந்தபுரம் 'கைடு'கள் இருக்கின்றார்களே; தமிழ் நாட்டில் நாம் பார்த்த 'கைடு'களெல்லாம்இவர்கள் சாமர்த்தியத்துக்கு உறை போடக் காணாது!

'அழுங்குப்பிடி' என்கின்றார்களே அந்த வாசகத்தை மாற்றி, 'திருவனந்தபுரம் கைடுப்பிடி!' என்று சொல்ல வேண்டியதுதான்!

'எமக்கு யாருடைய உதவியும் தேவையில்லை' என்று நாம் சுரடியாகக் கத்துகின்றோம், அந்தக் 'கைடு'களின் உபத்திரவம் பொறுக்கமுடியாமல்!

சுரடிக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் உண்டு என்பதாலோ என்னவோ தெரியாது—அவர்களும் பதிலுக்குக் காடியாகக் கத்தி, 'முடியாது! நாங்கள் உதவிசெய்துதான் தீருவோம்' என்று நம்மைத் தூக்காத குறையாகக் கொண்டுவந்த. 'சுமி' 'ஞ்'னுக்கு அவர்கள் ஆள் பிடிக்கும்' 'லாஜி'ஸ்' ஒன்றில் நம்மைத் தள்ளுகின்றார்கள்! 'மலையாள பகவதி!' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு அந்த விடுதியில் 'டேரா'ப் போடுகின்றோம் நாம்!

## கேரளத்தில் ஓராண்டு தங்கி நூறு ரூபா நோட்டுடன் அல்லலுற்றோம்

திருவனந்தபுரம் நகர் கிட்டத்தட்ட நம் கொழும்பு போலவே காட்சிதருகின்றது. பெரும் பெரும் அரசாங்கக் கட்டிடங்கள்; இரட்டைத்தட்டு பஸ்; (தமிழகத்தில் வேறு எங்குமே நாம் இரட்டைத்தட்டு பஸ்களைப் பார்க்கவில்லை! சென்னையில் கூட இல்லை!) மிருகக்காட்சிச்சாலை; 'மியூஸியம்; 'ஆர்ட் கலரி', நீச்சல்தடாகம்; திருவனந்தபுரம், தூக்குத்தண்ணீர் 'சப்ளை'யாகும் இடம்; திருவிதாங்கூர் மகாராஜாவின் பழைய மாளிகை (இது இப்போ ஏதோ ஓர் அரசாங்கக் காரியாலயமாக உபயோகிக்கப்படுகின்றது). அவர் தற்போது வாசம் செய்யும் புதிய அரண்மனை (இந்த அரண்மனை இருக்கும் பகுதி நம் கொழும்பு கறுவாக்காட்டுச் சூழலை நமக்கு ஞாபகமூட்டுகின்றது) என்று எல்லா இடங்களையும் கிட்

### உணவு வகையில் ஒற்றுமை

ஒன்றைச் சொல்லவேண்டும்; திருவனந்தபுரம் கொழும்பு நகரைப்போலப் பெரிதாக—அழகாக இருந்தாலும், நாம் அங்குபார்த்த மிருகக்காட்சிச்சாலை இருக்கின்றதே! நம் தெஹிவலை மிருகக்காட்சிச் சாலைக்கு உறைபோடக்கூடக்காணாது! நம் நாட்டு மிருகக்காட்சிச்

சாலையைப் பார்த்த நமக்கு திருவனந்தபுரம் 'ஸூ', 'சப்' பென்று இருக்கின்றது. ஆனால், வட்டியும் முதலுமாக இங்குள்ள செத்த காலேஜ்—அதாவது மியூஸியம் சிறப்பாகஇருக்கின்றது! 'ஆர்ட்' கலரியில் நாம்

நேயர்கள்! என்ன விழிக்கின்றீர்கள்? '1963 தொடக்கம் 1964 வரை ஒரு வருஷமாய் திருவனந்தபுரத்திலா இருந்தீர்கள்?' என்று கேட்கின்றீர்கள்?

விஷயம்அதல்ல; நாம் திருவனந்தபுரம் வந்தது 31-12-63ல்! திருவனந்தபுரத்திலிருந்து புறப்பட்டது 1-1-64ல்!

திருவனந்தபுரம் 'ஸ்பெஷ'லான நேந்திரப் பழங்களை (வாழைப் பழத்தில் ஒரு வகை. நம் நாட்டு ஆனை வாழைப்பழத்தை விடப் பெரியது!) சிப்புக்கணக்கில் வாங்கி அடுக்கிக்கொண்டு (கொழும்பில் இந்த நேந்திரப்பழங்களின் விலை என்ன என்கின்றீர்கள்? ஒன்று 50 சதத்திலிருந்து 1 ரூபா வரை! ஆனால் கேரளத்தில் 9 பைசா 10 பைசாதான்!)




டத்தட்ட ஒரு கைதியின் நிலையிலிருந்து நாம் பார்க்கின்றோம்!

கன்னியாகுமரியில் உதய சூரியனைக் கண்ட நாம், கேரளத்துக் கடற்கரையில் அஸ்தமனச் சூரியனின் அழகைப் பார்த்து மெய்மறக்கின்றோம்.

### 'கழற்று சட்டையை'

கேரளக் கடற்கரையில் மாலைச் சூரியனைப் பார்த்துவிட்டு, அப்படியே வருகின்றோம், மலையாள 'பகவதி' அம்மன் ஆலயத்துக்கு.

இங்கும் தமிழ் நாட்டின் மற்ற ஆலயங்களில் இல்லாத ஓர் ஏற்பாடு. மற்ற ஆலயங்களிலெல்லாம் போட்ட சட்டையோடுதாம் உள்ளே நுழைய முடிகின்றது. இங்கு அந்தப் 'பாச்சா' பலியாது! கோயில் வாசலில் அதற்கென்றே ஓர் ஆள் நின்று, கோயில் தரிசனத்துக்கு வருபவர்களின் சட்டையைக் கழற்றவில்லை; கழற்றும்படி பணிக்கின்றான்! நாமும் அவன் கட்டளைக்குப் பணிந்து சட்டைகளைக் கழற்றி வைத்துவிட்டு அம்மன் ஆலயத்துள் நுழைகின்றோம். தமிழ்நாட்டுக் கோயில்களுக்கு எந்த விதத்திலும் தான் சளைப்பில்லை என்றகப் பிரத்துடன்காணப்பட்டது அந்தப் பகவதி அம்மன் ஆலயமும்! அம்மனைப் பிரார்த்தித்துக் கொண்டு, வேலைப்பாடமைந்த கருங்கற் தூண்களையும் பார்த்து வியந்துகொண்டு விடுதிக்கு வருகின்றோம் நாம்.

(18)

பார்த்த பிரபல சைத்திரிகர் கொண்டே ராஜ் அவர்களின் அற்புத ஓவியங்களும் திருவனந்தபுரத்தை அழகுபடுத்தும் சாதனங்களில் 'ஒன்று' என்று துணிவுடன்கூறலாம்! நீண்ட நாட்களாக நம் கண்ணில்படாமல் இருந்துவிட்ட நமது சாப்பாட்டுராம 'மைனர்' மகாலிங்கம் அவர்களைப் பொறுத்த மட்டில் திருவனந்தபுரம் ஒரு சொர்க்க பூமிதான்! இது நாள்வரை இட்லி, தோசை என்ற காலைச் சாப்பாட்டைச் 'சரிக்கட்டி' வந்த அவருக்கு, திருவனந்தபுரத்தில் ஒரு 'சேஞ்ச்' காத்திருந்தது. நம் இலங்கையில் கிடைக்கும் 'பிட்டு', 'அப்பம்', 'இடியப்பம்' (இப்படிச் சாப்பாட்டு வகையாலும் மலையாளம் நம் நாட்டை நன்கு ஒத்திருக்கின்றது! தமி நாட்டவர்கள் நம்மை 'மலையாளமா ஸார்?' என்று கேட்பதிலும் நியாயம் இருக்கின்றதுதான் இல்லையா?) என்று இங்குதாராளமாகக் கிடைக்கவே அவருக்கு உற்சாகம் தலை கால் புரியாமல் போய் விட்டது. அப்பம் என்றும், 'ஆம்லட்' என்றும் வெளுத்துக்கட்டத் தொடங்கிவிட்டார்!

### கேரளத்தில் ஒரு ஆண்டு

இப்படியாகத்தானே திருவனந்தபுரத்தைப் பார்க்க வென்று 1963-ம் ஆண்டு வந்த நாம் 1964 வரைக்கிலேயே திருவனந்தபுரத்தில் இருந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திக்கும் திருக்குற்றாலத்துக்குப் புறப்படுகின்றோம் நாம்!

### நூறு ரூபாப் பிரச்சினை

திருவனந்தபுரத்திலிருந்து செங்கோட்டை வந்து அப்புறம் குற்றாலம் 'ரூட்' டைப் பிடிக்கின்றோம் நாம். திருவனந்தபுரத்தில் வைத்து நாம் செங்கோட்டை பஸ்ஸில் ஏறியதும், வழமைபோல் டிக்கட் எடுக்கின்றோம் டிக்கட்டுக்குரியபணத்தைப்பஸ் 'கண்டக்டர்'கேட்கவும் நாம் அவனிடம் 'மடமட' என்ற புத்தம் புதிய ஒரு 100 ரூபா நோட்டை நீட்டுகின்றோம். அந்த 100 ரூபா நோட்டைக் கண்ட கண்டக்டர், கண்டிப்பாக அதை வாங்குவதற்கு மறுத்துவிட்டான்! இத்தனைக்கும் அந்த நோட்டு கள்ள 'நோட்டு' அல்ல; நல்ல நோட்டே!......




## தமிழ் மொழியின்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற் கூறிய சிறப்புக்களை மட்டும் கவனித்துக் கொண்டிருந்ததால் எனது கவிதைகளிற் சில கலைத்தன்மையும், கனிவுங் குளுமையும் பெறத் தவறிவிட்டதையும் ஒப்புக் கொள்கிறேன்.

ஆனால் மென்மையும் எளிமையும், குளுமையும் இணைந்த கவிதைகள் படைப்பது எனக்கு இயலாத ஒன்றல்ல என்பதை வெளியிட்டு நிற்கும் கவிதைகளுள் சிறப்பானது எனது 'நிலவுத் தூது' என்னும் புதிய காவியம். அண்மையிற் பாடி முடிக்கப் பட்டுள்ள இச் சிறு காவியம் எனது இன்றைய வளர்ச்சியின் உச்சக் கட்டத்திற்குச் சான்றாக நிற்கிறது. இக் காவியம் எளிமை, வாழ்க்கை பற்றி ஆழ்ந்து நோக்கிக் கண்ட புதிய முடிவுகள், அழகிய புதுப் புதுக் கற்பனைகள் ஆகியவற்றைக் கொண்டு பொலிகிறது. இதுவும் என் அடிப்படை நோக்கிற்குக் கிடைத்த வெற்றிகளில் ஒன்றாகும்.

யான் கவிதை எழுத ஆரம்பித்து ஓராண்டிற்கு மேல் கழிந்த பின்னரே பத்திரிகைகளுக்குக் கவிதைகள் அனுப்பத் தொடங்கினேன். பல பத்திரிகைகள் அவற்றை வெளியிட்டன. சிறப்பாக கலைச் செல்விக்கு நன்றி தெரிவிப்பதைச் சில விமரிசகர்கள் தங்கள் வயிற்றெரிச்சலைத் தீர்க்கப் பயன் படுத்தினால் அதற்கு யான் என்ன செய்ய முடியும்?



## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் 'சுதந்திரன்' ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

# சுதந்திரன்
SUTANTIRAN

1964 ஆகஸ்டு மாதம் 16-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


# ஜனநாயகத்துக்கு சாவுமணி

பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிமுதல் செய்வதென அரசாங்கம் 1960 லேயே முடிவுசெய்துவிட்டது. ஆகவே பத்திரிகைக்கமிஷன் தனது இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமென்பது திண்ணம்.

தினசரிப் பத்திரிகைகளைப் பிரசுரிக்கும் ஐந்து ஸ்தாபனங்களைக் கட்டுப்படுத்த மூன்றுவித சிபார்சுகளைச் செய்துள்ளது பத்திரிகைக் கமிஷன். ஆனால் நடைமுறையில் அவற்றின் விளைவு வேறு விதமாகிவிடுமென்பதில் ஐயமில்லை. சிபார்சுகளைச் செயல்படுத்தும்போது ஒரே ஒரு விளைவுதான் தோன்றமுடியும். அப்பத்திரிகைகள் அனைத்தும் அரசாங்க நிர்வாகத்தின் கீழ் வந்துவிடுவதே அந்த விளைவு. இது தவிர்க்கமுடியாத விளைவாகும்.

பத்திரிகைக் கமிஷன் சிபார்சுகளின்படி லேக்ஹவுஸ் அரசாங்க உடைமையாகிவிடுவதுடன் இதர பத்திரிகை ஸ்தாபனங்களின் பங்குகள் விற்பனைசெய்யப்படும். உத்தேச பத்திரிகைக் கவுன்ஸிலுக்கு வழங்கப்படவிருக்கும் அதிகாரங்களைப் பார்க்கும்போது பங்குகள் வாங்கவோ, பத்திரிகைத் தொழிலில் மூலதனத்தை முடக்கவோ யாருமே துணிந்து முன்வரமாட்டார்கள். இதில் ஐயம் வேண்டாம், எனவே அப் பத்திரிகைகள் தாமாகவே அரசாங்கச் சொத்தாகிவிடும். தேசியமயமாக்கும் ஒரு புதிய முறை இது.

இத் தேசியமயத்தால் அந்தப் பத்திரிகைகள் பல அகால மரணத்துக்கு ஆளாகிவிடுமென்பதும் திண்ணம். வாரப்பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் கூட இந்த மரணத்தாக்குதலினின்று தப்பிப் பிழைக்கமுடியுமென்று கூறுவதற்கில்லை. ஏனெனில் அவற்றின் மென்னியைப் பிடித்து நெரிக்கப் பத்திரிகைக் கவுன்ஸில், அப்பீல் உரிமையை மறுக்கும் (சட்ட நுணுக்கப் பிரச்சினையில் தவிர) உத்தேச பத்திரிகை நீதிமன்றம் ஆகிய இரு பயங்கரக் கரங்கள் தயாராயிருக்கும்.

அரசாங்கத்தின்மீது அதிருப்தியை ஏற்படுத்தக்கூடிய சமூக—விரோத, தேசிய—விரோத செய்திகளையோ, படங்களையோ, கட்டுரைகளையோ, கதைகளையோ, கேலிச்சித்திரங்களையோ பிரசுரித்தால் அவர்களுக்கு பத்திரிகைக் கவுன்ஸில் தண்டனை விதிக்கும். இல்லையேல் பத்திரிகை நீதிமன்றம் தண்டனை விதிக்கும். இந்நீதிமன்றத்துக்கு அபராதத்துடன் இருவருட சிறைத்தண்டனையும் விதிக்கும் அதிகாரம் இருக்க வேண்டுமென்பது கமிஷனின் சிபார்சு.

இந்தத் தண்டனைகளிலிருந்து வாராந்தப் பத்திரிகைகளின், சஞ்சிகைகளின் ஆசிரியர்களோ, நிர்வாகிகளோ, உரிமையாளர்களோ தப்பிவிட முடியுமென்பது மிகமிகக் கடினம். ஏனெனில் அப்பத்திரிகைகள் பிரசுரிக்கும் விஷயங்கள் எதையும் அரசாங்கத்தின் மீது அதிருப்தி ஏற்படுத்து மென்றோ, சமூக விரோதமானதென்றோ, தேசிய விரோதமானதென்றோ விமர்சனம் செய்ய முடியும். ஆகவே அப்பத்திரிகைகளின் கழுத்தில் எந்த நேரத்திலும் கத்தி விழக் கூடும். பத்திரிகைகள் அன்றாடம் வெளியிடும் விஷயங்களிலும் பத்திரிகைக் கவுன்ஸில் ஆதிக்கம் வகிக்கும்.

வாராந்தப் பத்திரிகைகளைக் கொலை செய்யும் மற்றோர் ஆயுதமும் பத்திரிகைக் கவுன்ஸில் கையில் இருக்கும். அதுதான் கொலை செய்யப்படவேண்டிய பத்திரிகைக்குக் கவுன்ஸில் லைசென்ஸ் வழங்க மறுப்பது. ஒவ்வொரு பத்திரிகையும் வருடந்தோறும் கவுன்ஸிலிடம் லைசென்ஸ் பெற வேண்டுமென்று அறிக்கை கூறுவதால் வேண்டாத, விரும்பாத பத்திரிகைகளை ஒழித்துக்கட்டும் அதிகாரத்தைக் கவுன்ஸில் பெறுகிறது.

பத்திரிகைகள் அரசாங்கத்தின் கீழ் வந்துவிட்டால் மக்களின் நலன் கருதி செய்திகளையோ, கட்டுரைகளையோ வெளியிடமுடியாது. பத்திரிகைக் கவுன்சிலின் கருத்துக்கேற்ப, அதன் கொள்கையின் படி, அதன் விருப்பத்திற்கிணங்கவே செய்திகளைப் பிரசுரிக்க முடியும். நிரந்தரச் செய்தித்தணிக்கை ஏற்பட்டுவிடும். இக் கவுன்சிலின் கொள்கை ஆட்சியாளர்களைப் பாதுகாக்கக் கூடியதாயிருக்குமேயன்றி, மக்களைப் பாதுகாக்கக்கூடியதாக இருக்க முடியாது. எனவே இக் கவுன்சிலால் பத்திரிகைகள் அரசாங்கத்தின் ஊதுகுழலாக மாற்றப்பட்டுவிடும். இவ்வாறு பத்திரிகைச் சுதந்திரம் நசுக்கப்பட்டு நாட்டிலே எதேச்சாதிகாரம் தலைதூக்க வழி பிறக்கும்.

ஜனநாயக அரசாங்கம் பத்திரிகைகளின் விமர்சனத்துக்குப் பயப்படுவதில்லை. அரசாங்க இரகசியம் வெளியிடப்படுவதற்கும் அஞ்சுவதில்லை. காரணம், அத்தகைய அரசாங்கத்திடம் மக்களிடமிருந்து மறைத்துவைக்க வேண்டிய இரகசியம் எதுவும் இருக்க முடியாது. அரசாங்க நடவடிக்கைகளிலுள்ள குறைபாடுகளைப் பத்திரிகைகள் எடுத்துக்காட்டுவதால் ஓர் மக்களாட்சி வலுவடையுமேயன்றி பலவீனமடையாது. பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிப்பதானால் அது மக்களாட்சியாக இருக்கமுடியாது. உண்மைக்கு இருட்டடிப்புச்செய்து, மக்களை என்றென்றும் இருளில் நடமாடச் செய்யவேண்டிய தேவை ஓர் சர்வாதிகார ஆட்சிக்கு மட்டுமே ஏற்படுகிறது.

பத்திரிகைகளை ஆட்சியாளர் கைப்பற்றிய பின்னர், அவைகளைச் சிறுபான்மையோருக்கு எதிராக உபயோகிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டச் செய்திகளை இருட்டடிப்புச் செய்து, தங்களின் அடக்கு முறைகளையும் இன ஒழிப்பு நடவடிக்கைகளையும் நியாயமானதென மக்களுக்கு எடுத்துக் காட்ட பத்திரிகைகளை உபயோகிப்பார்கள்.

இன்றைய அரசாங்கத்தின் ஊதுகுழலாகப் பத்திரிகைகள் மாற்றப்படும். ஆனால், இதே பத்திரிகைகள் இன்றைய ஆட்சியாளரின் அழிவுக்கும் வழிவகுக்கலாம். பொதுத் தேர்தலென்று ஒன்று நடைபெற்று; அத்தேர்தலில் மாற்றுக் கட்சி ஆட்சிக்கு வந்தால், 'தன்வினை தன்னைச் சுடும்' என்ற முதுமொழிக்கேற்ப இதே பத்திரிகைகளின் துணைகொண்டு இன்றைய ஆட்சியாளர் அரசியல் அரங்கிலிருந்து ஒழிக்கப்படலாம் என்று எச்சரிக்கிறோம்.

# வாரப் பத்திரிகைகளை முடவும் கமிஷன் சிபார்சில் இடமுண்டு

## அரசாங்கக் கருத்தே மக்கள் கருத்தாகிவிடும்

பத்திரிகைக் கமிஷனின் சிபார்சுகளை அமுல் நடத்த விரைவில் மசோதா தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனச் செய்திகள் கூறுகின்றன. பத்திரிகைகள் அரசாங்க ஆதிக்கத்தின் கீழ்வரும் போது அரசாங்கத்தின் கருத்தே மக்கள் கருத்தாகிவிடும். அதற்கு அப்பாற்பட்ட கருத்தைப் பெற அவர்களுக்கு உரிமை இருக்காது. அரசாங்கத்தின் கருத்து மக்கள் மீது பல வந்தமாகத் திணிக்கப்படும். அதைத்தான் தேசிய சோஷலிசம் என்பது-அதற்கு மற்றொரு பெயர் பாஸிஸம்.

பத்திரிகைக் கமிஷனின் சிபார்சுகளுக்கு எல்லாப் பக்கங்களிலிருந்தும் பலத்த கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் பத்திரிகைச் சுதந்திரத்தில் கைவைக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்பதைச் சற்று ஆராய்வோம்.

### ஆட்சியாளரின் அச்சம்

அரசாங்க நிர்வாகத்தில் ஊழல்கள் மலிந்துகிடக்கின்றன. பொருளாதார நெருக்கடியைக் கூட்டாட்சியாலும் தீர்க்க முடியவில்லை. மக்களிடையே அதிருப்தி வளருகிறது. உரிமைகள் பறிக்கப்பட்டதால் சிறுபான்மையோர் குமுறுகின்றனர். ஆட்சியாளரின் திறமையின்மை நாட்டை நாசத்தின் விளிம்பிற்கே இழுத்துச் சென்றது. இதற்கிடையே கூட்டரசாங்கத்துள் பதவிப் போட்டி, பூசல், சிண்டுபிடித்தல், கழுத்தறுப்பு வேறு நடைபெறுகின்றன.

இந்தச் செய்திகளைப் பத்திரிகைகள் மக்களிடம் எடுத்துச் செல்லுவதைப்பார்த்து ஆட்சியாளர் அஞ்சுகின்றனர். நடுங்குகின்றனர். அதே சமயத்தில் ஆத்திரப்படுகின்றனர்.

இதனைத் தடுக்க ஒரேவழி பத்திரிகைகளைத் தங்கள் கையில் எடுத்துக் கொள்வது தான், என்று ஆட்சியாளர் திட்டமிட்டுள்ளனர்.

பத்திரிகைகளைத் தம் வசப்படுத்திவிட்டால், உண்மைச் செய்திகளை இருட்டடிப்புச் செய்யலாம். புனையப்பட்ட செய்திகளையும், திரிக்கப்பட்ட செய்திகளையும் பிரசுரித்து மக்களை இருட்டில் மூழ்கடிக்கலாம். தாங்கள் என்றும் சர்வாதிகாரிகளாக உலாவலாம் என்பதே ஆட்சியாளரின் எண்ணம்!

### எதேச்சாதிகார கவுன்சில்

எதேச்சாதிகாரங்களைக் கொண்ட ஒரு பத்திரிகைக் கமிஷனை நிறுவ பத்திரிகைக் கமிஷன் சிபார்சு செய்துள்ளது. இக்கவுன்சிலின் அங்கத்தினர்களை நியமிக்கும் முறையைப் பார்த்தால், அது சுதந்திரக்கட்சித் தலைவியின் கைப்பாவையாக நின்றுடும் என்பதில் ஐயமில்லை. இக் கவுன்சில் மூலமாக எல்லாப் பத்திரிகைகளையும் கட்டுப்படுத்தும் சர்வாதிகாரத்தை ஆட்சியாளர் பெற்றுக் கொள்வர்.

இது இந்நாட்டில் எஞ்சியுள்ள ஜனநாயகத்தின் ஆணிவேரையும் அறுப்பதாகும்.

இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகளிலும் பத்திரிகைக் கவுன்ஸில்கள் உண்டு. ஆனால் அவைகளுக்கில்லாத விசேட அதிகாரங்கள் இக் கவுன்ஸிலுக்கு வழங்கப்படவிருக்கிறது.

### தேச விரோதச் செய்திகள்

அரசாங்கத்தின்மீது அதிருப்தி ஏற்படக் கூடியதாக சமூக—விரோத, தேசிய விரோதச் செய்திகளை வெளியிட்டால் அப்பத்திரிகைகளின் ஆசிரியர்களும் நிர்வாகிகளும் சிறைச்சாலைக் கம்பிகளை எண்ண வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

சுதந்திரன் அரசியல் விமர்சகர்

சமூக—விரோத, தேசிய விரோத செய்திகள் யாவை என்பதைக் கமிஷனின் அறிக்கை கூறவில்லை.

"தமிழ் பேசும் இனத்துக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டும், தமிழ் பேசும் மக்களுக்குச் சமஷ்டி ஆட்சி முறை வேண்டும்" என்றெல்லாம் 'சுதந்திரன்' எழுதினால், அது தேச விரோதமான செய்தியெனக் கூறித் தண்டிக்கப்படலாம்.

திருகோணமலைப் பகுதியில் பௌத்த சிங்களவர் குடியேறுவதைச் 'சுதந்திரன்' கண்டித்தால் அது மதவிரோத, சமூக—விரோதச் செய்தியெனக் கூறி பத்திரிகை நீதி மன்றத்தில் நிறுத்தி விசாரிக்கப்படலாம். தேசிய நலன்களுக்கு விரும்பத்தகாத பத்திரிகையெனக்கூறி எந்தப் பத்திரிகைக்கும் லைசன்ஸ் வழங்க பத்திரிகைக் கவுன்ஸில் மறுக்கலாம்.

இக்கவுன்ஸிலின் லைசன்ஸின்றி எந்தப் பத்திரிகையும் நடத்த முடியாது.

வாரப் பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவின் நடவடிக்கைகளிலும் பத்திரிகைக் கவுன்ஸில் தலையிட்டு தொல்லை விளைவிக்கலாம்.

ஆட்சியாளர்களுக்கு 'ஆமாஞ்சாமி' போடாத எந்தப் பத்திரிகைக்கும் பத்திரிகைக் கவுன்ஸில் உடனடியாக மூடுவிழா நடத்திவிடுமென்பதில் சந்தேகமில்லை.

### அரை இலட்சம் வீண் செலவு

பாடசாலை, பஸ், துறைமுகம் ஆகியவற்றை தேசியமயமாக்கியதுபோல பத்திரிகைகளையும் ஒரேயடியாகத் தேசியமயமாக்கியிருக்கலாமே! அதற்கு ஒரு கமிஷன் எதற்கு? அக் கமிஷனுக்கு ரூபா 45,000 ஏன் செலவிட வேண்டும்?

பத்திரிகைகள் கைப்பற்றுவதை எதிர்த்துக் கிளம்பும் மக்கள் எதிர்ப்பைமுறியடிப்பதற்காக ஆட்சியாளர் இந்த உபாயத்தைக் கையாண்டார்களா? ஜனநாயக முறைப்படி கமிஷன் அமைத்து, பொதுமக்களின் கருத்தை அறிந்து, மக்கள் கருத்தின் அடிப்படையில் கமிஷன் சிபார்சுகளைச் செய்து, அந்தச் சிபார்சுகளை அமுல்நடத்தச் சட்டம்செய்தோம் இவ்விஷயத்தில் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கிணங்கவே நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று பின்னர் கூறுவதற்காகவே இம்மாதிரி நடவடிக்கைஎடுக்கப்பட்டதா?

### ஏகபோக உரிமை

சில தினசரிகள் பொறுப்புடன் நடந்துகொள்ளவில்லையென்பதும், பொதுநலனைவிட சுயநலனையேபெரிதாகக் கருதியதென்பதும், உண்மையே. சில பத்திரிகைகளின் மீது சிலர் கொண்டுள்ள ஏகபோகஉரிமைநாட்டுக்கே தீமை என்பதும் உண்மையே. ஓர் ஆங்கிலத் தினசரி மிகக் கீழ்த்தரமான முறையில் செய்திகளைவெளியிட்டு பத்திரிகை உலகத்தைப் பாழ்படுத்தியதை அனைவரும் அறிவர்.

இக்குறைபாடுகளை நீக்குவதற்குள்ள வழிபத்திரிகைச் சுதந்திரத்தை நசுக்குவதுதானா? ஏகபோக உரிமையை முறியடிக்க பத்திரிகைகளிடையே போட்டி ஏற்பட வேண்டும். அதற்குப் புதிய பத்திரிகைகள் தோன்ற வேண்டும், தாள் விலையைக் குறைத்து, அச்சு இயந்திரங்களை இறக்குமதி செய்ய அனுமதித்து, பத்திரிகையின் விலையையும் பக்கங்களையும் கட்டுப்படுத்தி, விளம்பர விகிதங்களுக்கும் தக்க ஏற்பாடுகள் செய்து, வங்கிகள் மூலம் மூலதனம் கிடைக்க ஏற்பாடு

(9-ம் பக்கம் பார்க்க)

# நூல் வெளியீட்டு விழா

சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கினுள் ஒன்றாகிய உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த கொடிக் கவி நூலின் உரை வெளியீட்டு விழா 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வண்ணை நாவலர் பாடசாலை மண்டபத்தில் திரு. இரகுநாத முதலியார் தலைமையில் நடைபெறுகிறது.

உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் முதற் பிரதியைப் பெற்று விற்பனையைத் தொடக்கி வைப்பார். திருவாளர்கள் நம. சிவப்பிரகாசம், இ. திருநாவுக்கரசு, பொன். முத்துக்குமாரு ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை துறைமுகத் தொழிலாளர் பரிதவிப்பு

## வரிச்சலுகை இல்லாததன் எதிரொலி

திருகோணமலைத் துறைமுகத்தில் வேலை செய்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகின்றனர். ஆபத்தான வேளையில் இந் நாட்டின் பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்துவதற்காகப் பாடுபட்ட தொழிலாளர்களுக்கு இத்தகைய அநீதி புரிவதற்கு ஏதுவாக விருந்தது வரிச்சலுகை இரத்தானதே என்று கூறப்படுகிறது.

கடந்த சில வருடங்களாக கொழும்புத் துறைமுகத்தில் தொடர்ந்து நடைபெற்ற வேலை நிறுத்தங்களினாலும், ஆமைவேக வேலைகளினாலும் சரக்கு ஏற்றுமதி இறக்குமதியில் பெரும் தாமதம் ஏற்பட்டு வந்தது. வெளி நாடுகளில் இருந்து சரக்குக் கொண்டு இலங்கை நோக்கி வந்த பல கப்பல்கள் மாதக் கணக்காக காத்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கப்பல் கம்பெனிகளுக்கு இலட்சக்கணக்கான ரூபாய்களை இலங்கை அரசு தாமதச் செலவுக்காக வாரிக் கொடுக்க வேண்டியிருந்தது.

இது மட்டுமல்லாமல் இந் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் தேயிலை, இரப்பர் போன்ற பொருட்களும் தேங்கிக் கிடந்தன. இந்நெருக்கடியைச் சமாளிக்க திருகோணமலை, காலி ஆகிய துறைமுகங்களை உபயோகிக்க அரசு தீர்மானித்தது. கப்பல்கள் இவ்விரு துறைமுகங்களுக்கும் அனுப்பப்பட்டன. திருகோணமலைத் துறைமுகத்தில் வசதிகள் கூடுதலாக இருந்தமையினால், இத்துறைமுகமே அதிகமாக உபயோகிக்கப்பட்டது.

தேயிலை ஏற்றுமதிக் கம்பெனிகள் தங்கள் சரக்குகளை திருகோணமலைக்கு அனுப்புவதற்கான செலவைக் கட்டுப்படுத்துவதற்காக, ஏற்றுமதித் தீர்வையில் 2 சதவீதம் கழிவு கொடுக்கப்பட்டது.

திருகோணமலைத் துறைமுகம் சிறப்புற இயங்கியமையினால், பெரும்பாலும் தமிழ் பேசும் தொழிலாளர்கள் பயனடைந்தனர். தமிழ் பேசும் தொழிலாளரின் வருவாயை முறியடிக்கும் வகையில் அமைச்சர் அனில் முனசிங்கா இதுவரைகாலமும் அளிக்கப்பட்டுவந்த 2 சதவிகித வரியை நீக்கிவிட உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

வரிச்சலுகை இரத்தானதைத் தொடர்ந்து திருகோணமலைத் துறைமுகத்தில் தொழில் புரிந்து வந்த பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களை ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்கள் வேலையினின்றும் நீக்கிவிட்டனஎன்று தெரியவருகிறது.

திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு எஸ். எம். மாணிக்கராசா இதையிட்டு கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்திலும்குறிப்பிட்டிருக்கிறார்.

ஆபத்தான வேளையில் இந் நாட்டின் பொருளாதாரச்சிக்கலை சமாளிக்க உதவிய தொழிலாளர்களை அரசியல் காரணங்களுக்காக பழிவாங்குவது நல்லதல்ல என்று, திருகோணமலையிலுள்ள தொழிலாளர் பிரதிநிதி ஒருவர் நமது நிருபரிடம் கூறினார்.

## இன ஒழிப்புச் .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றை வாங்க முடியும். புதிய சட்டமொன்றின் பிரகாரம் தமிழ் அல்லது முஸ்லிம் பெயர்களுடையவர்கள் சந்தேகப் பிரஜைகளாகியுள்ளனர். அவர்களுடைய பிரஜாவுரிமை நிரூபிக்கப்படாத பட்சத்தில் அவர்கள் காணியோ, வீடோ வாங்க முடியாது. கண்டியில் மட்டும் நானூறுக்கு மேற்பட்ட காணிப் பத்திரங்கள் பதியப்படாதிருப்பதாக அறிந்தேன். இத்தகைய தீமை பயக்கும் திட்டங்களை அரசு விட்டொழிக்க வேண்டும்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் மூன்றுலை சூளைக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய கன்னுகம் மின்சார நிலையத்தை உடனடியாக அமைக்க வேண்டும். யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குத்தேவையான ஒன்பது ஆயிரம் கிலோவாட் மின்சாரத்தை உடனடியாக உற்பத்தி செய்யவல்ல ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் விளையும் வெங்காய உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும் உதவியைக் கூட்டுவதுடன் சேமிப்புச்சாலையும் துரிதமான ஏற்றுமதி வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும்.'

## பொலீஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சில உயர்தர அதிகாரிகளும் இந்த வகுப்புவாத இயக்கங்களின் தூண்டுதல்களுக்கு உடந்தையாகவிருப்பதாகவும் கூறப்படுகிறது. இவ்வியக்கங்களின் திட்டங்களுக்கு அனுசரணையாகவிருக்க முடியாதவர்களைப் பல தரப்பட்ட துன்பங்களுக்கும் உள்ளாக்கி விடவும் பல முறைகள் எத்தனங்கள் புரியப்பட்டிருப்பதாகவும் அறிகிறோம்.

## பெரிய மைதானத்தில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்குக் கிடைத்த பல வசதிகள் இம்முறை கிட்டாமற் போய்விடும் என்ற பயம் வரவேற்புக் குழுவிடம் ஏற்பட்டிருந்தது. திருகோணமலை அரசாங்க அதிபருக்கும் திருகோணமலைப் பட்டின சபைத் தலைவருக்குமிடையே, பெரிய மைதானத்தின் மீதான அதிகாரமும், ஆட்சியும் பற்றிய சச்சரவு காரணமாக, முன்னைய தடவைகளிற் போல இம்முறை கட்சியின் இறுதிப் பொதுக்கூட்டம் மைதானத்தில் நடைபெற முடியாமற் போகுமென்றே கருதப்பட்டது.

### மைதானத்திலேயே பொதுக்கூட்டம்

அரசாங்க அதிபர் மைதானத்தை உபயோகிக்க அனுமதி அளித்தாலன்றி, மைதானத்தில் பொதுக் கூட்டத்திற்கான ஒலிபெருக்கி அனுமதிச் சீட்டு (லைசென்ஸ்) பொலீசார் அளிக்கக் கூடாதென்று அரசாங்க அதிபர் பொலீசாருக்குத் தெரிவித்திருந்தார். வரவேற்புக் குழுவோ, அரசாங்க அதிபரிடம் மைதானத்தை உபயோகிக்க அனுமதி பெற விரும்பவில்லை. ஏனெனில், அது திருகோணமலைப் பட்டினசபைத் தலைவரின் நிலையைப்பாதிக்குமாதலினால். பட்டின சபைத் தலைவரிடம் அனுமதி பெற்ற பின், ஒலி பெருக்கி அனுமதிச்சீட்டிற்காக, வரவேற்புக் குழு பொலீசாரிடம் விண்ணப்பம் செய்திருந்தது. ஆனால் அனுமதி கிடைக்குமென எதிர்பார்க்கவில்லை. என்றாலும், இப்பொழுது அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இறுதி நாள் பொதுக்கூட்டம் முன்னைய வருடங்களில் நடைபெற்ற இடத்திலேயே நடைபெறும். கடந்த காலங்களில் செய்தது போல, இம்முறையும் மேடையை அலங்கரிக்கும் பொறுப்பினை 4ம் வட்டாரத்து வாசிகளே மேற்கொண்டுள்ளனர்.

### மற்று நிகழ்ச்சிகள்

முந்திய நிகழ்ச்சிகள், பட்டின சபை மண்டப[illegible] மண்டப முன்றலிலும் நடைபெறும். முன்றலில், திருகோணமலைப்பட்டினசபைத் தலைவர், டாக்டர் எஸ். சிவானந்தம், விசேட மேடையொன்றினை அமைக்க ஏற்பாடுகள் செய்கிறார்.

### சரித்திரத்தில் இடம் பெறும்

இந்த எதிர்பாராத ஊக்கங்களினால் உற்சாகப்படுத்தப்பட்ட திரு. எஸ். எம். மாணிக்கராஜா, இந்த அதிர்ஷ்டத் தொடரை விடாது பின் பற்றி, இம்முறை மாநாட்டை மிகச் சிறப்பான முறையில் நடாத்தி வைக்கத் தீவிரமாக முனைந்து வருகிறார். அவரது முயற்சிகள் வெற்றிபெறின், 1964ம் ஆண்டு திருமலை மாநாடு, தமிழ் பேசும் மக்களின் சரித்திரத்தில் மறக்க முடியாத இன்னுமோர் நிகழ்ச்சியாக அமையுமென்பது நிச்சயம்.

மாநாட்டுக்கு வரும் திரளான மக்களை வரவேற்கும் சின்னமாக, திருமலை வாழ் தமிழ் பேசும் மக்களின் வீடுகள் தோறும் ஏற்கனவே தமிழரசுக்கட்சியின் மூவர்ணக்கொடிகள் காற்றில் சலசலத்து நிற்கின்றன.

## சாதி ஒழிப்பு இயக்கம்

சாதிவித்தியாச ஒழிப்பு இயக்கத்தின் செயற்குழுக் கூட்டம் 16-8-64 காலை யாழ்ப்பாணம் நகர மண்டபத்திலுள்ள சபைக் குழு அறையில் நடைபெற விருக்கிறது.

சாதி ஒழிப்புப் பற்றி தொகுதி வாரியாக கருத்தரங்கம் நடாத்துதல் போசனசாலைகள், சைவ ஆலயங்கள் திறந்து விடுதல், காணியற்றோருக்கு குடியேற்றத் திட்டங்களை ஒழுங்கு செய்தல் போன்ற பிரச்சினைகளையிட்டு அன்றைய தினம் ஆராயப்படும்.

இவ்வியக்கத்துடன் இணைந்து செயலாற்ற பேராசிரியர் கா. பொ. இரத்தினம், வழக்கறிஞர் திரு. இராசநாயகம், மானிப்பாய் பட்டினசபைத் தலைவர் திரு. முத்துக்குமாரசாமி உடுப்பிட்டி க. ஜெயக்கொடி, காந்திய சேவா சங்கத்தைச் சேர்ந்த திரு. வேலாயுதபிள்ளை ஆகியோர் முன்வந்திருப்பதாக இயக்கச் செயலாளர்களான திரு. [illegible] கதிரவேற்பிள்ளை, திரு. [illegible] எம். [illegible] [illegible]ள்ளனர்.

## வாரப் பத்திரிகை...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து புதிய பத்திரிகைகள் தோன்ற எல்லா வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும்.

அதுதான் ஜனநாயக முறையில் ஏகபோக உரிமையை முறியடிக்கும் வழி. அதை விடுத்து பத்திரிகைகளையே தேசியமயமாக்குவதென்றால் ஆட்சியாளருக்கு சர்வாதிகார நோக்கம் இருக்கிறதென்பது புலனாகிறதல்லவா?

விரைவில் எதிர்பாருங்கள்

நிலத்தில் 3,000 மைல்களும், நீரில் 2,000 மைல்களும், வானத்தில் 10,000 மைல்களும் பயணம் செய்து

மலேயா, பர்மா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிசித் தீவுகள்

உட்பட தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்தும் சென்று, அந் நாடுகளில் வாழும் தமிழர் நிலையினை நேரில் கண்டு சேகரித்த விபரங்களை விளக்கும் பிரயாணக் கட்டுரை

"தமிழ் தந்த பயணம்".

உலகத் தமிழ் மன்றத் தலைவர்

பேராசிரியர் கா. பொ. இரத்தினம் எழுதுகிறார்.

## 'காலத்தின் குரல்கள்' அறிமுக விழா

பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்களின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு நூலான 'காலத்தின் குரல்கள்' அறிமுக விழா 15ம் திகதி பிற்பகல் வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் அ. சின்னத்தம்பி வெளியீட்டுரை நிகழ்த்துவார். திரு. கே. எஸ். நடராசா, திரு. ச. தனஞ்செயராசசிங்கம், ஜனாப் எம் ஏ. ரகுமான் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

பாரதிதின சிறப்பு நிகழ்ச்சி பட்டி மன்றம் 'என்ன செய்து விட்டான் பாரதி' என்ற தலைப்பில் நடைபெறும்.

திரு. க. நவசோதி, ஜனாப் எம். ஏ. எம். சுக்ரி, செல்வி யோகா வல்லிபுரம் ஆகியோர் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்கள்.

கல்வி

மாணவ ஆசிரியர் பரீட்சைக்கான தமிழ் மொழி, பொதுவிவேகம், பொது அறிவு ஆகிய பாடங்கள் அடங்கியுள்ள மாதிரி வினா விடைப் புத்தகம் ஒன்று ரூபாய் 5/= சர்வகலாசாலை போதனா கழகம் (U. T. I)
540, மருதானை வீதி, கொழும்பு—10.

வாய்மொழி வகுப்புகள்

செப்டம்பர் 1ம் திகதி ஆரம்பமாகும் புதிய தவணைக்கான பிரவேசங்கள் இப்பொழுது ஏற்கப்படுகின்றன.

பின்வரும் வகுப்புகளுக்கு:
ஜி. ஸி. ஈ. சாதாரணம்
கலை, விஞ்ஞானம், வணிகம்—டிசம்பர் 1964
ஜி. ஸி. ஈ. உயர்தரம்—
கலை, விஞ்ஞானம்—டிசம்பர், 1965
ஜி. ஸி. ஈ. ஆரம்ப வகுப்பு (பிரெப்)
விஞ்ஞானம்

வர்த்தக வகுப்புகள்!
தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்குப்பதிவியல், வர்த்தகம் முதலிய பாடங்கள்—
ஆங்கிலம்—தமிழ் மூலம்
கடந்த பரீட்சைகளில் எமது மாணவர் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றி பெற்றுள்ளனர்.

விபரங்களுக்கு
யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,
நெல்லியடி — கரவெட்டி
கிளை:
107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தலைமை நிலைய அறிக்கை

ஆகஸ்டு மாதம் 21, 22, 23, ம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவிருக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 9 வது மாநில மாநாட்டின் அரசியல் மாநாட்டில் கலந்து கொள்ளுவதற்கு கட்சி உறுப்பினர்கள் அனைவரும் முன் கூட்டியே பிரவேசச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பிரவேசச் சீட்டு இல்லாதவர்கள் அரசியல் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது. உறுப்பினர்கள் அனைவரும் நிர்வாகச் செயலாளர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, 16, அல்பிறட் ஹவுஸ் தோட்டம், கொழும்பு-3 என்ற முகவரிக்கு எழுதி பிரவேசச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

16, அல்பிறட் ஹவுஸ் தோட்டம்,
கொழும்பு-3
1—8—64

பொதுச் செயலாளர்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பொய்மை

தெளிவத்தை ஜோசப்

புணப் படையலின் முன் அமர்ந்திருந்தார் துரை. நீண்டு விரிந்துகிடந்த சம்பளச் செக்ரோலின் முன் துரைக் கருகில் நின்ருர் கிளார்க். ஆபீஸைச் சுற்றி ஒரே ஜனக் கூட்டம்.

அப்படி என்ருல் தோட்டத்தில் 'சம்பளம்' என்று அர்த்தம்.

'எஸ் வில் ஸ்டார்ட்' என்ற துரையின் குரலைத் தொடர்ந்து சுருதி லயத்துடன் தாளம் விடாமல் பெயரையும் தொகையையும் அய்யா வாசிக்க துரை அள்ளி நீட்டிக் கொண்டே இருந்தார்.

'குருடர் செவிடர்' நிதிச் சுண்டில் 'டிங்' கென்று விழுந்த சில்லறை அப்போது 'டிக்' கென்று விழுந்து சுண்டு நிறைவதை உணர்த்துகிறது.

பழக்கப்பட்ட துரையின் கை 'பட் பட்' டென்று காசை எண்ணி வீசிறிக் கொண்டிருந்தது.

ஆயிரத்துச்சொச்சம் ஆட்களை உள்ளடக்கிய முப்பது பக்கச் செக்ரோல் நாற்பது நிமிடத்தில் தனது பதின் மூன்றும் பக்கத்தில் நின்றது.

அறுபத்தி ஏழு இருபத்தைந்து என்று அய்யா கூறி முடிப்பதற்குள் ஐம்பது ரூபாய்க் கட்டிலிருந்து ஒன்றும், பத்து ரூபாய்க் கட்டிலிருந்து ஒன்றும், ஐந்து ரூபாய்க் கட்டிலிருந்து ஒன்றும், இரண்டு ரூபாய்க் கட்டிலிருந்து ஒன்றுமாக இழுத்தடுத்து சில்லறையை அதன் மடியில் போட்டு நீட்டிக் கொண்டிருந்தார் துரை.

வெளியிலிருந்து நீண்ட கை சம்பளத்தை வாங்கவில்லை.

'எனக்குச் சம்பளம் குறைவு......'

மேலுதட்டின் துடிப்பில் மீசையாட நின்றுகொண்டிருந்தான் அவ்வாலிபன்.

துரை கிளார்க்கைப் பார்க்க கிளார்க் அவனைப் பார்த்தார்.

'நீ என்ன சொல்றே?...'

'இருபத்தி ஆறு நாள் வேலை; மேல் கொழுந்து; கொந்தரப்பு ஒரு பெண்டேகால், எல்லாத்துக்கும் சம்பளம் கொறையுது...'

'அதெல்லாம் சரியா இருக்கு, நீ சம்பளத்தை வாங்கு. விபரம் வேணும்ன்னா நாளைக்குக் கேளு. அது தான் வழக்கம். சம்பளத்து வாசல்லே வம்புபண்ணாதே...'

'என்ன கங்காணி நமக்கு நேரம் விணாகுதில்லியா...' துரை பெரிய கங்காணியைப் பார்த்தார்.

'ஐநூறு ஆளுக்கு அரை மணியிலே போடுவேன் கங்காணி நான். இப்படி ஒவ்வொருத்தனும் விவரம் கேட்டுக்கிட்டிருந்தால் நாலு நாள் வேணும்...'

'டேய் நீ சம்பளத்தை வாங்குறியா இல்லியா...' பெரிய கங்காணியின் அதட்டல்.

'நீங்க சும்மா இருங்க கங்காணி' ஒருமையில் ஆரம்பித்ததை அது பிசகு என்று பன்மையில் முடித்தான். 'அவருக்கு மட்டும் நேரம் வீணாவுதாமில்லே ......நாங்க கஷ்டப்பட்டுச் சம்பாதித்தது குறையுதேன்னு கேட்டால் விளக்கம் தர ஏலாதோ...!'

'அதுதான் அய்யா சொன்னுரே...'

'அய்யா சொல்லிட்டா... உன்னே இருக்கிறவங்க சொல்லுறத்துக் கெல்லாம் வெளியே இருக்கிறவங்க தலையாட்டுற காலமில்லே இது..'

'இரும்புத்திரை' சினிமா ஞாபகத்திற்கு வந்திருக்கலாம். இல்லையசு வேறு.

'எதிர்த்தா பேசுறே ஒனக்கு தெண்டம் போடச் சொல்றேன் பார்.' பெரிய கங்காணி கத்தினுர்.

'போட ஏலுமா கங்காணி தெண்டம்...'

'முடியுமான்னு கேளுடா..'

'முதல்லே தெண்டத்தைப் போடச் சொல்லு அப்பறமா சம்பளத்தை வாங்குடா...'

'ஒருத்தனும் சம்பளம் வாங்காதேடா...' இப்படிக் கூட்டத்தில் முளைத்தெழுந்தன பல குரல்கள். குருதி கொப்பளித்தோடும் குமரப் பையன்களின் குரல்கள் அத்தனையும்.

துரையின் முகம் ரத்தம் கக்கியது. 'கமான் க்ளோஸ் இட்' என்று கிளார்க்கைப் பார்த்துக் கத்தினுர். படார் எனச் சன்னலை மூடினுர். பணத்தை எல்லாம் வாரிச் சுருட்டிப் பையிலே போட்டுக் கட்டி தானும் வாலிபன் தான் என்பதை நிரூபித்துக் கொண்டார்.

'பாவிப்பயலுக அனியாயமா கெடுத்துக்கிட்டானுகளே' என்று அங்கலாய்த்த ஒரு கிழவனை இழுத்து ஒதுக்கிவிட்டு முன்னே வந்தான் ஒரு வாலிபன்

ஆபீஸ் சிமிந்திக் கட்டில் ஏறி நின்று கூட்டத்தைப் பார்த்தான். கூட்டத்தில் பேசுவதென்ருல் அவனுக்கு அலாதி ஆசை. ஆகவே கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் தொடங்கினுன். 'தோழர்களே துரை பணத்தை மூட்டை கட்டி விட்டாரே, ஜன்னலை மூடி விட்டாரே என்று கவலைப் படாதீர்கள், கலங்காதீர்கள்.

ஜனங்களே உள்ளம் உடைந்து போகாதீர்கள். நான் எடுத்துத் தருகின்றேன்...'

'வாட்!' துரை மேசையிலிறக்கிய குத்தில் ஜன்னல் கொக்கி கிடுகிடுத்தது.

'ஜனங்களே உள்ளம் உடைந்து போகாதீர்கள்' என்ற பிரசங்க மொழி அவருக்கு 'ஜன்னலை உடைத்து' என்று கேட்டுவிட்டது.

ஜன்னலைத் திறந்து கொண்டு கத்தினுர். 'கங்காணி நீ சாட்சி, ஜன்னலை உடைத்துச் சல்லியை எடுத்து நான் தாரேன்னு இவன் சொன்னனை இல்லியா. 'ஐ வில் சீ டு இட்' என்றபடி டெலிபோனைக் கையிலெடுத்தார். யாருக்கோ பேசினுர். வைத்தார்.

'நான் அப்படியா கங்காணி சொன்னேன்' என்று அவன் பாய, 'அவன் அப்படிச் சொல்லலையா கங்காணி. சாயிக்குப் பயந்து சொல்லு? உன் ஆளுன்னு பொய் சொல்லாதே' என்று துரை அழுத்திப் பிடிக்க தராசின் ஊசியாய்த் தள்ளாடிய கங்காணி கனம் மிகுந்த பக்கம் சரிந்துவிட்டார்.

'அப்படித்தானேடா சொன்னே' என்ற கங்காணியின் அபாண்டம் ஒன்றும் பெரிதாகப் படவில்லை அவனுக்கு.

தன்னுடைய 'றிப்போர்ட்' புத்தகத்தில் அதை எழுதி பெரிய கங்காணியிடம் ஒப்பமும் வாங்கிக் கொண்டார் துரை.

துரையின் புத்தகத்தில் கையெழுத்திடுவதே பெருமை என்று எண்ணும் கங்காணியும் ஏதோ பென்சிலைப் பிடித்துக் கிறுக்கி வைத்தார்.

அடுத்த நாள் பெரிய துரை வந்துமீதி ஆட்களுக்கு சம்பளம் போட்டார். எல்லாம் முடிந்ததும் அந்த வாலிபனைக் கூப்பிட்டு 'உனக்கு ஒரு மாதம் நோட்டீக' என்று அமைதியாகக் கூறினுர்.

நேற்றைய நிகழ்ச்சி அவனை இன்று எரிக்கிறது. இத்தனை தூரம் போகும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

தான் அப்படிச் சொல்லவில்லை என்று சத்தியம் செய்தான், அழுது கூடப் பார்த்தான் 'இதோ உன் பெரிய கங்காணியைக் கேள்'.

அவன் அப்படிச் சொல்லவில்லை என்பது பெரியவருக்குத் தெரியும். இருந்தாலும் துரையின் நல்லெண்ணத்தில் தானிருக்க வேண்டும் என்ற எண்ணம்.

படித்தேன் கிழித்தேன் என்று காசையும் காலத்தையும் போக்கிவிட்டு மகன் ஒருவன் கிடக்கிருன் வீட்டில். அவனுக்கு ஒரு வழி செய்ய வேண்டும். ஆகவே பெருமாள் மாடாகி தலையை ஆட்டினுர் 'ஆமாங்க ஆமாங்க' என்று.

நாள் தான் உருண்டை ஆயிற்றே என்ற நினைவில் உலகம் சுற்றிக் கொண்டே இருந்தது புது மலைக் கன்னி மலையாகி கன்னிமலை பழையமலையாகி, பழையமலை கல்வாத்துமலையுமாகி வெட்டப்பட்டுப் பொட்டலாகி விட்டது. காலத்தின் ஓட்டத்திற் கிடு கட்ட இயற்கையின் வளர்ச்சியிலும் ஒரு அசுர வேகம்.

பெரிய கங்காணி மலையில் நின்ருர். இருவர் ஏதோ சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். 'என்னடா சத்தம் அங்கே, வாயை மூடிக் கிட்டு வேலையைச் செஞ்சாக் கண்ணை மூடிக்கிட்டுக் காசைக் குடுப்பான், அதை விட்டுட்டு வாயடிக்கிறதும், சட்டம் பேசிறதும் அப்புறம் கஷ்டப்படுறதும் போன வருஷம் ஒருத்தன் சட்டம் பேசிவிட்டு ஜில்லாவுக்கும் தலைவர் வீட்டுக்குமா அலையுருனே தெரியுதா...'

இளிப்பாய் அதையே கூறிக் கொண்டிருந்தார் பெரிய கங்காணி, அவன் போனதிலிருந்து.

பங்களா தோட்டக்காரன் ஓடிவந்து துரை பெரிய கங்காணியை இரண்டு மணிக்கு ஆபீசுக்கு வரச் சொன்னதாகக் கூறினுன்.

'மவனை வேலை பழகப் போடனும்னு கேட்டேனே அதுக்கா இருக்குமோ...... வேறே எதுக்கா இருக்கப் போவுது...அந்தப் பயலுக்கு ஏத்துக்கிட்டு துரையைப் பகைச்சுக்கிட்டிருந்தேனா முன்னு......ஆவுமா! ஊம், உருட்டுப் பெரட்டுக்குத் தான் இது காலம்.'

மனம் அசைய கால் நடந்தது.

மணி பிற்பகல் இரண்டு.

உதட்டின் குறுக்கே ஒட்டிய விரலிடுக்கில் 'பீச்' சென்று வெற்றிலை எச்சிலை உமிழ்ந்து உள்ளங்கையால் உதட்டைத் துடைத்தவண்ணம் துரை முன் நின்ருர். ஒரு நீண்ட சலாம் போட்டார்.

'சலாம் கங்காணி. அந்தப் பயல் மனேஜர் மேலே வழக்குப் போட்டிருக்கான்.'

எடுத்த எடுப்பில் விஷயத்தைக் கூறினுர் துரை.

'அடப்பாவி அடுக்குமா இதெல்லாம்...'

'வர்ர செவ்வாய்க்கிழமை வழக்கு. பெரிய துரை,நான், நீ எல்லாம் போவனும். கோச்சிக்கும் சாப்பாட்டிற்கும் தோட்டம் காசு தரும். உனக்கு கொழும்பு தெரியுமா கங்காணி...?'

'தெரியாதுங்களே'

கங்காணியின் முகத்தில் அள்ளித் தெளித்திருந்தது அப்பட்டமான அசடு.

தலைகூட நரைத்து விட்டது — தலை நரைத்துவிட்டது என்று சொன்னேன். யாருக்குத் தெரியும் அது. எனக்கு விவரம் தெரிய நானே கண்டதில்லை அவருடைய தலையை. கட்டிய முண்டாசை எப்போதாவது அவிழ்த்திருந்தால் தானே தலை தெரிய.

'ஹி.... ஹி......எனக்கு வதுளையே கூடத் தெரியாதுங்க. சாமான் சட்டு எல்லாம் அவள்தான்...' தலையை— இல்லை இல்லை—தலைப்பாகையைச் சொறிந்து கொண்டார் பெரிய கங்காணி.

'சரி சரி நானே உன்னைக் கொண்டு போகின்றேன் காரில்' என்று கூறியதுடன் கோர்ட்டில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதெல்லாம் பாடமாய்ப்படிக்கப்பட்டது அவருக்கு.

பெ. க. வுக்குப் பெருமை பிடிபட வில்லை. துரையுடன் காரில் போவதென்ருல்; அதுவும் கொழும்புக்கு?

நாயைத் தூக்கிப் பாயில் போட்டதுபோல் இருந்தது. தோட்டமே அறியும் அவர் துரையுடன் போகப் போவதை. செய்தி பெருமைக்குரியதல்லவா! தப்பாய் நின்று தானே அடித்துக்கொண்டார்; இரு கோல் போட்டு.

ஏன் போகிரும் என்ற நினைவு மட்டும் சாய்த்துப் போன அவருள்ளத்தில் எழவே இல்லை.

வழக்கு முடிந்தது. வெற்றி தோட்டத்திற்கே. தொழிலாளியின் தோள் வலுவிலேயே தன்னை இருத்திக்கொள்ளும் பெரிய கங்காணியே, அவன் ஆபீஸ் ஜன்னலை உடைப்பேன் காசை அள்ளுவேன் என்று கூறினுன் என்ருல் பிறகென்ன...

திரும்பிப் போகும் போதும் துரை தன்னைக் காரில் கொண்டு போவார் என்று கங்காணி எதிர்பார்த்தது மடமை தான்.

"கங்காணி நான் அவசரமா ஹோட்டலுக்குப் போறேன். இதோ பாரு...என்று அவர் பாட்டிற்கு ஏதோ உளறிவிட்டுப் போய் விட்டார்.

கங்காணிக்கு தலை உடல் தரை எல்லாமே சுற்றியது. 'அதோ பஸ் ஸ்டாண்ட், அங்கே நில் அதில் இருந்து பத்து சதம் குடு. பின்னர் அங்கிருந்து மெத்தை பஸ்ஸில் பதினைந்து சதம் குடு.

இறங்கி கொஞ்சம் நடஸ்டேசன் வரும்...என்ன தெரியுதா இந்தா பிடி இருபது ரூபாய் இருக்கு...!'

துரை இரைந்து விட்டு சென்றவை நூலறுந்த மாலையாய் அங்கொன்று இங்கொன்றாக பளிச்சிட்டது கங்காணியின் மூளையில்.

பழக்கப்பட்டவர்களுக்கே சமயத்தில் சமாளிக்க முடியாத ஒன்று இவரால முடியப் போகிறது.

(13-ம் பக்கம் பார்க்க)


பாட்டாளி முதல்


பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

சுமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்

தந்தி தாமரை

நீர், 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

டெலிபோன் 3597—6522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநிர்ணய உரிமைக்கு போராடும் நிலை உருவாகிவிட்டது

## பண்டிதர் இரத்தினம் பேச்சு

"சிங்கள அரசியல்வாதிகளால் நடத்தப்படும் இலங்கைச் சிங்கள அரசாங்கம் இந்நாட்டில் உள்ள முப்பது இலட்சம் தமிழ் பேசும் மக்களைத் தாய்மொழியற்றவர்களாக்கி, அவர்களுடைய தொண்டைக்குள் சிங்களத்தைத் திணித்து அடிமைகளாக ஆக்குவதற்கே அல்லும் பகலும் அயராது முயல்கின்றது என்பதைத் தமிழ்பேசும் மக்கள் யாரேனும் அறியாமலிருப்பின் அவர்களுக்குச் சுயபுத்தியில்லையென்றே கூறவேண்டும்" என திரு. கா. பொ. இரத்தினமவர்கள் கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் பத்தாவது மாநில மாநாட்டு இலக்கியப் பகுதிக்குத் தலைமைதாங்கி உரை நிகழ்த்தும் பொழுது குறிப்பிட்டார்.

திரு. இரத்தினமவர்கள் தொடர்ந்து பேசியதாவது: "ஒரு நாட்டை ஆளும் இனத்தவர் அந்நாட்டில் உள்ள ஏனைய இனத்தவர்களை அடிமைப்படுத்திக் கொடுங்கோலாட்சி செய்ய உறுதிபூண்டால் முதலிற் செய்யவேண்டியது யாது? தாம் அடிமைப்படுத்த விரும்பும் இனத்தவரின் தாய்மொழியை அடக்கி முறித்து ஒடுக்கி அழித்துத் தம் தாய்மொழியை ஆட்சிமொழியாக்கி அவர்களிடம் திணிப்பதேயாகும். உலகத்திலே ஆற்றல் குறைந்த இனத்தவர்களை அடிமைப்படுத்திய கொடுங்கோலாட்சியினர் இவ்வாறுதான் செய்தார்கள்.

### ஏகாதிபத்திய வாதிகள் வழியில் இலங்கை

ரஷ்யாவிலே சார் அரசர்களின் ஆட்சி இதற்குச் சிறந்த உதாரணமாகும். ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றை அடிமைப்படுத்தி ஆண்ட பிரித்தானியர், ஒல்லாந்தர், பிரான்சியர் முதலானோரும் தத்தம் மொழிகளையே இந்நாடுகளின் ஆட்சி மொழிகளாகத் திணித்தார்கள். இவர்கள் ஆதிக்கவெறியைப் பின்பற்றித்தான் இன்று இலங்கையில் உள்ள சிங்கள அரசாங்கம் சிங்களத்தை மட்டும் ஆட்சிமொழியாக்கித் தமிழ்பேசும் மக்களின் தொண்டைக்குள்ளே திணிக்கிறது. இதனை எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

மேலும் உலகத்திலுள்ள பல நாடுகள் பறைசாற்றும் உண்மையையும் சிறிது நோக்குவோம். இரண்டு மொழிகளோ பல மொழிகளோ வழங்கும் நாடுகளின் நல்லரசாங்கங்கள் தங்கள் நாடுகளில் உள்ள மொழிச் சிக்கல்களை எவ்வாறு தீர்த்து அமைதியையும் ஒற்றுமையையும் நிலைநாட்டியிருக்கின்றன? கனடா, பின்லாந்து, பெல்ஜியம், யூகோஸ்லேவியா, சுவிற்செலாந்து, ரஷ்யா முதலிய நாடுகள் யாவும் சிறுபான்மையினரின் மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்கியுள்ளன.

### எட்டுமுறை ஏமாற்றினர்

பக்கிஸ்தானிலே வங்காள மொழியை ஒதுக்கி உருது மொழியைமட்டும் ஆட்சி மொழியாக ஆக்க அந்நாட்டு அரசாங்கம் முயன்றது. வங்காளமொழி பேசும் மக்கள் செய்த கிளர்ச்சியினால் வங்காள மொழியையும் பக்கிஸ்தான் அரசாங்கம் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டது. இலங்கையில் நடப்பதென்ன? சிங்களமொழியை மட்டும் ஆட்சிமொழியாக்கிய சிங்கள அரசாங்கம் தமிழ்மொழிக்கு எவ்வித ஆட்சி உரிமையையும் கொடுக்க மறுக்கிறது. தமிழ் பேசும் மக்கள் சார்பில்பேசுவதற்கு முழு உரிமையும் செல்வாக்கும் பெற்ற தமிழரசுக்கட்சியின் மொழியுரிமைப் போராட்டத்தைப் போர்ப்படைகளால் முறியடிக்க முயல்கிறது.

பிரதமர் சிறிமா பண்டாரநாயக்காவின் சிங்கள அரசாங்கம் விரும்பினால் தமிழரிடமிருந்து பறித்த மொழியுரிமைகளை இருபத்திநான்கு மணிநேரத்துக்குள்ளே கொடுத்துவிடலாம் என்பதை நான் நிரூபித்துக் காட்ட விரும்புகிறேன்.

தமிழர்களுக்கு உரிமைகள் கொடுக்கப்படவேண்டும் எனவும் தமிழ்மொழிப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமெனவும் பிரதமரும் அவருடைய சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் கூறிக்கொண்டேவருகின்றன. சுதந்திரக் கட்சி அரசாங்கம் தமிழ்மொழி உரிமைகளைக்கொடுப்பதற்கு முயல்வதாகச் சொல்லிலும் செயலிலும் எட்டுமுறை காட்டி ஏமாற்றியுள்ளதே. இப்பொழுது ஒன்பதாவது முறையாக முயல்கிறதென்பதை அண்மையில் நிகழ்த்தப்பட்ட அரியணை உரை புலப்படுத்துகிறது.

### இடதுசாரிகளை நம்பவேண்டாம்

தமிழுரிமைகளைக் கொடுக்கவேண்டாமெனச் சிங்களவர்களிடையேயுள்ள நான்தோன்றித் தலைவர்களும், பதவி பறிபோன அரசியல்வாதிகளும், அரசியலையே தம் தர்மமாகக் கொண்ட பிக்குகளும் இடையிடையே குரல் எழுப்புவதுண்மையே. இந்த எதிர்ப்பை அரசாங்கம் பொருட்படுத்தலாமா? இந்த எதிர்ப்பு கூட்டாட்சிக்கு உருவான எதிர்ப்பிற் பத்தில் ஒரு பங்குதானும் இல்லையே.

சமசமாஜக் கட்சியுடன் கூட்டுச்சேரவேண்டாமென்று இவர்களெல்லோரும்பெரும் எதிர்ப்புக்காட்டினரன்றோ. இவர்கள் மட்டுமா? இடதுசாரிக் கட்சிகளிலிருந்து பிரிந்த கட்சிகளும் எதிர்த்தன. ஐக்கிய தேசியக்கட்சியும் தீவிரமாக எதிர்த்தது. சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலரும் கூட்டாக எதிர்த்தனர். பத்திரிகைகளும் பயமுறுத்தின. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் பிரதமர் கூட்டாட்சியை நிறுவினார். இதனால் இப்பொழுது இலங்கையரசாங்கம் முன்னிருந்ததிலும்பார்க்க வலிமை பெற்றுள்ளதெனக் கூறுகின்றனர்.

கூட்டாட்சியை அமைத்ததால் பிரதமர் தனது செல்வாக்கையும் உறுதியையும் நினைத்ததைச் செய்துமுடிக்கும் ஆற்றலையும் நிலைநாட்டியுள்ளார். எனவே அவரும் அவருடைய கட்சியும் நினைத்தால் தீவிரவாதிகள் சிலரின் கூக்குரலைப் பொருட்படுத்தாமல் தமிழருக்கு உரிமைகள் வழங்குதல் மிக இலகுவிற் செய்யத்தக்கது. இதை ஏன் அரசாங்கம் செய்யவில்லை? எதிர்ப்புக்கு அஞ்சி கொடுக்க முடியாதென்பதல்லக் காரணம். செய்ய விரும்பாமையே காரணம். இன்னும் தெளிவாகக் கூறினால் தமிழரை அடக்கி ஒடுக்கி அடிமைப் படுத்தும் எண்ணமே அடிப்படைக் காரணம். இப்பொழுதுள்ள சூழ்நிலையையும், அரசாங்கத்தின் போக்கையும், தமிழினத்தை முன் எட்டுமுறை ஏமாற்றிய அரசாங்கத்தின் செயலையும் ஒன்றுகூட்டிச் சிந்திப்போருக்கு இந்த உண்மை இமயமலை போலக் காட்சியளிக்கும். எனவே இந்த உண்மையை நாம் ஏற்றுக்கொண்டு நம் விடுதலைக்குப் போராடவேண்டும். இனி நம் போராட்டம் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையைப் பெறும் போராட்டமாக ஆகிவிட்டது. இதைத் தமிழ்மக்கள் நன்கு உணரவேண்டும். இப்போராட்டத்தின் முன்னணியில் ஆயிரக்கணக்கான வாலிபர்கள் திரளவேண்டும். இடதுசாரிக் கட்சிகளை இனி எவ்வகையிலும் நம்பவேண்டாம்.

### பெரேராவைப் பின்பற்றிப் பயனில்லை

இடதுசாரிக் கட்சியில் உள்ள தமிழ்த் தோழர்கள் இலவுகாத்த கிளிபோலாகிவிட்டனர். இவர்கள் டாக்டர் என்.எம்.பெரேராவைப் பின்பற்றிப் பயனில்லை. இனித் தமிழர்களின் தனிக்கட்சியான தமிழரசுக்கட்சியிலே சேரவேண்டும். இனப் போராட்டம் தாண்டவமாடும் இந்நாட்டிலே சிறுபான்மைஇனத்தை அடிமைப்படுத்தப் பெரும்பான்மை இனத்து அரசாங்கம் சூழ்ச்சிசெய்யும் நாட்டிலே—சனநாயக முறையிலே சமதர்மத்துக்கு வித்திடுவதோ வர்க்கப்போராட்டத்தில் வெற்றிபெறுவதோ முடியாத செயலாகும். ஆயுதந்தாங்கிப் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றாமல் சமதர்மவாதியோ பொதுவுடமைவாதியோ இந்நாட்டை ஆளமுடியாது. ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் கற்பிக்கும் பாடம் இது. இடதுசாரிக் கட்சிகள் ஆயுதப் புரட்சிசெய்து ஆட்சியைக் கைப்பற்ற இலங்கையிலுள்ள இக் கட்சிகளுக்கு ஆயுத உதவி செய்வதற்குப் பிறநாடுகளால் முடியாது. இலங்கை ஒரு தீவாக இருப்பதே இதற்கு முக்கிய காரணம்.

இந்தப் பேருண்மைகளை நன்கு அறிந்தமையாலேதான் இடதுசாரிச் கட்சிகளின் பெருந் தலைவரான டாக்டர் என். எம். பெரேரா வகுப்புவாதக் கட்சி எனத் தாம் பலமுறை கூறிப் பழித்த சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துவிட்டார். மொட்டந்தலைக்கும் முழங்காலுக்

(13-ம் பக்கம் பார்க்க)

மக்கள் குரல்:

## சிறீ பஸ் பிரச்சினை

தினசரிப் பத்திரிகை ஒன்றின் (4-8-1964ம்) இதழில், திரு. பாஸ்கரன், அரசாங்க லிகிதர் சேவை திருக்கோணமலைக் கிளைச் சங்கத் தலைவர், போக்குவரத்து மந்திரி அவர்களை 'ஸ்ரீ' பஸ்களும், இரட்டைத் தட்டு பஸ் வண்டிகளும் திருக்கோணமலைப் பகுதிக்கு அனுப்புமாறு கேட்டுள்ளதாக ஒரு வேண்டுகோள் காணப்பட்டது.

'ஸ்ரீ' பஸ்களை இப் பகுதிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்ட இச் செய்தி, ஒரு தனிப்பட்ட நபரால் கொடுக்கப்பட்ட வேண்டுகோளேயன்றி, அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத் தலைவர் என்ற முறையில் கொடுக்கப்பட்டது அல்ல என்பதை ஆணித்தரமாய்க் கூற விரும்புகின்றேன்.

இச் சங்க அங்கத்தவர்கள் 'ஸ்ரீ' பஸ் சேவையை விரும்புவதும்விரும்பாததும் வேறு பிரச்சினை. இதைத் தீர்மானிப்பதற்கு அரசாங்க லிகிதர் சேவைத் தலைவருக்கு தனிப்பட்ட அதிகாரம் கொடுக்கவில்லை.

இப்படியான விடயம் நிர்வாக சபைக் கூட்டத்திலோ அல்லது பொதுக் கூட்டத்திலோ தீர்மானிக்கப்படவில்லை. தனிப்பட்ட முறையில் சில சலுகைகளைப் பெறுவதற்காக திரு. பாஸ்கரனின் முயற்சியே இது இன்றைய அரசியல் சூழ்நிலையில் பிரச்சினையை எழுப்பக்கூடிய விஷயங்களைக் கிளறி வீணாக எமது சங்கத்தின் நற் பெயரைக் கெடுத்துக்கொள்ளத் தலைவர் எத்தனித்தது மிகவும் வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதுமாகும். இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

மு. மகேந்திரம்,
திருக்கோணமலை

## சங்கப் பலகை

### வரதரின் பல குறிப்பு

பதிப்பாசிரியர்: தி. ச. வரதராசன்.
வெளியீடு: வரதர் வெளியீடு,
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
விலை: ரூபா 10.

திருக்குறளை முதல் முதலாக மலிவுப் பதிப்பில் வெளியிட்டுத் தனக்குப் பெருமை தேடிக்கொண்ட வரதர், இன்று 'பல குறிப்பு' என்னும் வழிகாட்டி நூலை வெளியிட்டுத் தமிழுக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளார். ஆங்கிலத்தில் 'டைரக்டரி' என்ற பெயரில் நீண்ட காலமாக—ஆண்டுதோறும்—இந்நூல் வெளியாகின்றது. சிங்கள மொழியிலும் கடந்த ஆண்டு முதல் இந்நூல் வெளியாகின்றது. ஆனால் தமிழ் மொழியில் இது போன்ற முயற்சியை—பல வசதிகளையுடையவர்கள் — செய்யாது நின்றபோது வரதர் துணிந்து செய்ய முன்வந்தமை நிச்சயம் பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

ஆங்கில மொழியில் வெளியாகின்ற இந்த வழிகாட்டி நூலுக்கும், வரதரின் பல குறிப்புக்கும் பல வேறுபாடுகள் உண்டு. ஆங்கில மொழியில் வெளியாகின்ற வழிகாட்டி பெரும்பாலும் படித்தவர்களுக்கும் வியாபாரிகளுக்குமே உதவக்கூடியதாக உள்ளது. ஆங்கிலம் தெரிந்த சாதாரண பொது மக்களுக்கு, ஆங்கில வழிகாட்டியினால் அதிக பயனைப்பெற முடியாது. ஆனால் [illegible] பல குறிப்பைப் [illegible] மட்டில் சாதாரணக் குடியானவன் முதல் வியாபாரிகள் வரை பயன்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளது.

அட்டமி, நவமி தினங்கள் முதல் சைவாலய உற்சவ தினங்கள் வரை சாதாரண குடியானவன் தினே தினே பார்க்க வேண்டிய விடயங்கள் உள்ளன. அமைச்சரவை முதல் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் அலுவலகங்கள் வரை மாணவர்கள் அன்றாடம் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் உள்ளன. ஊழியர் சேமநிதித் திட்டம் முதல் பொது விடுமுறைத் தினங்கள் வரை தொழிலாளர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய விடயங்கள் உள்ளன. வருமான வரிச் சட்டம் முதல் வங்கிகள் வரை வியாபாரிகளும், தனவந்தர்களும், முதலாளிகளும் தெரிந்து புரிந்திருக்க வேண்டிய விடயங்கள் உள்ளன. திருவிழாக்கள் முதல் நவநாகரிகப் பொருள்கள் விற்பனை நிலையம் வரை நவநாகரிக நங்கைகள், குடும்பப் பெண்கள் பார்க்கவேண்டிய விபரங்கள் உள்ளன. பேச்சாளர், எழுத்தாளர், பத்திரிகைகள் முதல் பெரியார் தினங்கள் வரை பொது நிலைய மன்ற நிர்வாகிகள் அறிந்திருக்க வேண்டிய விபரங்கள் உள்ளன. இது போன்று ஒவ்வொரு துறையினருக்கும் வேண்டிய விபரங்கள் நூலில் உள்ளன.

தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை முறையை உணர்ந்து அதற்கு ஏற்ப நூலை [illegible]

(13-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் போட்டியில் அருணகிரிநாதரும் வில்லிபுத்தூராரும்

திருவண்ணாமலை ஆலயத்தின் உட்புறம். தமிழ் வளர்க்கும் புலவர்களின் பெருங் கூட்டம். தமிழறிஞர்களின் வெள்ளம். தமிழ் மணங் கமழும் அவ்வவையில் கதாநாயகங்களாக இருவர் எதிரெதிராக அமர்ந்திருக்கின்றனர்.

அருணகிரிநாதரும், வில்லிபுத்தூராரும் அன்று சந்திக்கின்றனர். சந்திக்கின்றனர் என்பதைவிடப்பார்க்க, மோதிக்கொள்ளுகின்றனர் என்றே சொல்லலாம்.

சற்று முன்னர்தான் தமிழ் அரங்கையில் ஊறித் திளைத்த வில்லிபுத்தூராருக்குத் தனது காதைத் தாரை வார்த்துவிட்டு விம்மிக் கொண்டு வெளியேறுகிறார் ஒரு புலவர். காதைப் பறிகொடுத்தபுலவர் வேறுயாருமல்ல — அருணகிரிநாதரின் தம்பிதான். (முறை கெட்ட கதை என்று தமிழறிஞர்கள் புறு புறுப்பது எமது காதுகளுக்குக் கேட்கிறது. விபரம் பின்னர்......)

தன்னுடன் போட்டிக்கு வருபவர்களின் செவிகளில் துளை போட்டு ஒரு தொண்டியைப் புகுத்திக் கொள்வது வில்லிபுத்தூராரின் வழக்கம். போட்டியில் தோற்றவர்களின் காதுகளில் உள்ள கொக்கியை வில்லிபுத்தூரார் இழுத்ததும் காது அறுந்துவிடும்.

தம்முடன் போட்டிக்கு வந்திருந்த அருணகிரியாரின் காதுக்கு கொக்கி போடுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டதும், இதுகாலவரை எவரிடமிருந்தும் விதிக்கப்படாத புதிய நிபந்தனை ஒன்று அருணகிரியாரிடமிருந்து வெளிப்பட்டதும் வில்லிபுத்தூரார் திணுக்குற்ருர்.

'நான் தோற்ருல் என் காதுகளை நான் இழக்க வேண்டும் அல்லவா? அதே போன்று நீர் தோற்றுவிட்டால் உமது காது பறிக்கப்பட வேண்டாமா? ஆகவே உமது காதிலும் துளையிட்டு ஒரு கொக்கியை நான் மாட்டிக்கொள்ளுகிறேன்', என்று அருணகிரிநாதர் நிபந்தனையிட்டார்.

கர்வத்தால் இறுமாப்புற்றிருந்த வில்லிபுத்தூரார் தமது அகந்தையை அன்றே விட்டொழித்தார்.

இக்காட்சி அன்று விஜயா ஸ்டூடியோவில் படமாக்கப்பட்டது. டி. ஆர். ராமண்ணாவின் நாட்டுவாங்கத்தில் தயாராகும் பாபா ஆர்ட்ஸ் 'அருணகிரிநாதர்' படத்துக்கான இக்கட்டத்தில் அருணகிரிநாதராக டி.எம்.சவுந்தரராஜன் தோன்றிருர். காதைப் பறிகொடுத்த புலவர் ஒருவரின் வேடத்தில் சவுந்தரராஜனின் சொந்தச் சகோதரர் தோன்றிருர்.

இப்படம் இப்பொழுது தமிழகம் எங்கணும் திரையிடப்பட்டுள்ளது.



எண்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'படித்தால் மட்டும் போதுமா' படத்தில் குப்பாகவியும் கையுமாக முரட்டுத் தன்மையுடன் தோற்றமளிக்கிருர் சிவாஜி கணேசன். படியாதவனுகவும், முரடனுகவும், காதலுக்காக ஏங்குபவனுகவும் பலதரப்பட்ட ரசபாவங்களை நன்கு வெளிப்படுத்துகிருர் சிவாஜி.

## கந்தபுராண உரை வெளியீடு

பண்டிதமணி வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்களால் ஆக்கப்பெற்ற கந்தபுராண உரை நூலின் வெளியீட்டு விழா, இத் திங்கள் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திரு. க. முத்துச்சாமிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பண்டிதமணி பி. கணபதிப்பிள்ளை, சைவப் பெரியார் க. குமாரசாமிப்பிள்ளை, வித்துவான் பொன். முத்துக்குமாரன், வித்துவான் க. சி. நடராசன், வித்துவான் இ. திருநாவுக்கரசு ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

## மும் மொழியில் கிருஷ்ணலீலா

'கிருஷ்ணலீலா'வை தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மும் மொழிகளிலும் தயாரிக்க விஜய வாஹினி அதிபர் பி. நாகி ரெட்டி திட்டமிட்டிருக்கிருர். இப் படம் ஈஸ்ட்மன் கலரில் தயாராகும். அத்துடன் பி. நாகி ரெட்டி மற்றுமொரு தமிழ் படத்தைத் தயாரிக்கவும் ஆயத்தங்கள் செய்கிருர். இப்படத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பிரதான பாகத்தில் தோன்றுவாராம். சுரேஷ் புரடக்ஷன்சார் தயாரித்த வெற்றிப் படமான 'ராமுடு பீமுடு' என்ற படத்தின் கதையையே தமிழில் தயாரிக்கப் போகிருர்களாம்.

# மோகனச் சிரிப்பு

(நாடகம்)

சென்ற 26—7—64 பொரல்லை வை. எம். பி. ஏ. மண்டபத்தில் மகிலளர் மன்றத்தாரின் முதல் தயாரிப்பான 'மோகனச் சிரிப்பு' என்ற சரித்திர நாடகம் நடைபெற்றது!

இது ஒரு வரலாற்றுக் கதை! வில்லனின் சூட்சியால் நல்லவர்களுக்கு சிறை. சிலரின் உயிர் பிரிகிறது! வழக்கம் போல் வில்லன் மடிகிருன், எல்லோரும் ஒன்று கூடுகிருர்கள்! இது தான் கதை!

பிரபல வானொலி எழுத்தாளர் சி. சண்முகம் எழுதிய இந்தக் கதைக்கு உயிர் கொடுத்த பெருமை இயக்குனர் தேவருக்கே சேர்கிறது! ஒரு சில இடங்களில் பொருத்த மற்ற வசனங்கள் இருந்தன.

சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த குலோத்துங்கன், பாண்டிய மன்னனின் சாட்டை அடி பட்ட பின் சீறி எழுந்த கட்டத்தில் வெற்றி வேந்தன் நடிப்பின் ஒளி இருந்தது! மற்றக் காட்சிகளிலும் குலோத்துங்கனை காணமுடிந்தது! வேடப் பொருத்தமும் நன்று!

குலோத்துங்க மன்னனின் வளர்ப்பு மகளாக நடித்த குமாரி சந்திரகலா அனுபவமான நடிகை என்பதை காட்டி விட்டார்.

சேரலாதனாக நடித்த இரா. மில்டனின் நடிப்பில் எடுப்பு இருந்தது, துடிப்பு இல்லை! சில சில கட்டங்களில் அவர் பேசியதே புரியவில்லை!

நரசிம்மன்! கதைக்கே விலையன் பாகம்! செய்யாதான் ஏற்றிருந்தார்.

வேடப் பொருத்தம் இருந்தது! குரலில் ஏற்றத் தாழ்வு இல்லை! நடிக்க முயன்ற கட்டங்களை விட





அவர் சிரிக்க முயன்ற கட்டங்கள் ஏராளம். வில்லன் என்ருல் இப்படி ஆங்காரச் சிரிப்புச் சிரிக்கத்தான் வேண்டுமா?

நரசிம்மனின் மனைவி, மதிவதனியாக நடித்த ஆமீனு பேகம் நன்ருக நடித்தார்!

அன்பழகனாக நடித்த மீராலுக்கு எதிர்காலம் உண்டு. நிமிர்ந்து நடிக்கப் பழக வேண்டும்.

பாண்டிய மன்னனாக நடித்த 'லதீப்' குடிவெறி நடிப்பு ரசிக்கும் படி இருந்தது! சில இடங்களில் மிகையாகி விட்டார்.


கோபிராஜ், சூர்யகுமாரி ஜோடி, பரவாயில்லை!

ஒளி-ஒலி சுமார்! ஒப்பனை, ஆடை அலங்காரம் நன்று!

காட்சி அமைப்பு, தர்பார் காட்சியைத் தவிர, மற்றக் காட்சிகள் பாராட்டக் கூடிய விதத்தில் இல்லை!

வெற்றி வேந்தன், சந்திரகலா, அமீனுபேகம் இம் மூவரையும் தவிர மற்றவர்களின் வசனத்தை இரசிகர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை, வரலாற்று நாடகத்தில் தமிழ்க் கொலை நடப்பது சரியல்ல, இதை இயக்குனர் கவனித்திருக்க வேண்டும்!

—வி. வி.



சினிமாஸ் திரைகளில் வெற்றி முழக்கமிட்டு வரும் ஸ்ரீதரின் 'காதலிக்க நேரமில்லை' வர்ணப் படத்தில் ஒளிப்பதிவாளர் வின்சன்ட் அவர்களின் கை வண்ணத்தை நன்கு அவதானிக்கலாம். ரவிசந்தர், ராஜஸ்ரீ, காஞ்சனா தோன்றும் இக்காட்சியில் இரு நங்கையரின் நிழலுருவங்கள் மோட்டாரில் தெரிவதை காணமுடிகிறது. இப்படத்தை எடுத்தவர் நிழலுருவப்பட மேதையான திருச்சி அருணசலம் ஆவார்.

# 'கொஞ்சும் குமரி'

பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கும் ஏழைத் தொழிலாளிக்கு மிடையில் ஏற்படும் காதல் இறுதியில் நிறைவெய்துகிறது. இதற்கிடையில் அப்பெண்ணின் அண்ணனாக வரும் மனோகர் படும் இன்னல்கள் மறுபுறமாக நின்று கதை வளர்கிறது.

குடும்பக் கௌரவத்தை நிலைநிறுத்த எடுக்கும் முயற்சிகள், நடக்கும் சூழ்ச்சிகள், துப்பாக்கி வேட்டுக்கள், உயிரிழப்புக்கள் சொல்லுந்தரமன்று. உடன் பிறந்த தங்கைக்கு, தன் கையால் அண்ணன் விடும் கொடுக்கத் துணியுமளவிற்கு குடும்பக் கௌரவமேறி தலைவிரி கோலமாக நிற்கிறது.

தனது காதலை நிறைவேற்றுவதற்கும், கள்ளர் கூட்டத்தை ஒழிப்பதற்கும் மனோரமா துப்பாக்கி தூக்குகிருர். மனோரமாவின் அன்பில் கட்டுண்ட போதிலும் லட்சிய ஈடேற்றத்தை முன்னிட்டு அவளை ஏற்க மறுக்கும் மனோகரை, மனோரமா வீரத்தாலும், சூழ்ச்சியாலும் அடிமைப்படுத்திவிட்டார். இறுதியில் இருவரும் சேர்ந்து துரோகிகளை ஒழிக்க எடுக்கும் முயற்சிகள் பல.

நகைச்சுவை நடிகையாகக் கருதப்பட்டு வந்த மனோரமா, 'கொஞ்சும் குமரி' மூலம் கதாநாயகியாகவும் நடிக்கமுடியும் என்று சவால் விடுகிருர் என்ருலும் அவரின் நடிப்பில் நகைச்சுவையே மிஞ்சி நிற்கிறது.

கதாநாயகனாக வரும் மனோகர் பாத்திரத்துடன் ஒன்றி இயல்பாக நடித்துள்ளார். கருணாநிதி குட்டிப் பயில்வானாக வந்து எல்லாரையும் அடக்கி வைக்கிருர். ஆனால், மனோகரிடம் நன்ருக வாங்கிக் கட்டுகிருர்.

பிரபுத்துவ குடும்ப சூழலை பகைப்புலனாகக் கொண்டு சண்டைக் காட்சிகளுடன் அமைந்திருந்த சித்திரங்களை நீண்ட காலமாகப் பார்க்காத சினிமா ரசிகர்களுக்கு, சினிமாஸ் திரைகளில் நடைபெறும் 'கொஞ்சும் குமரி' அப்படியொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

—பூங்கோதை

## நடக்கவிருப்பவை

## இசை விழா

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்றத்தின் ஆதரவில் அருணகிரிநாதர் இசை விழா இத்திங்கள் 15ம் திகதி முதல் 17ம் திகதி வரை மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வீதியில் நடைபெறும்.

பிரபல நாதஸ்வர வித்துவான்கள், இசைக் கலைஞர்கள் கலந்து கொள்வார்கள். 'காலனையும் வென்ற கற்பரசி', 'பரதன்' ஆகிய நாடகங்கள் 16ம், 17ம் திகதிகளில் நடைபெறும்.

கோலாட்டம், வசந்தன் நடனம், சங்கீத கதாப்பிரசங்கம், சிவதாண்டவ நடனம், புல்லாங் குழலிசைக் கச்சேரி, தாளவாத்தியக் கச்சேரி ஆகியனவும் இவ் விழாவில் இடம் பெறும்.

## 'தெய்வத் தாய்'

எம். ஜி. ஆர். மன்றம் தனது ஆருவது வெளியீடாக "தெய்வத் தாய்" என்ற சமூக நாடகத்தை அரங்கேற்ற விருக்கிறது. இந்நாடகத்தின் கதை அமைப்பை திரு. எம். ஏ. மணிமாறன் செய்துள்ளார். ஆறுப் கலைஞர் அலுமட் இந்நாடகத்தின் இயக்குநர் ஆவார் எம். ஜி. ஆர். மன்றம் தயாரிக்கும் 'தெய்வத் தாய்' நாடகத்தின் முழு பொறுப்பையும் பொதுச் செயலாளர் திரு. கம்பனை தாசன் கவனிக்கிருர்.



கொழும்பு இரவுண் படமாளிகையில் திரையிடப்பட்டுள்ள இந்திபேசும், ஈஸ்ட்மென் வர்ணப்படமான 'நாக கன்னியில்' (கோப்ரா கேர்ள்) ராகினி இப்படித் தோன்றுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமசமாஜிகளின் வேடம் வட பகுதியில் கலைகிறது

## உடுப்பிட்டி பட்டினசபைத் தலைவரின் சாதித்துவேஷம் அம்பலமாகிறது

உடுப்பிட்டி கிராமசபையில் அங்கத்துவம் பெற்றுள்ள சமசமாஜத் தோழர்களுக்குள் குத்துவெட்டு. தலைவரான திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் வல்வெட்டித்துறைப் பகுதிச் சமசமாஜ வாலிப முன்னணிச் செயலாளரும் கிராமசபை அங்கத்தவருமான திரு. சொ. சிவராசாவைக் கிராமசபையில் பகிரங்கமாகவே எதிர்த்துள்ள சம்பவம் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

இச் சபைக்கு ஒரு துணைத் தலைவரைத் தெரிவு செய்வதற்காக 18-7-64ல் நடைபெற்ற கூட்டத்தில் திரு. சிவராசாவின் பெயர் பிரேரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கையில் தோழரல்லாத திரு. பத்மநாதன் என்பவரைத் தலைவர் போட்டிக்கு நிறுத்தினார்.

திரு. சிவராசாவுக்கு எதிராக முதலில் நிறுத்தப்பட்ட திரு. எஸ். நாகரத்தினம் தனது அபேட்சகத்துவத்தை வாபஸ் பெற்றுத் திரு. சிவராசாவை அனுமதித்தார். போட்டியில்லாமலே திரு. சிவராசா வந்துவிடக் கூடிய சாத்தியக் கூறிருக்கையில், தலைவர் திரு பத்மநாதனைப் பிரேரித்ததில் அங்கு சமுகமாயிருந்த சிறுபான்மைத் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆச்சரியமடைந்தனர்.

என்றாலும் அவர்கள் தலைவரின் பிழையான எண்ணத்துக்கு இசையாது பகிரங்கமாகவே திரு. சிவராசாவை ஆதரித்து வாக்களித்தனர். கரையார வம்சத்தைச் சேர்ந்தவரான திரு. சிவராசா துணைத் தலைவராக வரக் கூடாதென அபிலாசைப்பட்ட தலைவர் உட்பட வெள்ளாளப் பிரதிநிதிகள் பலரும் திரு. பத்மநாதனை ஆதரிக்கவே 12 : 4 வாக்குகளால் திரு. சிவராசா (சமசமாஜக் கட்சி) படு தோல்வியடைந்தார்.

இதே தலைவர் வல்வெட்டித்துறை ஊறணிச் சுடலை விடயத்திலும் சாதி வேற்றுமை பாராட்டி நடந்து வருவது இங்குள்ள சமசமாஜிகள் மத்தியில் பலத்த வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

இங்குள்ள சுடலையில் பல காலமாக நிலவிவந்த சாதிப் பிரிவினையை நீக்கக் கருதிய வல்வெட்டித்துறை, பொலிகண்டி கரையோரவாசிகள் தங்களுக்குள் பணத்தைத் திரட்டி ஒரு பகுதியில் சுற்று மதில் அழகுற அமைத்து அதனுள் எல்லோரும் ஒற்றுமையாகத் தகனஞ் செய்யும்படி அழைப்பு விடுத்திருந்தனர்.

ஆரம்பத்தில் இக் கருத்தைப் பலமாக ஆதரித்த திரு. தாமரத்தினம் வல்வெட்டி பொலிகண்டி வெள்ளாளச் [illegible]ரின் வற்புறுத்த[illegible] அச்சமூகத்தினருக்கு வேறாக அதே இடத்தில் சுடலை இருக்கவேண்டுமென்பதைப் பலமாக ஆதரித்தார்.

அத்துடன் நின்று விடாது வெள்ளாளச் சுடலைக்குத் தாமே முன்னின்று அஸ்திவார விழாவையும் நடாத்தி வைத்தார்.

தோழரின் சாதி வேற்றுமையைத் தகர்த்தெறியக் கங்கணம் கட்டிய வல்வெட்டித்துறைப் பட்டின சபைத் தலைவருட்பட வல்லை வாசிகளின் தீவிர முயற்சியினால் இரண்டாவது சுடலை மதில் கட்டும் வேலை தடைப்பட்டுள்ளது.

சாதி வேற்றுமைக்கு இடமளிக்க மாட்டோமென்று மேடைப் பிரசங்கம் செய்யும் சமசமாஜத் தோழர்களின் குட்டு மேற்படி சம்பவங்களால் பகிரங்கமாகவே வெளிப்பட்டு வருவதில் பல தோழர்கள் தாங்கள் சமசமாஜிகள் என்று கூறுவதில் பின்னடைந்து வருகின்றனர்.

இத்தோழர்கள் யாவரும் அரசாங்கத்தை ஆதரிக்கும் தோழர் டாக்டர் என். எம். பெரேரா கோஷ்டியைச் சேர்ந்தவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

# தோட்ட மக்களிடை....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரம், மொத்தா, லெட்சுமணன் செட்டியார், இராஜலிங்கம், ஞானபண்டிதன முதலியோருடன் ஜனுப். ஏ. அசீஸ், திரு காரார்சன் தேசாய், மாதவராம், வள்ளியப்ப செட்டியார், தாஜுதீன் ஆகியோர்களாவர்.

அது வேளை இலங்கை சட்ட நிருபண சபையில் திரு. கோ. நடேசஐயர், திரு. எஸ். பி. வைத்திலிங்கம் ஆகிய இருவரும் 1931 ல் இருந்து 1947 ம் வருடம் வரை இந்திய பிரதிநிதிகளாக இருந்து வந்தனர்

இரண்டாவது மகா யுத்தம் முடிந்ததும் நிர்ப்பந்தமாக இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்க வேண்டிய நிலைமை வந்தது ஆங்கிலேயருக்கு. அந்தச் சூழ்நிலையில் இலங்கையும் விடுதலையடைந்தது. 1931 டொனமூர் அரசியல் சீர்திருத்தப்படி முதலில், மலையகத்து தொழிலாளர்கட்கும் வாக்குரிமை இருந்ததல்லவா? 1948 ல் சுதந்திர இலங்கையின் பாராளுமன்றத்திற்குத் தேர்தல் நடந்தது.

1930 ம் வருடம் நேருவால் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரஸ் 1948 ல் மலையகத்தில் தேர்தலுக்கு நின்று 7 பிரதிநிதிகளை இலங்கை பாராளுமன்றத்திற்குள் அனுப்பி ஆசனங்களில் இருக்கும்படி செய்தது. மலையகத்தில் காங்கிரஸ் அத்தனை செல்வாக்கைப் பெற்றிருந்தது என்பதே இதன் கருத்து. ஆனால் காங்கிரஸ் வாக்குப் பலத்தால் பாராளுமன்றத்துக்குப் போனவர்கள் அத்தனை தூரம் அரசியல் விவேகமுள்ளவர்கள் அல்ல.

காங்கிரஸ் தோட்ட மக்களுக்கு என்ன செய்ததென்பது பகிரங்க இரகசியம்.

அதையும் சொல்ல வேண்டுமா? 25 சதமாக இருந்த காங்கிரஸ் சந்தாப்பணம் ரூபாயாக உயர்ந்தது. கங்காணிமுறை ஒழிந்து காங்கிரஸ் தலைவர் ஆட்சியில் இப்போது தோட்டங்களில் தொழிலாளர்கள் நடக்க வேண்டியதுள்ளது.

இந்நிலையில் மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும்?

"தன் கையே தனக்குதவி" என்ற பழமொழிக்கேற்ப மலையக மெங்கும் தோட்ட வாலிபர்கள் ஒன்று கூட வேண்டும். மலையகத்தின் சாகுவதத் தலைவர்களை வெளியேற்ற வேண்டும். தோட்ட மக்கள் தங்களிடையே தளபதிகளையும் போர் வீரர்களையும் தெரிவு செய்து உரிமைப் போராட்டத்தில் குதிக்கத் திட்டமிட வேண்டும்.

மலைநாட்டு தொழிலாளத் தோழா! அன்றைய நிலையையும் இன்றைய [illegible] எண்ணி, சிந்தனை [illegible] கருமமாற்றுக!

# சுயநிர்ணய உரிமைக்கு........

## பொய்மை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

துரை சுட்டிக் காட்டிய இடத்தை அடைந்தார். பஸ் ஸ்டாண்ட்தான். பஸ்வருகிறது நிற்கிறது போகிறது. ஆட்கள் இறங்குகிறார்கள் ஏறுகிறார்கள். 'ஒரு பயலாவது கங்காணி எங்கே போவனும்னு கேட்கிறானு' மூனங்ஙே வண்ணம் நடந்தார்.

தோட்டம் மாதிரி திரும்பிய பக்கம் தெருவிலைலா இருக்கு. அடேயப்பா எவ்வளவு பெரிய பெரிய கட்டிடங்கள். எத்தனை எத்தனை விதமான கார்கள் எனது தன் அவஸ்தைகளைக் கூட ஒருகணம் மறந்து விட்டார்.

அவர் வந்துகொண்டிருந்த பாதை நாலைந்தாய் சிதறிக் கிடந்தது, கல்லிலடித்த தேங்காயாய். இடம் நோக்கிப் போகிறவனுக்குத் தானே சிரமம் சிந்தனை எல்லாம். இவருக்கென்ன ஏதோ ஒன்றில் புகுந்து நடந்தார்.

யாரோ அவர்மேல் மோதியது கண்டு திரும்பினார். ஒரு பறங்கிப் பெண் அவள். அவசரம் அவளுக்கு. 'அடடே துரைசானி' என்றவர் சிரித்துக் கொண்டார்.

தோட்டத்துக்குப் போயி இதை எல்லாம் கதை கதையாகச் சொல்லணும் என்ற நினைப்பு எழுந்ததும் தான் எப்படிப் போவது என்ற திகிலும் வந்தது.

அடுத்த திசையில் யாரோ தமிழில் பேசுவது கேட்கவே அவரிடம் கேட்போமே என்று பாதையில் இறங்கி விட்டார்.

அடுத்த கணம்—

சீறிக் கொண்டு வந்த ஒரு பெரிய லொறி அவரை முட்டித் தூக்கி எறிந்தது. எகிறிப்போய் மறுபுறம் விழுந்தவரை 'சதக்'கென நசுக்கி விட்டு தள்ளிப் போய் நின்றது எதிர்த் திசையில் வந்த பஸ்.

அய்யோ என்று கத்தக் கூட அவருக்கு நேரமில்லை.

பிறகென்ன? கூட்டம் கூடியது. வயிறு வெடித்துக் குடல் வழிய குருதி வெள்ளத்தில் கிடந்தார் பெரிய கங்காணி.

அவர் செய்த தவறுக்குத் தண்டனை கிடைத்து விட்டது.

'ஐயோ பாவம் எந்த ஊரோ இந்தப் பாவி மனிசனுக்கு இந்த மண்ணு விதிச்சிருக்கு' என்று ஒவ்வொருவராகக் கூட்டத்தைக் கலைத் [illegible] தனர்.

(யாவும் கற்பனை)

## சங்கப் பலகை

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பேணி வரதரின் பல குறிப்பு வெளியாகியுள்ளது என்று கூறினல் தவருகாது.

தான் விலை மலை போல் உயர்ந்திருக்கும் இக்காலத்தில் 540 பக்கங்களைக் கொண்ட தடிப்பான கவர்ச்சியான அட்டையுடன் உள்ள வரதரின் பல குறிப்பு பத்து ரூபா என்கின்ற பொழுது நம்ப முடியவில்லை. தமிழ் மொழியில் முதல் நூலாக வெளி வருவதால் பல தடைகளைப் பதிப்பாசிரியர் தாண்டியிருக்க நேரிட்டிருக்கும். என்றாலும் இத்தனை அழகாகவும், மலிவாகவும், பலருக்கும் பயன் கொடுக்கக்கூடியதாகவும் பல குறிப்பை வெளியிட்ட வரதரை, பட்டங்கள் சூட்டிப் பாராட்டுவதுடன் மட்டும் நாம் நின்றுவிட்டால், நமது பணி முற்றுப் பெருது.

—பூங்குன்றன்

## சுயநிர்ணய உரிமைக்கு........

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் முடிச்சுப்போடமுடியுமா? தம் கூட்டுச் சேர்க்கையால் அவர் முடிச்சுப் போட முயல்கிறார். முடிச்சுப்போட முடியாதென்பதை அவர் மிகவிரைவில் காண்பார்.

### அன்றைய வகுப்புவாதிகள் இன்று தேசிய வாதிகளா?

பண்டார நாயக்கா-செல்வநாயகம் உடன்படிக்கைபற்றி டாக்டர் பெரேரா 'வகுப்புவாதக் கட்சிகள்செய்துகொண்ட நிலை தகாது' என்று முன் கூறினர். வகுப்புவாதக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள அவரே தமது இக்கூற்றுக்குச் சான்றுபகரும் நாள் தூரத்தில்இல்லை.

இலங்கையில் உள்ள இடதுசாரிகளே ஒன்றுபட முடியவில்லை. அடிப்படைக் காரணம் யாது? இவர்கள் பேசும் சமதர்மம், பொதுவுடைமை முதலியனவெல்லாம் சிங்கள வகுப்புச் சமதர்மமாகவும், சிங்கள இனத்தின் பொதுவுடைமையாகவும் இருப்பதே. எனவேதான் இந்த நாட்டிலே உண்மையான சமதர்மமோ பொதுவுடைமையோ தோன்றுதென்கிறோம். அண்மையிலும் ரஷ்ய சீன மோதல் நாடு கடந்து, நிறம்கடந்து, கண்டம் கடந்து, திசைகடந்து பொதுவுடைமையோ சம உடைமையோ உலகத்தில் இன்று நிலைக்காது என்பதையே சுட்டிக்காட்டுகிறது.

தமிழ்த் தோழர்களைத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தில்—சுய நிர்ணய உரிமை இயக்கத்தில் எம்முடன் சேர்ந்து ஈடுபடுமாறு அழைக்கிறோம். சுயநிர்ணய உரிமையைப் பெற்றபின் நிலைத்த சமதர்மத்தின் சிறப்பியல்புகளை நாம் உலகறியச் செய்ய முயலலாம்.

—

## உலக யுத்தம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நாட்டுத் தேயிலையில் பெரும் பகுதியை விலைக்கு வாங்குபவர்களும் பிரிட்டிஷாரே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அத்தகை ஒரு சந்தையை இழக்கும் முறையில் நடவடிக்கை எடுப்பதால், நமது தேயிலையை விற்பதற்கு இடம் கிடைக்காமல் போவதுடன், இந்நாட்டுத் தேயிலைத் தோட்டங்களில் காடு வளர்ந்துவிடுமென்பதையும் பிரதமரும் மந்திரிகளும் உணரவேண்டும்.

## மூதூர் முத்தமிழ் விழா

இத்திங்கள் 21, 22, 23-ம் திகதிகளில் மூதூரில் நடைபெறவிருந்த முத்தமிழ் விழாவை சில முக்கிய காரணங்களை முன்னிட்டு ஒரு வாரம் பிற்போட்டுள்ளதாக விழாச் செயலாளர் அறிவித்துள்ளார்.

திருகோணமலையில் தமிழரசுக் கட்சியின் மாநில மாநாடு நடைபெறும் தினங்களில் இவ்விழா நடைபெறவிருந்ததையிட்டு பல பொது இயக்கங்களும், மன்றங்களும் தமிழ் விழாவைப் பிற்போடும்படி விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

விழாவில் உரை நிகழ்த்த அழைக்கப்பட்டிருந்த தமிழறிஞர்கள், கலை நிகழ்ச்சிகளை நடாத்த அழைக்கப்பட்டிருந்த கலைஞர்கள் 'தமிழரசுக் கட்சி மாநாடு நடைபெறும் தினங்களில் தமிழ் விழாவை நடாத்துவதாயின் நாம் கலந்து கொள்ள முடியாது' என்று விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கு எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழறிஞர்கள், கலைஞர்கள், பொது இயக்கங்கள், எழுத்தாளர் சங்கங்கள் ஆகியவைவற்றின் வேண்டுகோள், விழா ஏற்பாட்டுக் குழுவினர் முடிவை மாற்றியுள்ளது என்று அறியப்படுகிறது.

—

## குருபூசை

விவேகாநந்த சபையின் ஆதரவில் 14 ம் திகதி பிற்பகல் ஐந்து மணியளவில் விவேகாநந்த மேட்டிலுள்ள சபை மண்டபத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறும். திரு. க. சி. சண்முகம் 'சுந்தரர்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார். சங்கீத பூசணம் கு. சந்திரபாலனின் இன்னிசை விருந்தும், கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெறும்.

—

## சந்தியில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யினால் டாக்டரின் அரசியல் வாழ்வு மங்காராம் என்று ஆருடம்கணித்த இந்நபர், மேற்கண்ட முடிவுக்கு வந்ததாகவும் ஒரு தகவல் அம்மானுக்குக் கிடைத்தது.

அரசியல் சாணக்கியரான டாக்டர் பெரேரா தமது திட்டத்தில்,மேலதிகமான வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு 'ஆப்பு' வைத்திருப்பதால், இந்நபர் அரசியலில் முழு நேரத்தைச் செலவிடமுடியாது, தமது வயிற்றுப்பிழைப்புக்கு வழி தேடவேண்டியிருக்கும். இவர் முழு நேர அரசியல் வாழ்வில் ஈடுபடுவது தவிர்க்கப்பட்டால் இவருடைய செல்வாக்குக் கட்டுப்படுத்தப்படுவதுடன், டாக்டர் பெரேராவின் அரசியல் வாழ்வும் ஓரளவு பாதுகாக்கப்பட இடமிருக்கிறது.

டாக்டரின் இத்திட்டம் நாட்டிற்கு நன்மை பயப்பதாகவிருப்பதாக மேலெழுந்தவாரியாகத் தெரிந்தாலும், உண்மையில் இத்திட்டத்தில் சில 'சொந்தப் பிரச்சினைகள்' இருப்பதாகவே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### அந்த நிலை மாறிவிட்டது

பிரதம நீதியரசர் பதவிக்கும், பொலிஸ் அதிபர் பதவிக்கும் முதன் முதலாக பௌத்தர்களை நியமனம் செய்தது யூ. என். பிதான். இப்பொழுது அந்த நிலைமை மாறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விஞ்ஞானக் கட்டுரை:

# இன்றைய திரைப் படம்

— த. இந்திரலிங்கம், அரியாலை —

இன்றைய உலகம் விஞ்ஞானம் மலிந்த உலகமாக விளங்குகிறது. விஞ்ஞானப் புதுமைகளினால் இன்றைய உலக மக்களின் கஷ்டங்கள் வெகு அளவு குறைந்து விட்டன. அணுவைப் பிளந்து ஆராயவும் சந்திரனுக்குச் செல்வதற்கும் போட்டி போட்டு முனைகிறார்கள் நம்முலக மக்கள். இத்தகைய காலத்திலே உலக மக்களிற்கு ஒரு களிப்பை ஊட்டுகின்ற சாதனமாகத் திரைப்படக் காட்சி விளங்குகிறது. ஆழ்கடலிலே நடப்பதையும், வான வெளியை மனிதன் 'ராக்கெட்'டிலே சுற்றி வருவதையும், நாம் சினிமாப் படங்கள் மூலமாகக் கண்டு மகிழ்கிறோம். ஆனால் அந்தத் திரைப்படக் காட்சியைக் காட்டும் கருவியைத் தயாரிக்க விஞ்ஞானிகள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் தெரியுமா? அதை நாம் அறிந்தால் திரைப் படங்காட்டும் கருவியைக் கண்டுபிடித்தவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

## கிரிச்சர்

முதன் முதலிலே, பிம்பங்களைத் திரைகளிலே பெரிய படங்களாகக் காணவேண்டுமென்ற அவா 'கிரிச்சர்' என்பவரிற்கு ஏற்பட்டது. அதன் பயனாகக் கிரிச்சர் பல காலமாக முயன்று 17ம் நூற்றாண்டிலே, அங்ஙனம் திரைகளிலே படங்களைக் காட்டக் கூடிய 'படங்காட்டி' (PROJECTOR) ஒன்றைக் கண்டு பிடித்தார். இது 'விந்தை விளக்கு' என்று கூறப்படும். ஆனால் அவரது படங்கள் ஒரே அசைவில்லாத ஓவியங்கள் போன்றே திகழ்ந்தன. ஆதலினால் மக்கள் அதைப் பார்ப்பதிலே அதிக ஆசை கொள்ளவில்லை.

## எடிசன்

கிரிச்சரிற்குப் பிற்காலத்திலே 'தாமஸ் ஆல்வா எடிசன்' என்ற விஞ்ஞானி தோன்றினார். அவர் சுமார் 2500 கருவிகளைத் தனது உடைய ஆழ்ந்த சிந்தனையினாலே கண்டுபிடித்தவர். இவர் கிரிச்சரின், அசையாத படக்காட்சி'யைப் பற்றி அறிந்தார். அவர் சிந்தனையும் செயல்திறமையும் மிக்கவுள்ளவர். ஆகையினால் சலனத் திரைப்படத்தையுங் கண்டுபிடித்துவிட வேண்டுமென 'தாமஸ் ஆல்வா எடிசன்' எண்ணங்கொண்டார். 'கலை மிகுந்த பூதக் கண்ணாடிகளை மட்டும் வைத்துக் கொண்டு நாம் சலனப்படங் காட்டியைக் கண்டுபிடித்து விட முடியாது! வேகமாகப் படம் பிடிக்கக் கூடிய படச் சுருள்களையும், காமராக்களையும் நாம் கண்டு பிடிக்க வேண்டும்' என்று எண்ணினார் தாமஸ் ஆல்வா எடிசன். கடைசியில் வெகுநாட்களாக முயன்று 'பிலிம்' (Film) என்கின்ற படச் சுருளையும், நிமிடத்திற்கு 40 படங்கள் விதம் பிடிக்கக்கூடிய காமராவையும் கண்டுபிடித்தார். அவர் தன்னுடைய ஆராய்ச்சிச் சாலையிலே, படச்சுருளிலே காட்சிகளைப் பதித்தார். அதற்கு அவரது உதவியாட்கள் தலைசிறாக நின்றும் துள்ளிக் குதித்தும் பல கோமாளி வேலைகள் செய்தனர். கடைசியிலே விடா முயற்சியின் பயனாகச் சலனப்படங் காட்டி (Movie Projector) யையும் கண்டு பிடித்தார் எடிசன். அவர் தன்னுடைய சலனப் படங் காட்டியின் மூலமாகத்திரையிலே அசைகின்ற திரைப் படத்தைக் காட்டியபோது யாவரும் வியந்தனர்.

'போனோகிராம்' என்ற ஒலிப்பதிவுக் கருவியைக் கண்டுபிடித்த எடிசன், ஒலியையுடைய அசைவுப் படத்தைத் திரையிலே காண்பிக்க எண்ணினார். அவர் படத்தைப் படச்சுருளிலும், ஒலியைக் கிராமபோனிலும் பதிக்கச் செய்து இரண்டையும் ஒன்றாக இயக்கினார். ஆனால் படச்சுருளின் வேகமும் கிராமபோனின் வேகமும் ஒத்து வராததினால் அம்முயற்சி தோல்வியடைந்தது. பின்னர் எடிசன் ஒலியையும் ஒளியையும் இணைத்த சலனப் படக் கருவியைக் கண்டு பிடித்திருந்தும், அவற்றிலிருந்த சில குறைபாடுகள் காரணமாகத் தொழில் முறையிலே அது இயங்க முடியாமற் போய்விட்டது. பொதுவாக 1927ம் ஆண்டு வரையிலே சலனப் படங்கள் ஊமைப் படங்களாகவே இயங்கின. அதன் பின்னரே பல அறிவியலாரின் முயற்சியால் ஒலியுடன் கூடிய சலனப்படம் உருவாகியது.

## சலனப் படங்காட்டி

தற்போதைய சலனப் படங் காட்டியும் (Sound Movie Projector) சலனப் படம் பிடிக்கும் காமராவும் ஒரே முறையிலே இயங்குகின்றன. சலனப் படங்காட்டும் கருவியிலே படச்சுருளிற்கும் ஒளி விளக்கிற்கும் இடையே ஒரு திறப்பு மூடியுண்டு. படச்சுருளை பற்கள் போன்ற முனைகளையுடைய ஒரு சக்கரம் வேகமாகப் படச்சுருளின் அருகிலிருக்கும் துவாரங்களிலே கொழுவிப் படச்சுருளைக் கீழ் நோக்கித் தள்ளுகின்றது. படச்சுருளிலிருக்கும் ஒரு படம் கீழே செல்லும் விநாடி, திறப்புமூடி ஒருமுறை மூடித் திறக்கிறது. இந்த ஒன்றிய இயக்கத்தினாலேயே திரைப் படம் நம் கண்களிற்கு இயற்கை அசைவுள்ள படமாகத் தோன்றுகிறது. நம்முடைய கண்கள், நாம் பார்க்கும் பொருட்கள் உடனே மறைந்தாலும் அவற்றைத் தொடர்ந்து இன்னும் ஒரு விநாடி நேரம் ஞாபகமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இங்ஙனம் ஒரு படம் மறைந்த ஒருவிநாடி நேரத்திற்குள்ளாகவே மறுபடமும் தோன்றுவதால் நம் கண்களிற்கு அவை ஒரே படமாகத் தோன்றுகிறது.

கீழ் நோக்கிச் செல்லும் படச்சுருளின் ஒரு பக்கத்திலே மெல்லிய கோடுகளாக ஒலி பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன் மீது மிகப் பிரகாசமான ஒளி பாய்ச்சப்படுகிறது. இந்த ஒலி ரேகைகளின் ஊடாகச் செல்லும் ஒளிக் கதிர்கள் ஒளி மின்கலம் என்னும் கருவியின் மீது பாய்கிறது. ஒளி மின்கலம் ஒளியை மின்னலைகளாக மாற்றுஞ் சக்தியாய்ந்தது. இது ஒலிப்பதிவு ரேகையினூடாக வரும் ஒளிக்கதிர்களை அவற்றின் மாறுதல்களிற்கேற்ப மின்னலைகளாக மாற்றி ஒலி பெருக்கி (அம்பிளிபயர்)க்கு அனுப்புகிறது. அங்கே மின்னலைகள் ஒலியலைகளாக மாறி நம் காதுகளை அடைகின்றன. மின் ... ஒலி பெருக்கி (Sound Amplifier)

## சின்ன வயதில்...(15)

-'சிந்தனைச்செல்வி', ஏழாலை-

இரவு வேளைகளில் தந்தை மனைவிக்குப் பல அரபுக் கதைகளைப் படித்துக் காட்டுவார். இச் சிறுவனோ தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டு தந்தையின் கதைகளைச் செவிமடுப்பான். நாட் செல்லச் செல்லப் பையனின் உள்ளத்தில் கதை எழுத வேண்டுமென்ற எண்ணம் பெருமலையாய் எழுந்தது. ஒரு நாள் அந்நாட்டு இளவரசரைப் பேட்டிகாணச் சென்ற சிறுவன் ஆடினான், பாடினான். இளவரசர் மகிழ்ந்து, அவனுக்கு என்ன தேவை என்று கேட்டார். அவன் "நான் நாடகங்கள் எழுதவும் அரசாங்க மேடைகளில் அதை அரங்கேற்றிப் பார்க்கவும் ஆசைப்படுகிறேன்" என்றான். இளவரசர் அவனை உற்று நோக்கினார். குடமிளகாய் மூக்கு, பரிதாபமான விழிகள், இளைத்த உடல் இவற்றுடன் கூடிய சிறுவனைப் பார்த்துச் சிரித்தார். சிரித்து விட்டு "தம்பி! நாடகம் ஒரு கலை. அதை மேடையேற்றி நடிக்கச் செய்வது மற்றொன்று. நீ உருப்படியாய் ஏதும் பிழைக்கும் வழியைப் பார். தச்சு வேலையைக் கற்றுக் கொள்" என்றார்.

பையன் வீட்டுக்கு ஓடினான். அவன் உள்ளம் தன் ஆசைக் கனவை நிறைவேற்றத் துடித்தது. தனது உண்டியை உடைத்துச் சிதறிய பணத்தைப் பொறுக்கிக் கொண்டான். "அம்மா! நான் அதிர்ஷ்டத்தைத் தேடிப் போகிறேன்," என்று கிளம்பி விட்டான். ஏமாற்றத்துடன் கிளம்பிய சிறுவன், எப்படியோ தன் நினைவைச் செயல்படுத்திப் பூரண வெற்றியும் கண்டான்.

உலகத்துக் குழந்தைகளையெல்லாம் மகிழ்ச்சியில் மூழ்க வைக்கும் இறவாக்கதைகளை உருவாக்கி சிறந்த பேறுமன்னர்களில் ஒருவர் எனப் பெயர் பெற்ற இவர்; ஒரு பூட்ஸ் தைத்து விற்கும் ஏழைத் தொழிலாளியின் மகன்தான். இவரை நீங்கள் அறியாமல் இருக்க முடியாது.

இவர்தான் ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்ஸன்— புகழ் பெற்ற குழந்தை எழுத்தாளர்.

# புதுமைகள் பாரீர் பாரினிலே - (14)

—அன்ரனி பெர்னாண்டோ, கிரிலப்பனை—

## பால் பெருகும் மகாவலி கங்கை!

பண்டைக்காலத்தில் அந்தி மாலைச் சிறப்பை விளக்கும் 'அன்னச் சேவல் அயர்ந்துவினை யாடிய...' என்னும் பாடல் பலருக்குத் தெரியும். இந்தப் பாடலில், மாலையில் தொழுவத்தை நோக்கிக் கறவைப் பசுக்கள் செல்லும் போது கிளம்பும் புழுதிப் படலத்தை அப்பசுக்களின் மடியிலிருந்து ஒழுகும் தீம்பால் நனைத்து ஒழித்துவிடும் காட்சியைச் சித்தலைச் சாத்தனார் அழகாக விளக்குகிறார்.

இதுபோல் பால் பெருகும் பசுக்களை இக் காலத்தில் நமது நாட்டில் காண்பது அரிதாகிவிட்டது. பாலுள்ள பசுக்கள் ஒன்றையும் விட்டுவைக்காது உள்ள பால் எல்லாவற்றையும் கொஞ்சமும்விடாது கறந்து பால் பண்ணையில் கொண்டுபோய் ஊற்றப்படுவதே இதற்குக் காரணம் எனலாம்.

பசுக்களின் மடியிலிருந்து பால் பெருகாது போனாலும், நமது மகாவலி கங்கை ஆற்றிலே பால் பெருகும் காட்சியைத் தினமும் கண்டியருகே இருக்கும் குண்டசாலைப் பண்ணையில் உள்ள பால் பதனிடும் நிலையத்திற்கு அருகில் காண முடியும். கொஞ்ச நஞ்சமல்ல, தினமும் சுமார் 3000 போத்தல் பசுப்பாலை அந்த நிலையம் குழாய் மூலமாக ஆற்றினுள் அனுப்புகிறதாம்.

ஒருவருக்குச் சாதாரணமாக 20 அவுன்ஸ் பால் தேவை. வெளிநாடுகளில் 20க்கு மேல் 40 அவுன்ஸ் வரை பால் கிடைப்பதாகத் தெரிகிறது. அமெரிக்காவில் இப்படி மேலதிகமாக உள்ள பாலைத்தான் மாலாக்கிப் பால் குறைய உள்ள நாடுகளுக்கு இலவசமாகக் கொடுத்து உதவுகின்றனர். அமெரிக்கா கொடுக்கும் பாலைத்தான் நமது பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் பருகுகின்றனர்.

மகாவலி கங்கையில் பால் பெருகும் போது நமக்கெதற்கு அமெரிக்கப் பால் மா என்றுதானே யோசிக்கிறீர்கள்? குண்டசாலைப் பண்ணையில் சேரும் பால் கண்டியில் விற்கப்பட்ட பின் மிகுதி கொழும்புக்கு அனுப்பப்பட்டு வந்தது. இப்பொழுதெல்லாம் கொழும்பில் இந்தப் பாலுக்குக் கிராக்கி குறைந்துவிட்டது. எனவே, தான் மிகுதியாகும் பாலில் உள்ள ஆடையை எடுத்துக் கொண்டு பாலை ஆற்றில் கொட்டுகின்றனர்—நாட்டின் தேவைக்கு அதிகம் பால் இருப்பதால் அல்ல.

# வண்ணாத்தி

—(மூதூர் ராஸிக்)—

வண்ண வண்ண வண்ணாத்தி
வானத்திலே பறக்குதாம்
சின்னச் சின்னச் சிறகதை
சிலுப்பிக்கொண்டு பறக்குதாம்!

உண்ணத் தேனைத் தேடியே
உலகமெல்லாம் சுற்றுதாம்
சின்னச் சின்ன மலர்களில்
சிந்தும் தேனை உண்ணுதாம்!

கண்ணால் கண்டால் சிறுவர்கள்
பின்னால் சென்று பிடிப்பராம்
நூலிற் கட்டி அதையுமே
மேலே பறக்க விடுவராம்!

கோலமிக்க வண்ணாத்தி
காலங் கண்டு பறக்குமாம்
சாலை தோறும் சிறுவர்கள்
வேலையற்று அலைவராம்!

கண்ணைப் பறிக்கும் அழகிலே
தன்னை மறந்து சிறுவர்கள்
உன்னையடித்துக் கொல்வதை
என்னால் பொறுக்கமுடியலலே!

ஆகும். இங்ஙனம் ஒலியும் படமும் ஒரே படச்சுருளிலிருந்து ஒரே சமயத்திலே உண்டாக முடிகிறது. இங்ஙனமே தற்போதைய சலனப் படங்காட்டிகளியங்குகின்றன.

## வால்ட் டிஸ்னி

இன்றையப் படக் காட்சி குழந்தைகளை மகிழ்விக்கவும் பயன்படுகின்றது. 'வால்ட் டிஸ்னி' (WaltDisney) என்ற ஒருவரும் தன் கைகளினாலே வரைந்த சலனப் படங்களைக் குழந்தைகளிற்காகத் தயாரித்துத் திரையிட்டு மகிழ்விக்கிறார். மேல் நாடுகளிலே தொலைக் காட்சி (டெலிவிஷன்) மூலமாகவும் சலனப் படம் திரையிடப்படுகிறது. இங்ஙனம் இன்றைய மக்களிற்குப் படக் காட்சி அளிக்கும் மகிழ்ச்சி அளப்பரியதாகும்.

# அறிவுத் துளிர்

ஒருவனொருவன் அளவுக்கு மீறி தன்னைப்பற்றிப் பேசிக் கொள்கிறானே, நிச்சயமாக அவன் தன் குற்றங்களை மறைக்கிறான்.

—நியட்சே

சட்டங்கள் ஏழைகளை வருத்தும்; செல்வர்களைத் தீண்டாது. அவற்றை இயக்குகிறவர்கள் அவர்களே.

—கோல்ட்ஸ்மித்

சண்டை தனக்குள் ஆரம்பிக்கும் பொழுது தான், மனிதன் ஏதோ சிறிதேனும் மதிப்புடையவனாகிறான்.

—பிரௌனிங்

தன்னையடக்கப் பழகிக் கொண்டவன், புறத்தேயுள்ள எதற்கும் வசப்பட மாட்டான். அத்தகையவனே நன்கு வாழத்தகுதியுள்ளவன்.

—விவேகானந்தர்

வாயில் இனிப்பவை வயிற்றில் புளிக்கும்.

—ஷேக்ஸ்பியர்

எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறோம் என்பதை நினைத்து மகிழ்கிறவர்கள் பயந்தாங் கொள்ளிகள்.

—காந்தி

எவ்வளவு சிறியனவற்றையும் அற்பம் என்று எண்ணாதே. விநாடிகள் பெருகிய ஆண்டுகளாயின. சிறிய முயற்சிகளும் பெரிய வாழ்க்கைக்கு ஏதுவாகும்.

—யங்

சேகரித்தவர்:
கல்முனை செல்வராசா

விரைவில்!
மாஸ்டர்
சிவலிங்கம்
எழுதும்
புதிய தொடர் கதை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## இ. தி. மு. க பொதுக் குழு மாநாடு

இலங்கைத் திராவிடர் முன்னேற்றக் கழக பொதுக் குழு கூட்டமும், பொதுச் செயலாளர் தேர்வும் சனி, ஞாயிறு 18, 19 ஆகிய தினங்களில் கொழும்பு, லேயார்ட்ஸ் புரோட்வேயிலுள்ள பூபதி நிலையத்தில் நடைபெற்றது.

சனிக்கிழமை நடைபெற்ற பெதுக் குழுவிற்கு திரு. மு. அ. வேலழகன் தலைமை வகித்தார். இ. தி. மு. க. வின் பெயரை மாற்றியமைப்பது பற்றி கமிட்டி நிலையில் விவாதிக்கப்பட்டது.

19ம் திகதி நிகழ்ச்சிகளுக்கு பெரியார் திரு. ஏ. எஸ். ஜோன் தலைமை வகித்து தேர்தலை நடத்தினார்.

திரு. வேலழகன் நடப்பு வருட பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அடுத்து தலைமைக் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அமைப்புச் செயலாளர்: திரு. ஏ. எல். செல்வராசன், துணை: திரு. எஸ். மயில்வாகனம்.

தலைமை நிலைய நிர்வாகி: திரு. மலைத்தம்பி, துணை: திரு. ஏ. நாதன்.

பிரசாரக் குழுத் தலைவர்: திரு. ப. இசை நாவரசன்.

பொருளாளர்: திரு. பா. செல்வ, துணை: திரு. க. தமிழ் மாறன்.

செயற்குழு அங்கத்தவர்கள்: பெரியார். ஏ. எஸ். ஜோன், ஏ. இளஞ்செழியன், குறட் செல்வன் குமாரசாமி அழகர் கே. ஆறுமுகம், மு. இரத்தினம், இரா. சந்திரன், பி, பரமநாதன்.

தீர்மானங்கள்: 'வடக்கு, கிழக்கு முதலிய தமிழ்மாகாணங்களுக்கும், மலையகப் பகுதிக்கும் சிங்கள ஆசிரியர்களை அனுப்பி பலாத்காரமாக சிங்கள மொழியை திணிப்பதை எம் இயக்கம் தீவிரமாக எதிர்ப்பதுடன் உடனே இம் முயற்சியைக் கைவிடும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றது'.

'ஈழநாட்டிலே தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி தம் அதிகாரப் பலத்தால் விரட்டி விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கும் ஆட்சியினரின் போக்கை வன்மையாகக் கண்டிப்பதுடன், தமிழர் தம் இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக நடாத்தும், நியாயமான உரிமைப் போராட்டங்களை முறியடிக்கு முகமாக, இராணுவத்தினரை அனுப்பி, காடைத்தனம் விளைவிக்க வைப்பது ஜனநாயகப் பண்பல்ல என்பதோடு அவர்களை உடனே வாபஸ் பெறச் செய்யக் கோருவதோடு அப்படிச் செய்யாவிட்டால் அவர்களை வட, கிழக்கிலிருந்து அப்புறப்படுத்தும் முயற்சிகளில் எம் இயக்கம் தீவிரமாக ஈடுபடும் என்பதை ஆட்சியினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.'

## சிங்கள ஆசிரியர் வருகைக்கு எதிர்ப்பு

### சங்கானை இ. மு. வா. சங்கக் கூட்டம்

'நாம் இன்று அனேக இன்னல்களுக்குள்ளாகி வாழும் இன மக்களாக இருக்கின்றோம். ஆகவே இவற்றிலிருந்து விடுதலையடையவேண்டுமாயின் நமது மொழி, கலை, கலாச்சாரம் முதலிய வற்றைப் பேணி வளர்க்க வேண்டும். மேலும். இவைகளைச் செய்வதற்கு நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் வாலிபர் சங்கங்கள் தோன்ற வேண்டும். அவற்றின் மூலமே இதனைச் செய்ய முடியும். தமிழ் மக்களின் மொழிப் பற்றை மற்றவர்களுக்கு விளக்க வேண்டுமாயின், நமது நாட்டுக்கு வரவிருக்கும் 2000 சிங்கள ஆசிரியர்களின் வருகையை நமது சங்கம் வன்மையாகக்கண்டித்து ஆட்சேபனை தெரிவிப்பது போன்று மற்றைய சங்கங்களும் செய்ய வேண்டும்.'

இவ்வாறு சங்கானை இந்து முற்போக்கு வாலிபர் சங்க மாதாந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய தலைவர் திரு. கா. சுந்தரலிங்கம் கூறினர்.

---

## உளப்பனை அ. மு. க. பாடசாலையில் மீலாத் தின விழா

திரு நபி ஜனன தின விழா உளப்பனை அ. மு. க. பாடசாலையில் ஆசிரியர்—மாணவர்களால் வெகு விமரிசையாக 22-7-64ல் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் பெருந்தொகையான பெற்றோர்கள் சமூகம் அளித்தனர். மேற்படி விழாவுக்கு மௌலவி எம். அபூதாஹிர் லெவ்வை தலைமை தாங்கினர். பின்வரும் விடயங்கள் மாணவ-மாணவிகளால் நிகழ்த்தப்பெற்றன.

லெதிபாபீபி: நபிநாயகத்தின் இறுதிப் பிரசங்கம்.

அபால் தீன்: மிஃறுஜ்.

ஆயிஷா பீபி: தொழுகை.

முஸம்மில் உம்மா: நாயக வாழ்க்கை.

ஜெஸுரு பீபி: மன்னிக்கும் மனப்பான்மை.

ஹனியா: திருக்குர் ஆன்.

தெய்வானை: வழிகாட்டிய வள்ளல்நபி.

தாஹிறு உம்மா: தாயிபு மக்களும் நாயகரும்.

மீரா சாய்பு: நோன்பு.

உம்மு நஸீமா: நபிப் பட்டம்.

ருஸிக்: நபிகள் நாயகம்.

மாணவர்கள் கதாப் பிரசங்கம், மாணவர்கள் கோஷ்டி இன்னிசை விருந்து போன்றன மிகவும் கோலாகலமாக நடைபெற்றன. தலைமை ஆசிரியர் எம். எஸ். முகைதீன் நபிகள் நாயகம் இஸ்லாத்தைப் பரப்புவதற்குப் பட்ட கஷ்டத்தைப் பற்றியும், ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகிய தொழுகையை ஏற்று நடவாமைபற்றியும் கூறினர். மௌலவி இதுருஸ், ஜுருப் ஷரீப் அவர்களும் குறிப்புரையில் மீலாத் விழாவைப்பற்றிக் கூறினர்கள். தலைவர் முடிவுரையில் நபிகள் ஆற்றிய தொண்டைப்பற்றியும்விழாவின் விசேடம்பற்றியும் கூறினர். சலவத்துடன் கூட்டம் முடிவுற்றது. பின் சிற்றுண்டி யாவருக்கும் வழங்கப்பட்டது.

---

## இறத்தோட்டை அ. த. க. பாடசாலைபெற்றோர்தினம்

கடந்த 13-7-64 திங்கட்கிழமை இறத்தோட்டை அ. த. க. பாடசாலையில் நடைபெற்ற பெற்றோர் தின விழாவில் அரசாங்கக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. சந்திரசேன முனவீர பேசுகையில், 'சிங்களவர் தமிழும் தமிழர் சிங்களமும் கற்க வேண்டும்' எனக் குறிப்பிட்டார். மாத்தளை [illegible] வித்தியாதிகாரி [illegible] கெதர பேசுகையில், 'இத்தகைய விளையாட்டுப்போட்டிகள், பேச்சுப் போட்டிகள், நடன—நாடகப் போட்டிகள் மாணவர்களின் கல்வித் தராதரத்தை உயர்த்த அவசியமாகின்றன' என்று குறிப்பிட்டார். மற்றும் மாத்தளை மாவட்ட வித்தியாதரிசி திரு. எம். ஐ. எம். சாலி, திரு. யூ. எல். எம். அன்வர் (நியாயவாதி), திரு. த. சோமசுந்தரம் (நியாயதுரந்தரர்) ஆகியோரும் பேசினர். தலைமையாசிரியர் திரு. அ. வேலுப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினர்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் கலந்த இவ்விழா நிகழ்ச்சிகளைக கண்டுகளித்தற்காகப் பள்ளிச் சிறார்களின் பெற்றோர் அனைவரும் சமுகந்தந்திருந்தனர். விளையாட்டுப் போட்டிகளிலும் கதம்ப நிகழ்ச்சிகளிலும் வெற்றியீட்டிய மாணவ—மாணவிகளுக்கு வித்தியாதிகாரி அவர்கள் பரிசில்களும் நற்சான்றுப் பத்திரங்களும் வழங்கினர்கள்.

---

## பாரதி இல்லம் முதலிடம் பெற்றது

இறத்தோட்டை அ. த. க. பாடசாலையில் நிகழ்ந்த இல்ல விளையாட்டுப்போட்டிகளில் பாரதி இல்லம் முதலாமிடத்தையும், வள்ளுவர் இல்லம் இரண்டாமிடத்தையும், இளங்கோ இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன. மேற்படி விளையாட்டுகளுக்கு மத்தியஸ்தர்களாக, திரு. க. தம்பிராசா, திருமதி அ தம்பிராசா, திரு. கே. எம். எம். இஸ்மயீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

## பேச்சுப் போட்டி முடிவுகள்

விஜயகட்டுப்பொத்த மகா வித்தியாலயத் தமிழ்ப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட மாணவர்களிடையே 17-7-64ல் நடைபெற்ற பேச்சுப்போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

முதல் இடம்: செல்வி. மு. அமுர்தம் (சைவசமயவளர்ச்சிக் கழகத் தலைவர்), இரண்டாம் இடம்: செல்வி. அ. ஹைறுன் நிஷா (தமிழ்இலக்கிய கழகத் தலைவர்), மூன்றும் இடம்: செல்வன். க. பரமநாதன், (தமிழ் இலக்கிய கழகச் செயலாளர்).

திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் பிரதம நீதிபதியாகக் கடமையாற்றினர்.

---

## விபுலாநந்த நினைவுதினமும் பெற்றோர்தின விழாவும்

கல்முனை இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் கடந்த 28-7-64 செவ்வாய்க்கிழமை முத்தமிழ் வித்தகன் விபுலாநந்தர் நினைவு தின விழாவும், பெற்றோர்தின விழாவும் சிறப்பாகவும், மிகவும் கோலாகலமாகவும் நடந்தேறின. காலை சுமார் பத்துமணியளவில் அடிகளாரின் திருவுருவப்படம் தாங்கி அலங்கரிக்கப்பட்ட அழகுரதம் வீதிவலம் கொண்டுசெல்லப்பட்டது. அதைத் தொடர்ந்து பதினொருமணியளவில் உயர்திரு வணக்கத்துக்குரிய ஸ்ரீமத் நடராஜானந்தா சுவாமி அவர்கள் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டமும், பூஜையும் ஆரம் [illegible] பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் சமூகமளித்திருந்தார்கள். இவர் விபுலாநந்தரைப் பற்றி இயற்றிய பாடலைப் பாடசாலை மாணவிகள் செல்வி. நோ. இராசம்மா, செல்வி. ச பரமேஸ்வரி இருவரும் அழகுறப் பாடினர்கள். அடிகளாரைப்பற்றி சுவாமியவர்களும், புலவர் மணியவர்களும், தெள்ளிய தமிழில் கருத்துரை வழங்கினர்கள். ஈற்றிற் பூஜையுடனும் செல்வி. நோ. இராசம்மாவின் தேவார பாராயணத்துடனும் விபுலாநந்த விழா இனிது நிறைவேறியது.

பகல் ஒரு மணிக்கு விபுலாநந்தரின் நினைவாக மகேஸ்வரபூசை நடைபெற்றது. விழாவின் பிரதம அதிதிகளாக திரு. ஆறுமுகவடிவேல், வித்தியாதரிசி அ. மு. சரிபுத்தீன் இவர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்.

மாலை ஆறுமணியளவில் மூன்றுவது அம்சமான சங்கீத விழா வித்தியாதரிசி அ. மு. சரிபுத்தின் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. நடனம், கும்மி, கூத்து, நாடகம் போன்ற முத்தமிழ் நிகழ்ச்சிகளில் மாணவர்கள் பங்குபற்றித் தங்கள் திறமையை வெளிப்படுத்தினர்கள். குறிப்பாக, 'மயானம் காத்த மன்னன்' புராண நாடகமும், 'வறுமையின் கொடுமை" அபிநயப்பாடலும் சபையோரின் உள்ளங்களைக்கவர்ந்துபாராட்டுதலையும் பெற்றன. சோடனைகள் வெகு பிரமாதம். ஈற்றில் பெற்றோர் ஆசிரியர் சங்கச் சார்பில் ஆசிரியர் க.வேலுப்பிள்ளையவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவேறியது.

---

## வன்னேரிக்குளம் இ. த. அ. க. கிளை

வன்னேரிக்குளம் இ. த. அ. க கிளை 10-7-64 வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

தலைவர்: க. சிவகாருண்ணியம், துணைத்தலைவர்: க. இராமலிங்கம், செயலாளர்: க. குமாரசாமி, துணைச் செயலாளர்: இ. தம்பையா, பொருளாளர்: ஐ. கோபாலபிள்ளை.

நிர்வாகசபை உறுப்பினர்கள்: நா. தில்லையம்பலம், இ. தம்பிப்பிள்ளை, அ. நவரெத்தினம், வ. சுந்தரம், ஐ. முருகன்.

---

## தெல்தோட்டை தமிழ்ப் பாடசாலை இந்து மாமன்றம்

தெல்தோட்டை தமிழ்ப் பாடசாலை இந்து மாமன்ற 4-வது ஆண்டுவிழா டி பாடசாலையில் திரு. பி. ஆர். டி. கருப்பையாபிள்ளை அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் திரு. பஸ்தியான் லியோ அவர்கள் பாடசாலையின் அரும் பெரும் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

விழாவில் மாணவமாணவிகளின் பேச்சுப்போட்டியும், தில்லானு அராரிப்பூ நடனமும், மாணவர்களின் காவடி ஆட்டமும் பரவசமூட்டும் பக்திப் பாடல்களும், சமய நாடகமும் இடம்பெற்றன.

பேச்சுப்போட்டி மேற்பிரிவில்: செல்வி. மு. இராசலக்சுமி 'சைவமும் தமிழும், என்ற தலைப்பில் பேசி முதலாம் இடத்தையும், செல்வன். க நடேசன், 'ஆன்மாவின் ஈடேற்றம்' என்ற தலைப்பில் பேசி இரண்டாம் இடத்தையும் செல்வன் ம. சிவலிங்கம், 'பாலூட்டும் தாய்' என்ற தலைப்பில்பேசி மூன்றும் இடத்தையும் பெற்றார்கள்.

மத்தியபிரிவில்: சு. சரசுவதி, மு. தனலச்சுமி, க. கிருஷ்ணமூர்த்தியும், கீழ்ப்பிரிவில் பெ. இராமநாதன், வே. யோகாம்மாள், பெ. விசயலச்சுமி ஆகியவர்களும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடத்தைப் பெற்றுர்கள்.

---

## உடுப்பிட்டித் தமிழ்மன்ற கலைப்போட்டி

உடுப்பிட்டித் தமிழ்மன்றம் எதிர்வரும் பாரதிதினத்தையொட்டிக் கலைப்போட்டிகளை நடாத்த முன்வந்துள்ளது. இக் கலைப்போட்டியில் அனைவரும் பங்குபற்றலாம், போட்டி விபரங்கள் வருமாறு:

மேற்பிரிவு: (16 வயதுக்கு மேற்பட்டோர்).

கட்டுரை: 'பாரதியின் சுதந்திரதாகம்' (600-800 சொற்களுள்), பேச்சு: 'புரட்சிக் கவி' (10 நிமிடம்), சங்கீதம்: 10 நிமிடம்.

கீழ்ப்பிரிவு: (16 வயதுக் குட்பட்டோர்), கட்டுரை: 'மகாகவியும் சுதந்திரதாகமும்' (400-500 சொற்களுள்), பேச்சு: 'பாரதியின் நாட்டுப்பற்று' (5 நிமிடம்), சங்கீதம்: 10 நிமிடம்.

விண்ணப்பங்களும், கட்டுரைகளும் ஆகஸ்ட் மாதம் 20ம் திகதிக்கு முன், ஜே. ஜெயக்குமார், தமிழ் மன்றப் பொதுக்காரியதரிசி, கலாபடிப்பக மன்றம், கரணவாய் தெற்கு, கரவெட்டி, என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொருபோட்டிக்கும் மூன்று பரிசில்கள் வழங்கப்படும். உடுப்பிட்டித் தமிழ் மன்றம் செப்டம்பரில் நடத்தவிருக்கும் பாரதி விழாவில் பரிசில்கள் வழங்கப்படும்.

---

## மீலாத் விழா

வறக்காமுறை முஸ்லிம் வித்தியாலயத்தினுல் நடாத்தப்பட்ட வல்லன் மா நபீ (ஸல்) பிறந்த தினத்தையொட்டிய மீலாத் விழாவுக்கு, பாடசாலைத் தலைமை ஆசிரியர், வை. ஏ. அஸீஸ் தலைமை தாங்கினர்.

மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு, இல்ல மாணவ, மாணவிகளிடையே நடாத்தப்பட்ட இஸ்லாமிய பேச்சுப் போட்டியில், 'இக்பால் இல்லத்தை' சேர்ந்த செல்வன். எம். ஏ. மன்ஸாஹீர் முதலாமிடத்தை கவிகரித்துக் கொண்டார்.

விழாவில் முதலாம், இரண்டாம், மூன்றும், இடத்தை அடைந்த மாணவ, மாணவிகளுக்கு, தலைவர் பரிசில்கள் வழங்கினர்.

---

## வெள்ளைமணல் பாடசாலையில் விளையாட்டுப் போட்டி

வெள்ளைமணல் பாடசாலையின் வருடாந்த இல்லப் போட்டி சென்ற 28-7-64-ல் நடைபெற்றது. திருகோணமலை மாவட்ட வித்தியாதரிசி திரு. வி. சங்கரலிங்கம் தலைமை தாங்கினர். வித்தியாதரிசகர் திரு. ஏ. சிறீவர்த்தன பாடசாலைக் கொடியை ஏற்றி வைத்தார் மூதூர் முதல்வர் ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தாரகை, சூரியன், சந்திரன் இல்லங்களுக்கிடையே போட்டிகள் நடைபெற்றன. இறுதியில் மழையின் காரணமாகப் பரிசளிப்பு விழா ஒத்திவைக்கப்பட்டது. இவ் விளையாட்டு நிகழ்ச்சியைக் கண்டுகளிக்க ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான 3வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

இராமனும் இலக்குமணனும் ஒரே தாயின் பிள்ளைகளல்லர்.
ஆனால் அவர்களின் சகோதர பாசம்......!

பாசத்தின் தத்துவத்தை விளக்கும் உயர்ந்த திரை ஓவியமாக மிளிர்கிறது—

சிவாஜி கணேசன் அளிக்கும்

# படித்தால் மட்டும் போதுமா



நடிகர்கள்:
சிவாஜி கணேசன், சாவித்திரி, எம். ஆர். ராதா, பாலாஜி,
சகஸ்ரநாமம், ரங்கராவ், ராஜசுலோசனா, மனோரமா

பாடல்கள் : கண்ணதாசன்—இசை : விசுவநாதன்-ராமமூர்த்தி—டைரக்ஷன் : பீம்சிங்

சென்ட்ரல் (மருதானை) — ஈரோஸ் (பாமன்கடை) — ராணி (யாழ்ப்பாணம்) — ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) — ஜோதி (திருகோணமலை)

நியூஜோதி (இரத்தினபுரி) — லிபர்ட்டி (பதுளை) — சுரையா (ராகலை) — சென்ட்ரல் (பருத்தித்துறை) — ஆனந்தா (கம்பளை)



## இப்பொழுது நடைபெறுகிறது!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) — வின்ஸர் (யாழ்ப்பாணம்) — நெல்சன் (திருகோணமலை)

இம்பீரியல் (மட்டக்களப்பு) — கிங்ஸ் (பதுளை) — தாஜ்மஹால் (மாத்தளை)

அசோகன்—சந்திரகாந்தா—கன்னூம்பா—பாலையா
நாகேஷ்—மனோரமா—ஸ்ரீரஞ்சனி
முதலியோர் நடித்த

# இது சத்தியம்

பாடல்கள் : கண்ணதாசன் — இசையமைப்பு : விஸ்வநாதன் - ராமமூர்த்தி



கேபிட்டல் — 6வது வாரம்!

எம். ஜி. ராமச்சந்திரன்—தேவிகா—வீரப்பா—அசோகன் நடித்த

## ஆனந்த ஜோதி

ஸ்ரீதரின் காதலிக்க நேரமில்லை

சிரிப்பூட்டும் சித்திரம்



களிப்பூட்டும் காதல் விருந்து

சித்ராலயா அளிக்கும் ஸ்ரீதரின் காதலிக்க நேரமில்லை

முத்துராமன்—காஞ்சனா—ரவிச்சந்தர்—ராஜஸ்ரீ—நாகேஷ்—பாலையா
குமாரி சச்சு—ராகவன்—ராதாபாய்
நடிக்கும்



# காதலிக்க நேரமில்லை



முழு நீள ஈஸ்ட்மன் கலர் திரை ஓவியம்




4வது வாரமாக வெற்றி முரசு கொட்டுகிறது!

கிங்ஸ்லி
பிளாஸா - நவா
மற்றும்
சினிமாஸ் திரைகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.